


பள்ளியின் பெயர்:

மாணவரின் பெயர்:

வகுப்பு & பிரிவு :

## நமது இலக்கு 100% வெற்றி

வாழ்த்துக்களுடன்

உருவாக்கம்.

A.அலெக்சிஸ்.முதுகலை பொருளியல் ஆசிரியர்
தொன் போஸ்கோ மேனிலைப்பள்ளி
வரதராஜன்பேட்டை.அரியலூர் மாவட்டம்

www.Padasalai.Net

# வகுப்பு:11. பொருளியல் கையேடு.

A.அலெக்சிஸ், முதுகலை பொருளியல் ஆசிரியர்,தொன் போஸ்கொ மேனிலைப்பள்ளி.
வரதராஜன்பேட்டை, அரியலூர் மாவட்டம். Cell 9543776128

1. மனிதனுடைய வாழ்க்கையின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி பொருளியல் ஆராய்கிறது என்று கூறியவர் ......... **ஆல்பிரட் மார்ஷல்**
2. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை பிரச்சனை................ **பற்றாக்குறை**
3. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது ? **தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள்**
4. கீழ்கண்டவற்றில் எது நுண்ணியல் பொருளாதாரம் சார்ந்தது ?
   **கோதுமையின் விலை அதன் தேவையை தீர்மானிக்கிறது.**
5. பொருந்தா ஒன்றைக் கண்டறிக. **ஈ) மற்றவை மாறாதிருக்கும்போது**
6. சமநிலை விலை என்பது அந்த விலையில் ..........**தேவையின் அளவும் அளிப்பின் அளவும் சமம்.**
7. நாடுகளின் செல்வம் மற்றும் காரணங்களை குறித்த ஒரு விசாரணை என்ற நூலின் ஆசிரியர் **ஆடம்ஸ்மித்.**
8. விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படத்தக்க சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளை பற்றி பயில்கின்ற அறிவியலே பொருளியலாகும் என்று இலக்கணம் வகுத்தவர் **இலயனல் ராபின்ஸ்**
9. பொருளாதாரத்தின் தந்தை யார் ? **ஆடம்ஸ்மித்**
10. பொருளியல் என்பது ஒரு சமூக அறிவியல் என்று கூறுவர் ஏனெனில் **மேற்கூறிய அனைத்தும்**
11. பயன்பாடு என்பது **மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் சக்தி.**
12. அங்காடி என்பது **நபர்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருட்கள் வாங்கும் விற்கும் முறையை குறிக்கும்.**
13. எது பொருளாதார நல இலக்கணம் சார்ந்ததல்ல **பொருளாதாரம் எண்ணற்ற விருப்பங்களையும் வரையறுக்கப்பட்ட வளங்களையும் பற்றியது.**
14. வளர்ச்சி இலக்கணம் என்பது **இயங்குநிலை பொருளாதார கட்டமைப்பில் தேர்ந்தெடுப்பதில் உள்ள பிரச்சனை**
15. பொதுவாக எந்த கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியுள்ளது ? **விலைக்கோட்பாடு**
16. ............பரிமாற்ற மதிப்பை கொண்டுள்ளவை அவற்றின் உரிமையாளர் உரிமைகளை நிறுவவும் பரிமாற்றவும் முடியும் **பண்டங்கள்**
17. பயன்பாட்டின் சரியான பண்புகளை அடையாளம் காண்க **இது நுகர்வோரின் மனநிலையை சார்ந்தது.**
18. பற்றாக்குறை பொருளாதார இலக்கணத்தின் ஆசிரியர் யார் ? **இராபின்ஸ்**
19. தனிக்கருத்திலிருந்து பொதுக்கருத்து பெறும் முறை **தொகுத்தாய்வு முறை**
20. விற்பனை செய்யும் பொருட்களை எதனால் பெருக்கினால் மொத்த வருவாய் கிடைக்கும் ? **விலை**
21. முரண்பட்டதை தெரிவு செய்க **விவசாய பொருட்கள்**
22. தெரிவுகள் எப்போதும் கட்டுப்படுத்தப்பட்ட அல்லது வரையறுக்கப்பட்டவையாக இருப்பதற்கு காரணம் வளங்கள் ......இருப்பதால் **பற்றாக்குறை**
23. இயல்பெண் பயன்பாட்டு ஆய்வை வழங்கியதில் முதன்மையானவர் **மார்ஷல்**
24. கீழ்கண்ட வாய்ப்பாட்டின் மூலம் இறுதிநிலை பயன்பாட்டை அளவிடலாம் **Tun-Tun-1**
25. இறுதிநிலை பயன்பாடு பூஜ்ஜியமாக இருக்கும் போது மொத்த பயன்பாடு .... **உச்சமாக**
26. காஸன் முதல் விதி....... என்றும் அழைக்கப்படுகிறது **குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

27. கீழ்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாக கொண்டுள்ளது **குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி.**
28. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர் **மார்ஷல்**
29. தகுவிலை ரூ.250 ஆகவும் மற்றும் உண்மை விலை ரூ.200 ஆகவும் உள்ளது.நுகர்வோர் எச்சத்தை காண்க. **ரூ.50**
30. சமநோக்கு வளைகோட்டின் அடிப்படையானது **தரவசை ஆய்வு**
31. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தியவர் **மார்ஷல்**
32. கீழ்க்காணும் எவற்றால் தேவை அதிகரிக்கும் **அதிக மானியம் வழங்குவதால்**
33. கொடுக்கப்பட்ட தேவை வளைகோட்டில் நகர்ந்து செல்லுதல் கீழ்கண்டவாறு அழைக்கப்படுகிறது **தேவை விரிவு மற்றும் சுருக்கம்**
34. மிகைத்தேவை நெகிழ்ச்சி உள்ள தேவைக்கோட்டின் வடிவமானது ……. **மெதுவாக சரியும்**
35. நுகர்வோர் சமநிலையில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடானது …….இருக்கும். **சமமாக**
36. சமநோக்கு வளைகோட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர் **எட்ஜ்வொர்த்**
37. தேவை நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமமாக இருக்கும்போது ………**அலகுத்தேவை நெகிழ்ச்சி**
38. சமஅளவு திருப்தியை கொடுக்கக்கூடிய புள்ளிகளை இணைக்கும் கோடானது இதனுடன் தொடர்புடையவை **சமநோக்கு வளைகோடுகள்**
39. சாதாரண தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம் ? **தரப்படுத்துதல்**
40. சமநோக்கு வளைகோடுகள் **எதிர்மறைச் சரிவுடையது**
41. முதன்மை உற்பத்திக் காரணிகள் **நிலம் மற்றும் உழைப்பு**
42. மற்ற பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படும். மனித முயற்சியினால் உற்பத்தி செய்த பண்டங்கள் **மூலதனம்.**
43. சராசரி உற்பத்தி (TP) யைக் கணக்கிடப் பயன்படும் விகிதம் **TP/N**
44. எந்த காரணி சமுதாய மாற்றம் உருவாக்கும் முகவர் என்று அழைக்கப்படுகிறது **தொழிலமைப்போர்.**
45. தொழில் முனைவோரின் முக்கிய குணம் உறுதியற்ற தன்மையை பொறுத்துக் கொள்ளல் என்று கூறியவர் **நைட்**
46. ஒரு நிறுவனத்தின் உள்ளீடு வெளியீடுகளுக்கிடையே உள்ள இயல்பான தொடர்பை தருவது **உற்பத்தி சார்பு**
47. ஒரு நிறுவனம் 5 அலகுகள் உற்பத்திக் காரணிகளை பயன்படுத்தி 24 அலகுகளை உற்பத்தி செய்கிறது. ஒரு அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது உற்பத்தி 30 அலகுகளாக உயர்கிறது.எனில் சராசரி உற்பத்தியை கணக்கிடுக. **5**
48. குறுகிய கால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது **மாறும் விகித அளவு விளைவு விதி**
49. நீண்ட கால உற்பத்திச் சார்பு எதன் மூலம் அறியப்படுகிறது **விகித அளவு விளைவு விதி**
50. சம உற்பத்திக் கோட்டின் வேறு பெயர் **சம உற்பத்தி வளைகோடு**
51. நிறுவனத்தின் உள்ளிருந்து தோன்றும் சிக்கனத்திற்கு காரணமாக அமைவது **மேற்காணும் அனைத்தும்**
52. காப்டக்லஸ் உற்பத்தி சார்பு எதனை அடிப்படையாக கொண்டது **மாறா விகித விளைவு விதி**
53. உற்பத்திக் காரணிகளை 5 சதவீதம் அதிகரித்தால் வெளியீடு 5 சதவீதத்திற்கு மேல் அதிகரிப்பது எந்த விகித விளைவு விதியை சார்ந்தது **வளர்ந்து செல் விளைவு விகித விதி**
54. கீழ்கண்டவற்றுள் எது நிலத்தின் சிறப்பியல்பு அல்ல **இயங்கும் தன்மையுடையது**
55. ஓர் அலகு உற்பத்திக் காரணியை அதிகரிக்கும் போது கிடைக்கும் உற்பத்தி **இறுதிநிலை உற்பத்தி**
56. நவீன பொருளியல் வல்லுனர்களின் விதி **வளர்ந்து செல் விகித அளவு**
57. உற்பத்தியாளர் சமநிலையை அடையும் புள்ளி எது ? (MRTS)**ம் விலை வீதமும் சமமாக இருந்தால்**
58. பொருளின் விலைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள உறவு … **நேர்எண்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

59. சராசரி உற்பத்தி குறையும் போது இறுதிநிலை உற்பத்தி … **சராசரி உற்பத்தியை விட குறைவாக இருக்கும்..**
60. உற்பத்தி சார்பு இவற்றிற்க்கிடையே உள்ள தொடர்பை விளக்குகிறது. …**உள்ளீட்டு அளவிற்கும் வெளியீட்டு அளவிற்கும்இடையே உள்ள தொடர்பு.**
61. செலவு என்பது …**உற்பத்திச் செலவு**
62. செலவுச் சார்புகளை … சார்புகள் எனலாம். **உற்பத்தி**
63. பணச்செலவை …… செலவு என்றும் அழைக்கலாம். **வெளிப்படையான**
64. வெளியுறு செலவுகள் மற்றும் உள்ளுறு செலவுகளின் கூடுதல் …… செலவாகும். **பொருளாதார**
65. வெளியுறு செலவுகள் என்பது ….. **கையிலிருந்து செய்யும் செலவுகள்.**
66. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனத்திற்கு செய்யும் செலவு ….. **உள்ளார்ந்தச் செலவு.**
67. உற்பத்தியின் எல்லா மட்டங்களிலும் மாறாத செலவுகள் ….. **மாறாச்செலவு.**
68. சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு….. **TVC-Q**
69. ஒரு அலகு கூடுதலாக உற்பத்தி செய்வதற்கு ஆகும் செலவு ….. **இறுதிநிலை செலவு.**
70. உற்பத்திக்கு ஏற்றாற் போல் மாறும் செலவு **……** செலவு எனப்படும் **மாறும்**
71. கூலி…..செலவுக்கு எடுத்துக்காட்டாகும். **மாறும்**
72. ஒரு அலகு உற்பத்திக்கான செலவு …..செலவாகும் **சராசரி**
73. சராசரிச் செலவுக்கான வாய்ப்பாடு. **TC/Q**
74. மொத்த மாறாச் செலவு 100 மொத்த மாறும் செலவு 125 எனில் மொத்த செலவை கணக்கிடுக. **225**
75. நீண்ட கால சராசரி செலவுக் கோடு ……. கோடு என அழைக்கப்படுகிறது. **திட்ட**
76. பொருட்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம் ……. வருவாயாகும். **மொத்த**
77. ஒரு அலகு பொருளை கூடுதலாக விற்பதால் கிடைக்கும் வருவாய் ……. வருவாயாகும்.. **இறுதிநிலை**
78. இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள …. உடன் கூடுதலாக பெறுவது . **மொத்த வருவாய்**
79. விலை நிலையாக இருக்கும்போது AR கோடு MR கோட்டுக்கு ……. ஆக இருக்கும்.. **சமமாக**
80. ஒரு புத்தகம் ரூ10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார் எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய். **400.**
81. கீழ்க்கண்டவற்றுள் எந்த வகையான அங்காடியில் விலை மிக அதிகமாக இருக்கும் **நிறைவுப்போட்டி**
82. நிறுவனத்தின் சமநிலை என்பது **MC=MR**
83. கீழ்க்கண்டவற்றுள் எது முற்றுரிமைப் போட்டியின் இயல்புகள் **? பண்டவேறுபாடு**
84. முற்றுரிமை நிறுவனம் குறுகிய காலத்தில் …… பெறும். **அதிக இலாபம்**
85. கீழ்க்கண்டவற்றுள் உபரிதிறன் இல்லாதது **நிறைவுப் போட்டி**
86. எப்போது நிறுவனம் இலாபம் பெற முடியும் **? TR >TC**
87. விலையின் மற்றொரு பெயர்…… **சராசரி வருவாய்.**
88. எந்த அங்காடியில் TR மற்றும் MR சமமாகும் **…… நிறைவுப் போட்டி.**
89. முற்றுரிமையில் MR கோடு ……கோட்டிற்கு கீழிருக்கும் **AR**
90. நிறைவு போட்டி அனுமானிப்பது… **ஒத்த தன்மை பண்டம்**
91. குழுச் சமநிலை ஆராய்வது… **முற்றுரிமை போட்டி**
92. முற்றுரிமை போட்டியின் முக்கிய பண்பு… **விற்பனைச் செலவு**
93. முற்றுரிமை போட்டி… ஆகும். **நிறை குறைப் போட்டி**
94. விலை தலைமை அம்சம் கொண்டது … **சில்லோர் முற்றுரிமை**
95. விலை பேதம் காட்டுதலின் விளைவு… ஆகும். **அ மற்றும் இ**

www.Padasalai.Net A.Alexis.PGTeacher DBHSS V.Pet



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

96. முற்றுரிமைப் போட்டியின் சராசரி வருவாய் கோடு **பெருமளவு நெகிழ்ச்சியுள்ளது**
97. நிறைவுப் போட்டியில் நிறுவனத்தின் தேவைக்கோடு … **படுகிடை**
98. எந்த வகை அங்காடியில் போட்டியே இராது ? **முற்றுரிமை**
99. கீழ்கண்டவற்றுள் எந்த வகை அங்காடியில் நுகர்வோர் அதிகம் சுரண்டப்படுகிறார்கள் ? **முற்றுரிமை**
100. விற்பனை செலவிற்கு உதாரணம் … **விளம்பர செலவு**
101.பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது எதனுடன் தொடர்புடையது ? … **உற்பத்திக் காரணிகள்.**
102.பகிர்வுக் கோட்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது ? … **காரணி விலைக் கோட்பாடு.**
103.எதனைப் பயன்படுத்துவதற்கான வெகுமதியே வாரம் ஆகும் ? … **நிலம்.**
104.போலி வாரம் என்ற கருத்து யாருடன் தொடர்புடையது ? … **மார்ஷல்.**
105.தொன்மை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் யார் ? … **ரிக்கார்டோ.**
106.நிலத்தின் உண்மையானதும் அழிக்க முடியாத சக்தியும் உள்ளது என்ற கருத்தை பயன்படுத்தியவர்.. **ரிக்கார்டோ.**
107.உழைப்பாளருக்கான வெகுமதி … **கூலி.**
108.பணக்கூலியின் வேறு பெயர் … **பெயரளவுக் கூலி.**
109.எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் ? … **வாக்கர்.**
110.முதலை பயன்படுத்துவதற்கான வெகுமதி … **வட்டி.**
111.கீன்சின் வட்டிக் கோட்பாடு இவ்வாறு அழைக்கப்படுகிறது … **நீர்மை விருப்பக் கோட்பாடு.**
112.கடன் நிதி கோட்பாட்டின்படி கடன் நிதிகளின் அளிப்பு இதற்குச் சமமாகும் … **S+BC+DH+DI.**
113.எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறார்….. **முன்னெச்சரிக்கை நோக்கம்**
114.தனி நபர்களுக்கு நாட்டின் செல்வத்தை அல்லது வருமானத்தை பகிர்ந்தளிப்பதென்பது … **தனிமனிதர் பகிர்வு**
115.இலாபம் இதற்கான வெகுமதி ஆகும் … **அமைப்பு.**
116.புத்தாக்க இலாபக் கோட்பாட்டை வழங்கியவர் … **சும்பீட்டர்.**
117.போலி வாரம் இதனால் தோன்றுகிறது … **மனிதன் உருவாக்கிய உபகரணங்கள்.**
118.ஓர் உற்பத்தியாளர் ஒப்பந்தத்தின் மூலம் உழைப்பாளர் தன் பணியை வழங்கியதற்காக கொடுக்கும் மொத்த பணமே கூலியாகும்.இதைக் கூறியவார் யார் ? **… பென்ஹாம்.**
119.துய்ப்பு தவிர்ப்பு வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர் … **N.W.சீனியர்.**
120.கடன் நிதி வட்டிக் கோட்பாடானது … **புதிய தொன்மைக் கோட்பாடு.**
121. கர்நாடகத்தின் முக்கிய தங்க சுரங்க பகுதி … **கோலார்.**
122. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி அளவிடப்படுவது குறிப்பிடுவது … **GDP.**
123. கீழ்கண்டவற்றுள் எது முன்னேற்றமடைந்த நாடு ? **பிரான்ஸ்.**
124. வலுவான பொருளாதாரங்களை கொண்ட நாடுகள் வரிசையில் இந்தியாவின் இடம் … **7.**
125. கலப்பு பொருளாதாரம் என்பது … **பொது மற்றும் தனியார் துறைகள் சேர்ந்து செயல்படுவது.**
126. இந்திய பொருளாதாரம் … காரணமாக வலிமையின்மையாக இருக்கிறது. **பொருளாதார சமநிலையின்மை.**
127. மக்கள் தொகையின் இயல்புகளைப் பற்றிய அறிவியல் தியான ஆய்வு … **மக்கள் தொகையியல்.**
128. மக்கள் தொகையின் 1921–ம் வருடம் … எனப்படுகிறது. **மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு**
129. எந்த ஆண்டில் இந்திய மக்கள் தொகை 100 கோடியை தாண்டியது …. **2001.**
130. 1000 மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது …… **கச்சா இறப்பு வீதம்.**
131. 1000 மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது **கச்சா பிறப்பு வீதம்.**
132. மக்கள் தொகை அடர்த்தி என்பது **மக்கள் தொகை / குறிப்பிட்ட நில அளவு.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

133. தேசிய வளர்ச்சி கழகத்தை அறிமுகப்படுத்தியவர் யார்? **ஜவஹர்லால் நேரு.**
134. .காந்திய பொருளாதார சிந்தனைகளை தொடர்ந்து வலியுறுத்தியவர் யார்? **J.C.குமாரப்பா.**
135. ஜனநாயக சமதர்மத்தை கொண்டுவந்தவர் **ஜவஹர்லால் நேரு.**
136. B.R அம்பேத்கார் இந்திய இந்தியப் பொருளாதாரப் பிரச்சனைகளை இதன் அடிப்படையில் ஆராய்கிறார். **இந்திய ரூபாயின் சிக்கல்கள்.**
137. இந்த கொள்கையின் அடிப்படையில் காந்தியப் பொருளாதாரம் இயங்குகிறது. **ஒழுக்க நெறி அடிப்படை.**
138. V.K.R.V.இராவ் இவரின் மாணவராக இருந்தவர் …. **J.M.கீன்ஸ்.**
139. பொருளாதாரத்திற்கான நோபல் பரிசை அமர்த்தியா சென் பெற்ற ஆண்டு….**1998.**
140. திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் குறிப்பாகக் கூறுவது … **மேற்காண் அனைத்தும்.**
141. இந்தியாவின் கள்ளிக்கோட்டைக்கு வாஸ்கோடகாமா வருகை புரிந்த வருடம்….**1498**
142. 1964–ல் தாமஸ்ரோ யாரிடம் அனுமதி பெறுவதில் வெற்றி பெற்றார்?… .**ஜஹாங்கீர்**
143. இந்தியாவை ஆளும் உரிமை கிழக்கிந்திய கம்பெனியிடமிருந்து ஆங்கிலேய அரசுக்கு மாற்றப்பட்ட ஆண்டு **1858.**
144. இரயத்துவாரி முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட இடம் ….. **தமிழ்நாடு**
145. முதலாம் உலகப்போர் தொடங்கப்பட்ட ஆண்டு …**1914.**
146. இந்திய அரசாங்கம் தனது முதல் தொழிற்கொள்கையை வெளியிட்ட ஆண்டு …**1948.**
147. 1956–ன் தொழிற்கொள்கையின் நோக்கம் …**பெரிய நிறுவனங்களை முன்னேற்றுவது.**
148. 1993–ல் முன் பதிவு நீக்கப்பட்ட தொழில்துறை …**செம்பு மற்றும் சிங்க் சுரங்கத் தொழில்.**
149. இந்தியாவின் பசுமைப்புரட்சியின் தந்தை என்றழைக்கப்படுபவர்…… **M.S.சுவாமிநாதன்.**
150. 1969–ல் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை ….. **14.**
151. வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் …**சமூக நலம்.**
152. திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு ….. **1950.**
153. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதன்மையான நோக்கம் ….. **வேளாண்மை.**
154. பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலம் ….. **2002–2007.**
155. 2016–ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சி அறிக்கையின் படி 188 நாடுகளில் இந்தியாவின் தரம் ….. **131.**
156. வருடாந்திரத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்ட ஆண்டு ….. **1990–1992.**
157. இந்தியாவின் மிகப்பழமையான பெரிய அளவிலான தொழில் ….. **பருத்தி.**
158. மனித மேம்பாட்டுக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர் ….. **அமர்த்தியா குமார் சென்.**
159. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ….. **விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி.**
160. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கம் ….. **விரைவான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சி.**
161. கீழ்க்கண்டவற்றுள் எது தனியார்மயமாதலை குறிக்கும் **இவை அனைத்தும்.**
162. இன்றைய நாட்களில் வளர்ச்சிக்காக ஒவ்வொரு நாடும்………… இருக்க வேண்டும். **ஒன்றையொன்று சார்ந்து**
163. LPG–க்கு எதிரான வாதம்…………**மக்கள் மற்றும் மண்டலங்களிலேயே ஏற்றத்தாழ்வு.**
164. FPI என்பதன் விரிவாக்கம்…………**வெளிநாட்டு நேரடி முதலீடு.**
165. உலக அளவில் இந்தியா…… உற்பத்தியில் மிகப் பொய உற்பத்தியாளராக விளங்குகின்றது. **பழங்கள்**
166. வெளிநாட்டு முதலீடு …. உள்ளடக்கியது. **FDI மற்றும். FPI .**
167. சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை ……….. வெளியிடப்பட்டது. **ஏப்ரல் 2000–ல்**
168. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ……….. ஆகும். **சட்டப்படியான குழு.**

www.Padasalai.Net A.Alexis PG Teacher DBHSS,Vi.Pet



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

169. பண்டங்கள் மற்றும் பணிகள் மீதான வரி என்பது ……….. **ஒரு முனை வரி மற்றும் அடுக்கு விளைவுகளற்றது.**

170. புதிய வெளிநாட்டு வர்த்தக கொள்கை ……….. ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. **2015.**

171. நிதித்துறை சீர்திருத்தங்கள் முக்கியமாக ……….. துறைக்கானது. **ஆ மற்றும் ஆ.**

172. பண்டங்கள் மற்றும் பணிகள் வரிச் சட்டம் ……….. அமல்படுத்தப்பட்டது. **2017 ஜீலை 1 ஆம் நாள்**

173.புதிய பொருளாதாரக் கொள்கை கீழ்கண்டவற்றுள்எதனை உள்ளடக்கியது ? **இவை அனைத்தும்**

174. வர்த்தக கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத் தீர்வை……… ஆகும். **50%**

175. வர்த்தக கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத் தீர்வை……… ஆகும். **50%**

176. வர்த்தக கொள்கை சீர்திருத்தங்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட ராஜா செல்லையா குழுவின் பரிந்துரைப்படி அதிகபட்ச இறக்குமதி சுங்கத் தீர்வை……… ஆகும். **50%**

177. இந்தியாவில் முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் ……. ஏற்படுத்தப்பட்டது. **காண்ட்லா**

178. ராஜ்கிருஷ்ணாவால் வார்க்கப்பட்ட "இந்து வளர்ச்சி வீதம்" என்பது ……. குறிக்கும். **குறைவான பொருளாதார வளர்ச்சியை**

179. GST–ல் அதிகபட்ச வரி விதிப்பு ……. ஆகும் (ஜீலை1. 2017–நாளின்படி) **28%**

180. தொழில் உடைமையை பொதுத்துறையிலிருந்து தனியார் துறைக்கு மாற்றுவது…….எனப்படும். **தனியார்மயமாக்கல்.**

181.எனது ஊரக பகுதியின் அடிப்படை அலகாகக் கருதப்படுவது …… **வருவாய் கிராமம்**

182.எது ஊரக பகுதியை கண்டறியும் பண்பு …… **குறைந்த மக்கள் தொகை அடர்த்தி**

183.ஊரக பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு **வேளாண்மையைச் சார்ந்திருத்தல்**

184.2011 கணக்கெடுப்பின் மொத்த மக்கள் தொகையில் ஊரகத்தில் வாழும் மக்கள் தொகை சதவீதம் என்ன ? **60**

185.தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் நிலைமை …… **மறைமுக வேலையின்மை**

186.இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளை தொடர்புபடுத்தி குறிப்பது …… **இரட்டைத்தன்மை**

187.ஊரகப்பகுதி ஊரக மக்கள் மற்றும் ஊரக வாழ்க்கையை மேம்படுத்துதல் என்பது …… **ஊரக மேம்பாடு.**

188.ஊரக பொருளாதாரத்தின் வேளாண்மை பிரச்சினைக்குத் தொடர்புடையதாக கருதப்படுவது … **சிறிய அளவு நில உடைமை.**

189.ஊரக பகுதியில் ஒரு மனிதன் எடுத்துக் கொள்ள வேண்டிய கலோரி அளவு …… **2400.**

190.ஊரக ஏழ்மைக்கான காரணத்தை சுட்டுக …… **வேளாண்மை சாரா வேலையின்மை.**

191.மறைந்திருக்கும் வேலையின்மைக்கு மற்றொரு பெயர் என்ன ? …… **மறைமுக.**

192.குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் வேலைவாய்ப்புப் பெறுவதை எப்படிக் கருதுவது ? …… **பருவகால வேலைவாய்ப்பு.**

193.ஊரக தொழிற்சாலைக்கான உதாரணம் தருக …… **பாய் தயாரிக்கும் தொழில்.**

194.இந்தியாவில் உள்ள ஊரக குடும்பங்களில் கடனாளிகளின் பங்கு எவ்வளவு ? … **நான்கில் மூன்று பங்கு.**

195.இந்தியாவில் ஊரக கடனுக்கு காரணமாக கருதப்படுவது …… **ஏழ்மை.**

196.எந்த வருடம் வட்டார ஊரக வங்கி பயன்பாட்டிற்கு வந்தது ? …… **1975.**

197.MUDRA வங்கி அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக …… **2015.**

198.தேசிய ஊரக சுகாதாரப்பணி அமுல்படுத்தப்பட்ட ஆண்டை குறிப்பிடுக…… **2005.**

199.ஊரகச் சாலையின் பயன்பாடாக கருதப்படுவது…… **மேற்கண்ட அனைத்தும்.**

A.Alexis PG Teacher DBHSS Vpet www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

200.``இந்திய விவசாயி கடனாளியாக பிறந்து கடனாளியாக வாழ்ந்து கடனாளியாக இறந்து கடனையே சந்ததிக்கும் விட்டுச் செல்கிறான். இச் சொற்றொடரைக் கூறியவர் யார் ?...... **சர் மால்கம் டார்லிங்.**

201.சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு மேலாக உள்ளது **குஜராத்.**

202.பாலின விகிதத்தில் தமிழ்நாட்டின் தரம் **மூன்றாவது.**

203.தமிழ்நாடு எதில் வளமானது ? **மனித வளம்.**

204.நீர்ப்பாசனத்தின் முக்கிய ஆதாரம் **கிணறுகள்**

205.பின்னலாடை உற்பத்தி அதிகமாக உள்ள இடம் **திருப்பூர்**

206.கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது ? **வீட்டு ஜவுளி தயாரிப்பு–ஈரோடு**

207.கீழுள்ள நகரங்களில் எதில் சர்வதேச விமான நிலையம் இல்லை ? **தூத்துக்குடி.**

208.பயிர் உற்பத்தியில் எந்தப் பயிரைத் தவிர தமிழ்நாடு முன்னனியில் உள்ளது ? **ஏலக்காய்.**

209எந்த பயிர் உற்பத்தியில் அதிக பரப்பு நிலம் பயன்படுத்தப்படுகிறது ? **நெல்.**

210.எழுத்தறிவு வீதத்தில் தமிழ்நாட்டின் தரம் **எட்டு.**

211.குறு சிறு நடுத்தர நிறுவனங்களுக்கான முதலீட்டில் தமிழ்நாட்டின் தரம் **1.**

212.தமிழ்நாட்டின் எம்மாவட்டத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது ? **நீலகிரி.**

213.எம்மாவட்டத்தில் குழந்தைப் பாலின விகிதம் அதிகமாக உள்ளது ? **அரியலூர்.**

214.எந்த யூனியன் பிரதேசத்தில் பாலின விகிதம் அதிகமாக உள்ளது ? **பாண்டிச்சேரி.**

215.தமிழ்நாட்டு உள்நாட்டு உற்பத்தியில் அதிக பங்கு வகிப்பது ? **பணிகள்.**

216.மனித வளர்ச்சிக் குறியீட்டில் தமிழ்நாட்டின் தரம் **3.**

217.SPIC அமைந்துள்ள இடம் **தூத்துக்குடி.**

218.TICL ன் பகுதி **உயிரி பூங்கா.**

219.சிமெண்ட் உற்பத்தியில் தமிழ்நாடு இந்தியாவில் எந்த நிலையில் உள்ளது ? **மூன்றாம்.**

220.தென்னக இரயில்வேயின் தலைமையிடம் **சென்னை.**

221. .....இவற்றின் ஒருங்கிணைப்பே கணிதவியல் பொருளாதாரம் எனப்படும் **கணிதம் மற்றும் பொருளாதாரம்**

222.தேவைக் கோடு அல்லது அளிப்புக் கோடு வரைவதில் ............பயன்படுத்தப்படுகின்றது. **பகுமுறை வடிவியல்.**

223.பொருளியலில் கணிதத்தை முதன்முதலாக பயன்படுத்தியவர் ............ **ஜியோவானி செவா.**

224.ஒரு சாராத மாறியுடன் கூடிய சார்பு ............ எனப்படுகின்றது **ஒரு மாறிச் சார்பு.**

225.இரு அளவுகளுக்கு இடையே சமநிலை என்ற சொற்றொடர்............ குறிக்கின்றது. **சமன்பாட்டை .**

226.சாராத மாறியின் மதிப்பில் ஏற்படும் மாற்றம் காரணமாக சார்ந்த மாறியின் மதிப்பில் ஏற்படும் கூடுதல் முறை மாற்றம் ............ எனப்படும். **சாய்வு விகிதம்.**

227.$(y-y_1)=m(x-x_1)$ என்பது ........ குறிக்கும். **நேர்கோட்டை.**

228.D=150–5P எனக்கொள்க.D=0 எனில் p–ன் மதிப்பு ? **P=10**

229.D=150–5P எனில் சாய்வு ......... ஆகும் **– 50**

230.ஒரு அணியின் அணிக்கோவை மதிப்பு $\Delta=0$ என்றால் அச்சார்புகளுக்கு தீர்வு.........**கிடையாது.**

231.நிலை நிற்கும் புள்ளி ............ எனப்படும் **சமநிலை.**

232.நிலையான மதிப்பின் வகையீட்டுக்கெழு மதிப்பு ............ ஆகும் **சுழியம்**

233.$X^n$ என்பதன் வகையீட்டுக்கெழு ............ ஆகும். **nx ( x-1)**

234.கணித முறையில் வெளிப்படுத்தப்பட்ட மொத்த செலவுச் சார்பில் நிலையான செலவு ............ உறுப்பால் குறிப்பிடப்படும். **நிலையான மதிப்பு.**

235.மொத்த வருவாய்ச் சார்பின் முதல் வகையீடு ............ ஆகும் **இறுதிநிலை வருவாய்.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

236.தேவை நெகிழ்ச்சி …உள்ள விகிதம் ஆகும் **இறுதிநிலை தேவைச் சார்பிற்கும் சராசரி தேவைச் சார்பிற்கும்**

237. x+y=5,x-y=3 என்றால் ஒ–ன் மதிப்பு ………… ஆகும் **4.**

238.தொகையீடு என்பது ………… என்பதின் தலைகீழ் செயல்பாடாகும். **வகையீடு.**

239.Data processing …………ல் மேற்கொள்ளப்படுகின்றது **pc மற்றும் கணக்கீடு கருவி**

240.Ctrl+M என்ற ஆணை ………… பயன்படுத்தப்படுகின்றது **புதிய நழுமத்தைப் பெற.**

## பாடம் 1.

## இரண்டு மதிப்பெண்கள் வினாக்கள்

**1. பொருளியல் என்றால் என்ன ?**

பொருளியல், ஆய்க்னோமிக்ஸ் என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. பொருளியல் என்றால் இல்லங்களின் நிர்வாகமென்று பொருள்படும்.

**2. நுண் பொருளியல் என்றால் என்ன ?**

நுண்ணியல் பொருளாதாரம் தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனிக் குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது.

**3. பண்டங்கள் என்றால் என்ன ?**

பொருளியலில் பண்டங்கள் என்பது பண்டங்கள் மற்றும் பணிகளைக் குறிக்கும். பண்டங்கள் தொட்டுணரக் கூடியது, .மாற்றக் கூடியது. பரிமாற்ற மதிப்பு உடையது.

**4. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.**

பணிகள் என்பது உளவியல் அடிப்படையில் உணரக்கூடியவைகள், ஆனால் பண்டங்கள் தொட்டுணரக் கூடியது மாற்றக் கூடியது. பரிமாற்ற மதிப்பு உடையது.

**5. பயன்பாட்டின் ஏதேனும் இரண்டு வகைகளைக் கூறுக.**

1. இடப்பயன்பாடு 2. காலப்பயன்பாடு

**6. இயல்புரை அறிவியல் என்றால் என்ன ? OR இயல்புரை அறிவியலின் இலக்கணத்தை வரையறுக்க. ?**

இது உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவுத் தொகுதி ஆகும். இது பொருளியல் கோட்பாடுகளை விளக்க முயற்சிக்கிறது.

**7. பகுத்தாய்வின் பொருள்கூறுக ?**

பகுத்தாய்வு முறை இது பகுத்தறியும் முறை. இது பொதுக் கருத்திலிருந்து தனிக் கருத்தைப் பெறுவது ஆகும். மால்தஸ், மார்ஷல், பிகு, ரிக்கார்டோ ஆகியோர் தமது பொருளியல் ஆய்வில் இம்முறையை பயன்படுத்தினர்.

## SECTION III

**1. பொருளியலைப் பற்றிய பற்றாக்குறை இலக்கணத்தை விளக்குக.மேலும் அதனை மதிப்பீடு செய்க.**

இலயனல் ராபின்சின் இலக்கணம் கிடைப்பருமை அல்லது பற்றாக்குறை இலக்கணம் என்று அழைக்கப்படுகிறது.

**இலக்கணம்**

இவரது இலக்கணம் 'விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள சாதனங்களோடும் தொடர்புள்ள மனித நடவடிக்கைகளைப் பற்றிய அறிவியலே பொருளியல்" ஆகும் எனக் குறிப்பிடுகிறார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net
A.Alexis PG Teacher DBHSS V.Pet

**குறைபாடுகள்**

1. இவரது இலக்கணம் ஒழுக்க நெறி கருத்துக்களை புறக்கணித்து விட்டது.
2. இவரது இலக்கணம் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.
3. இவரது இலக்கணத்தில் மனித தத்துவம் காணப்படவில்லை

**2. என்ன உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கான முக்கிய முடிவுகள் யாவை ?**

என்ன உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்கான முக்கிய முடிவுகள்

1. அத்தியாவசியப் பொருட்களை உற்பத்தி செய்வதா ? அல்லது ஆடம்பர பண்டங்களை உற்பத்தி செய்வதா ?
2. விவசாயப் பொருட்களா அல்லது தொழிற்சாலை பொருட்களா,
3. கல்வி மற்றும் சுகாதாரத்திற்கா அல்லது ராணுவப் பணிகளுக்கா
4. நுகர்வுப் பண்டமா ? அல்லது முதலீட்டுப் பண்டமா ?
5. அடிப்படைக் கல்விக்கா ? அல்லது உயர் கல்விக்கா ?

**3.பொருளாதார நடவடிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.**

1. **நுகர்வு–**மனித விருப்பங்களை நிறைவு செய்ய பண்டங்கள் மற்றும் பணிகள வாங்குவது
2. **உற்பத்தி** – உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடு
3. **பரிமாற்றம் –** உற்பத்தி செய்த பண்டங்களை பல்வேறு அங்காடி அமைப்புகள் மூலம் நுகர்வோருக்கு சென்றடையும் செயல்பாடு
4. **பகிர்வு** – உற்பத்தி காரணிகளுக்கு ஊதியத்தை வழங்குவது

**4. பணிகளின் பல்வேறு இயல்புகளை விவரி.**

**இயல்புகள்.**

1. பணிகள் என்பது கண்களுக்கு புலப்படாத ஒன்று. அதை உணரமுடியும். எ.கா.ஆசிரியர் பணி.
2. பலதரப்பட்ட பணிகள். தரத்தின் அடிப்படியில் வகைப்படுத்தப்படுகின்றன.
3. பணியாளார்டமிருந்து பணிகளை பிரிக்க முடியாது எ.கா. உழைப்பாளர்

**5. . பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை ?**

**பயன்பாடு –**மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் பணிகளின் சக்தி பயன்பாடு எனப்படும்.

**பயன்பாட்டின் இயல்புகள்**

1. பயன்பாடு உளவியல் சார்ந்தது. இது நுகர்வோரின் மனநிலையைப் பொருத்தது.
2. பயன்பாடும் உபயோகமும் ஒன்றானவை அல்ல. எ.கா. சிகரெட்டிலிருந்து பயன்பாடு கிடைத்தாலும் நுகர்வோரின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.
3. பயன்பாடும் ,மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல. எ.கா. மருந்து சாப்பிடும் போது பயன்பாடு கிடைத்தாலும், அது மகிழ்ச்சியை தராது.

**6. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை ?**

**நுண்ணியல் பொருளாதாரம்** தனி பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள், தனிக் குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது. **பேரியல் பொருளாதாரம்** நாட்டின் ஒட்டு மொத்த செயல்பாடுகளைப் பற்றி ஆராய்கிறது. வருமானக்கோட்பாடு, வேலைவாய்ப்புக்கோட்பாடு, விலைக்கோட்பாடு, பணக்கோட்பாடு ஆகியவற்றைஆராய்கிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**7. இயல்புரை பொருளியல் மற்றும் நெறியுரை பொருளியல் ஒப்பிடுக.**

**இயல்புரை பொருளியல்**

இது உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவுத் தொகுதி ஆகும். இது பொருளியல் கோட்பாடுகளை விளக்க முயற்சிக்கிறது.

**நெறியுரை பொருளியல்**

இது பொருளியல் என்பது எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல். இது நீதி நெறி ஒழுக்க நெறி கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

**ஒப்பீடு**

சுருக்கமாக இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை கீழ்காணுமாறு விளக்கலாம். வட்டிவீதம் அதிகரிக்கும்போது, இயல்புரை அறிவியல் வட்டி வீதத்தை ஏன் குறைக்க வேண்டும் எப்படி குறைப்பது என்று கூறுகிறது. நெறியுரை அறிவியல் என்பது வட்டி வீதம் அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய நன்மை அல்லது தீமையைக் கூறுகிறது.

**SECTION-IV**

**1. பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.**

**பொருளியலைப் பற்றிய இலக்கணங்கள்.**

**1.ஆடம்சுமித்தின் செல்வ இலக்கணம்.** நாடுகளின் செல்வம் என்ற நூலில் பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல் என விளக்கியுள்ளார்.

**2. ஆல்பிரட் மார்ஷலின் நல இலக்கணம்.** பொருளியல் கோட்பாடுகள் என்ற நூலில் ஒருபுறம் செல்வத்தைப் பற்றியும் மறுபுறம் மனிதர்களைப் பற்றியும் ஆய்வு செய்கின்ற இயல் எனக் குறிப்பிடுகிறார்.

**3. ராபின்சனின் பற்றாக்குறை இலக்கணம்.** விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் அறிவியல் ஆகும்.

**4. பால் சாமுவேல்சனின் நவீன பொருளாதார இலக்கணம்.**

மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்தி தற்கால மற்றும் எதிர்கால நுகர்வுக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. என்பதைப் பற்றி பயிலும் ஒரு சமூக அறிவியல் ஆகும் என்க் குறிப்பிடுகிறார்.

**ஒப்பீடு**

**ஆடம்சுமித்** ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகின்றார்.

**ஆல்பிரட் மார்ஷல்** மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான் செல்வத்தை அல்ல என்கிறார்.

**இராபின்சன்** மனித விருப்பங்கள் எண்ணற்றவை. விருப்பங்களை நிறைவு செய்யும் வளங்கள் பற்றாக்குறையானவை . பற்றாக்குறை தெரிவு செய்தலுக்கு வழி செய்கிறது எனவே ராபின்சனின் கூற்றுப்படி பொருளியல் தேர்வு செய்யும் அறிவியல் ஆகும்

**சாமுவேல்சன்** பொருளாதாரத்தின் உட்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. காலத்தை உள்ளடக்கியதால் இவர் இலக்கணம் வளர்ச்சியை உள்ளடக்கியதாக உள்ளது. இவர் பொருளியல் சமூக அறிவியலாக கருதினார்.

**2.பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக.**

**பகுத்தாய்வு முறை**

பகுத்தாய்வு முறையை பகுத்தறியும் முறை என்றும் கருத்தியலான முறை என்றும் கூறுவதுண்டு. பொதுக்கருத்தில் இருந்து ஒரு தனிக்கருத்தை அடைவது ஆகும்.புகழ்பெற்ற தொன்மை மற்றும் புதிய தொன்மை பொருளியல் அறிஞர்களான ரிக்கார்டோ ஜே.எஸ். மில் மால்தஸ் மார்ஷல் பிகு ஆகியோர் இம்முறையை பெரிதும் பயன்படுத்தினர்.

www.Padasalai.Net A.Alexis.PG Teacher,BRSS v.Pet



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பகுத்தாய்வு முறையின் படிகள்**

1.எந்த பிரச்சினையை ஆராய்கிறோம் என்பதை துல்லியமாகவும் தெளிவாகவும் ஆராய்ச்சியாளர் அறிந்திருக்க வேண்டும்.

2.ஆய்வில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப கருத்துக்களைதெளிவாக ஆள்வாளர் வரையறுக்க வேண்டும்.

3.அனுமானங்களின் வாயிலாக கருதுகோள்களை உருவாக்க வேண்டும்.

**தொகுத்தாய்வு முறை.**

தொகுத்தாய்வு முறை செயலறி முறை என்றும் அழைக்கப்படுகிறது.இதனை வரலாற்று பள்ளியை சேர்ந்த அறிஞர்கள் பின்பற்றினர்.இம்முறை தனிக்கருத்தில் இருந்து பொதுக்கருத்தை பெறுவதாகும்.

**தொகுத்தாய்வு முறையின் படிகள்**

1.ஒரு பொருளாதார நிகழ்வுகளைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து அவற்றை முறையாக ஒழுங்குபடுத்தி அவற்றிலிருந்து பொது முடிவுக்கு வருவதாகும்.

2. விவரங்களை உற்று நோக்குவதன் மூலம் முடிவுக்கு வருவதும் எளிது.

3.விவரங்களை பொதுமைப்படுத்தி கருதுகோள்களை உருவாக்குதல்.

**3.பொருளாதாராத்தின் தன்மைகளை மற்றும் எல்லைகளை விவாதிக்கவும்?**

**பொருளியலின் இயல்புகள்**

பொருளியலின் இயல்பினை குறிப்பிட்ட சில அறிஞர்களின் பல்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்

1. ஆடம்சுமித்தின் செல்வ இலக்கணம் நாடுகளின் செல்வம் என்ற நூலில் பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல் என விளக்கியுள்ளார்.
2. ஆல்பிரட் மார்ஷலின் நல இலக்கணம் பொருளியல் கோட்பாடுகள் என்ற நூலில் ஒரு புறம் செல்வத்தைப் பற்றியும் மறுபுறம் மனிதர்களைப் பற்றியும் ஆய்வு செய்கின்ற இயல் எனக் குறிப்பிடுகிறார்.
3. ராபின்சனின் பற்றாக்குறை இலக்கணம் விருப்பங்களோடும் கிடைப்பருமை உள்ள சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றிய ஓர் அறிவியல் ஆகும்.
4. பால் சாமுவேல்சனின் நவீன பொருளாதார இலக்கணம் மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்தி தற்கால மற்றும் எதிர்கால நுகர்வுக்காக உற்பத்தி செய்யப்படுகிறது. என்பதைப் பற்றி பயிலும் ஒரு சமூக அறிவியல் ஆகும் எனக் குறிப்பிடுகிறார்.

**பொருளியலின் எல்லை**

பொருளியலின் எல்லை என்பது பொருளியலின் பாடப்பொருளாகும். பொருளியல் ஒரு கலையிலா.அல்லது அறிவியலா மற்றும் அறிவியலாக இருப்பின் அது இயல்புரையியலா அல்லது நெறியுரையியலா என்பதை தெளிவுபடுத்துவதாகும்.

**பொருளியல் ஓர் அறிவியல்**

அறிவியல் என்பது ஒழுங்குமுறைப் படுத்தப்ப்பட்ட ஓர் அறிவுத் தொகுதி ஆகும்.இது காரண விளைவு ஆகியவற்றுக்கிடையேயான தொடர்புகளை விளக்குகிறது.

**பொருளியல் ஒரு சமூக அறிவியலாகும்**

பொருளியல் மனித நடவடிக்கைகளைப்பற்றிப் படிக்கும் ஓர் அறிவியல் ஆகும்.

**பொருளியல் ஒரு கலை**

பொருளியலை ஒரு கலையியல் என்றும் கூறலாம். கலையியல் என்பது ஒருகுறிக்கோளை அடைவதற்கான வழிமுறைகளைப்பற்றி விளக்குவதாகும். பொருளியல் அறிவியலும் கலையியலும் இணைந்த ஒன்று எனக் குறிப்பிடலாம்.

A.Alexis PGTeacher DBHSS / Pet
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**இயல்புரை பொருளியல்**

இது உள்ளதை உள்ளவாறு காணும் ஒழுங்கு படுத்தப்பட்ட அறிவுத் தொகுதி ஆகும். இது பொருளியல் கோட்பாடுகளை விளக்க முயற்சிக்கிறது.

**நெறியுரை பொருளியல்**

இது பொருளியல் என்பது எதுவாக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டை வகுக்கும் இயல். இது நீதி நெறி ஒழுக்க நெறி கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது.

**4. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டை கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.**

பொருளாதார முறைகள்

1. .முதலாளித்துவப் பொருளாதாரம். 2. .சமதர்ம பொருளாதாரம்
3. கலப்பு பொருளாதாரம்

பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சனைகள்

1.என்ன பண்டம் உற்பத்தி செய்வது ?
2. எவ்வாறு பண்டங்கள் உற்பத்தி செய்வது ?
3.யாருக்காக பண்டங்கள் உற்பத்தி செய்வது ?


**உற்பத்தி வாய்ப்பு வளைகோடு**

ஒரு சமுதாயம் வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டிருப்பதால் அதன் அனைத்து தெரிவுகளையும் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் வாயிலாக மேற்கொள்ள இயலும்.

உற்பத்தி வாய்ப்பு வளைகோடு என்பது பல இணைகளில் இரு பண்டங்களின் உற்பத்தியை மேற்கொள்வதாகும். எ.கா. உணவு உற்பத்தி மோட்டார் வாகன உற்பத்தி

அதிக அளவு உணவு உற்பத்தியை பெற விரும்பினால் நாம் அதிக அளவு மோட்டார் உற்பத்தியை இழக்க வேண்டியுள்ளது. இது வாய்ப்புச் செலவிற்கு உட்பட்டதாகும். இதை வரைபடம் விளக்குகிறது.

| உற்பத்தி வாய்ப்புகள் | மோட்டார் உற்பத்தி எண்ணிக்கையில் | உணவு உற்பத்தி டன்களில் |
|---|---|---|
| I | 0 | 25 |
| II | 100 | 23 |
| III | 200 | 20 |
| IV | 300 | 15 |
| V | 400 | 8 |
| VI | 500 | 0 |




**வரைபட விளக்கம்.**

1. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் மீது உள்ள புள்ளிகள் (P1 P2 P3 P4 ...) இரு பண்டங்களின் உற்பத்தி வாய்ப்பை குறிக்கிறது.
2. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு கீழ் அதாவது P7 பகுதி வளங்கள் முழுமையாக பயன்படுத்தாததைக் குறிக்கிறது.
3. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டிற்கு மேல் அதாவது P பகுதி உற்பத்தி வாய்ப்பிற்கு அப்பாற்பட்டதாக உள்ளது.

A.Alexis.PG Teacher DBHSS V.Pet
www.Padasalai.Net

## LESSON—2 SECTION-II

**1. பயன்பாட்டை வரையறுக்க.**

மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் பணிகளின் சக்தி பயன்பாடு எனப்படும்.

**2. விருப்பங்களை வகைப்படுத்துக.**

1.இன்றியமையாத விருப்பங்கள் –உணவு உடை இருப்பிடம்.
2.வசதிக்கான விருப்பங்கள் –மின்விசிறி, தொலைக்காட்சிப் பெட்டி.
3.ஆடம்பரத்திற்கான விருப்பங்கள் –நகைகள், வைரம்.

**3. நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.**

மனித விருப்பங்களின் இயல்புகள். குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி, சம இறுதிநிலை பயன்பாட்டு விதி, நுகர்வோர் எச்சம், தேவைவிதி, மற்றும் சமநோக்கு ஆய்வு முறைகள்

**4. விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி ?**

1.முற்றிலும் நெகிழ்ச்சி உள்ள தேவை 2. மிகைத்தேவை நெகிழ்ச்சி. 3.அலகுத்தேவை நெகிழ்ச்சி
4. குறைந்த தேவை நெகிழ்ச்சி. 5.முற்றிலும் நெகிழ்ச்சி அற்ற தேவை

**5. சமநோக்கு வளைகோடுகள் என்றால் என்ன ?**

இரு பண்டங்களின் வெவ்வேறு அளவுகளின் ஒருமித்த நுகர்வில் சம அளவு நிறைவைத்தரும் புள்ளிகளின் குவியிடமே சமநோக்கு வளைகோடு எனப்படும்

**6. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.**

நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மை விலை ( அல்லது )
நுகர்வோர் எச்சம் என்பது பண்டத்தின் மொத்த பயன்பாட்டிற்க்கும் ( TU ) மொத்தச்செலவிற்கும் ( P x Q ) உள்ள வித்தியாசமே ஆகும்.

**7. கிஃபன் பொருள்கள் எவை ? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன ?**

ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ்நிலைப் பண்டங்கள் கிஃபன் பொருள்கள் எனப்படும். ஏழை எளிய மக்கள், நுகரும் கீழ்நிலைப் பண்டங்களின் விலை அதிகரித்தால், அதனுடைய தேவை அளவும் அதிகரிக்கும் விலை குறைந்தால் தேவை அளவும் குறையும்.

## SECTION-II

**1. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை ?**

விருப்பங்கள் மனிதனுடைய ஆசைகள், சுவைகள் ,நோக்கங்களாகியன பொருளியலில் விருப்பங்கள் எனப்படுகின்றன.

**மனிதவிருப்பத்தின் இயல்புகள்.**

1.விருப்பங்கள் எண்ணற்றவை
2.விருப்பங்கள் நிறைவேறக்கூடியவை
3.விருப்பங்கள் போட்டியிடுபவை
4.விருப்பங்கள் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன
5.விருப்பங்கள் மாற்று பொருளால் நிறைவு பெறுபவை
6.விருப்பங்கள் நேரத்தால் இடத்தால் மனிதனுக்கு தகுந்தாற் போல மாறக்கூடியது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. மொத்தபயன்பாடு, இறுதிநிலை பயன்பாடு வேறுபடுத்துக.**

பயன்பாடு மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் பணிகளின் சக்தி பயன்பாடு எனப்படும்.

**மொத்தபயன்பாடு :** ஒரு பண்டத்தின் எல்லா அலகுகளையும் நுகர்வதால் கிடைக்கும் பயன்பாடு

**இறுதிநிலை பயன்பாடு:** மொத்த பயன்பாட்டில் ஏற்படும் கூடுதல் ஆகும். MUn=TUn-TUn-1

**3. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.**

**நுகர்வோர் எச்சம் இலக்கணம்**

" ஒரு பொருளை வாங்கமுடிவு செய்து கொடுக்க நினைக்கும் விலைக்கும் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ளவேறுபாடே நுகர்வோர் எச்சம் எனப்படும்."–மார்ஷல்

நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மை விலை      நுகர்வோர் எச்சம் = TU - ( P X Q )


**4. நுகர்வோர் எச்சம் கருத்தை விளக்குக.**

ஒரு ெ நுகர்வோர் எச்சம் என்பது பண்டத்தின் மொத்த பயன்பாட்டிற்க்கும் ( TU ) மொத்தச்செலவிற்கும் ( P x Q ) உள்ள வித்தியாசமே ஆகும்.

நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மை விலை

பொருளை வாங்கமுடிவு செய்து கொடுக்க நினைக்கும் விலைக்கும் உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வேறுபாடே நுகர்வோர் எச்சம் எனப்படும்.

**நுகர்வோர் எச்சத்தை அளவிடல்**





வரைபடம் 2.3

நுகர்வோர் எச்சம் என்பது பண்டத்தின் மொத்த பயன்பாட்டிற்க்கும் ( TU ) மொத்தச்செலவிற்கும் ( P x Q ) உள்ள வித்தியாசமே ஆகும்.

நுகர்வோர் எச்சம் = தகுவிலை – உண்மை விலை

**5. தேவை விரிவு மற்றும் தேவைச் சுருக்கத்தை வேறுபடுத்துக.**

விலை மாற்றத்தால் தேவை மாறினால் அது தேவை விரிவு மற்றும் தேவைச் சுருக்கம் எனப்படும்.
இது ஒரே தேவை வளைகோட்டில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் 2.7

வரைபடத்தில் விலை OP1 க்கு அதிகரிக்கும்போது தேவைகோட்டில் A புள்ளி B புள்ளிக்கு நகர்ந்து செல்லுதல் தேவைச்சுருக்கம் எனப்படும். அப்போது தேவை OQ1 ன்றாக குறைகிறது. மாறாக விலை OP2 க்கு குறையும் போது தேவைகோட்டில் A புள்ளி C புள்ளிக்கு நகர்ந்து செல்லுதல் தேவை விரிவு எனப்படும். அப்போது தேவை OQ 2 ஆக அதிகரிக்கிறது



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6. சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை ?**

**பண்புகள்**

i.வலப்புறமாக கீழ் நோக்கி சரிந்து செல்லும்.

ii.தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.

iii.ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.

**7. நுகர்வோர் சமநிலை என்ற கருத்தை சுருக்கமாக விவரி.**

நுகர்வோர் உயர்ந்த பட்சப் பயன்பாடு பெறும் நிலையில் சமநிலை அடைவார். சமநோக்கு வளைகோடு, வரவு செலவுக் கோட்டிற்கு தொடுகோடாக இருக்கும் போது நுகர்வோர் சமநிலை அடைவார். சமநிலை புள்ளியில் MRSxy = Px/Py

SECTION—IV

**1.தேவை விதியினை விவரமாக எழுதுக ?**

**<u>தேவை.</u>** தேவை என்பது ஒரு பொருளை வாங்குவதற்கான விருப்பம் ,வாங்கும்சக்தி, வாங்கிடவேண்டும் என்ற முடிவையும் குறிக்கும்.

தேவைச்சார்பு = D = f ( P ) D = தேவை f = சார்பு P = விலை

**தேவைவிதி** பெர்கூசன் என்பவரின் கூற்றுப்படி ‘விலையும் தேவையும் எதிர்கணிய தொடர்பு கொண்டுள்ளன’. விலை கூடினால் தேவை குறையும். விலை குறைந்தால் தேவை கூடும்.

**எடுகோள்கள்:–**

**1.**வருமானத்தில் மாற்றம் இல்லை. **2.**சுவையில் மாற்றம் இல்லை.


**3.**பிற பண்டங்களின் விலையில் மாற்றம் இல்லை. **4.**பிறபதிலிகள் இல்லை.

மேற்கண்ட எடுகோள்களின் அடிப்படையில் தேவைவிதி செயல்படும்.

**தேவைபட்டியல்**

| விலை(ரூ) | தேவை(ரூ) |
|---|---|
| 5 | 1 |
| 4 | 2 |
| 3 | 3 |
| 2 | 4 |
| 1 | 5 |

**தேவை வளைகோடு**



வரைபடம் 2.4

**வரைபட விளக்கம்**

Y அச்சில் விலை அளவும் X அச்சில் தேவை அளவும் குறிக்கப்பட்டுள்ளது. DD என்பது நுகர்வோரின் தேவை வளைகோடாகும்.இது விலைக்கும் தேவைக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குகிறது. தேவைக்கோடு கீழ்நோக்கி சரிந்து செல்லக் காரணம் குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி செயல்படுவதாகும்.

**விதிவிலக்குகள்**

விலை குறைவு தேவை சுருக்கத்தையும் விலை உயர்வு தேவை விரிவையும் ஏற்படுத்தும். இதன் விளைவாக தேவைக்கோடு இடமிருந்து வலமாக மேல்நோக்கி உயரும்.

**விதி விலக்கத்திற்கான காரணங்கள்**

+ கிஃபன் முரண்பாடு

+வெப்ளன் விளைவு

+அறியாமை

+ ஊக விளைவு

+ பற்றாக்குறை பயம்

A.Alexis.PG Teacher DPHSS V.Pet
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. குறைந்து செல் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக ?**

குறைந்து செல் இறுதிநிலைபயன்பாட்டு விதி. ஒருபண்டத்தை மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதால் அதன் பயன்பாடு குறையும்.

**இலக்கணம்.** ஒருவரிடம் உள்ள ஒரு பண்டத்தின் இருப்பு கூடுகின்ற பொழுது ஒவ்வொரு கூடுதல் அலகிலிருந்தும் கிடைக்கும் பயன்பாடு குறைகிறது என்று மார்ஷல் குறிப்பிடுகிறார்

**எடுகோள்கள் .**

1.பண்டத்தின் சரியான அளவை குறிப்பிடவேண்டும்

2.பண்டங்கள் ஒரே தரமானவை


3.கால இடைவெளியின்றி தொடர்ந்து நுகர வேண்டும்

4.பழக்கவழக்கங்கள் மற்றும் வருமானத்தில் மாற்றம் இல்லை.

5.பயன்பாட்டை அளவிடமுடியும்.

**விதியின் விளக்கம்.** பசியோடு இருக்கும் ஒரு நுகர்வோர் முதல் ஆப்பிள் சாப்பிடும்போது அவருக்கு அதிக பயன்பாட்டைக் கொடுக்கும் ,2,3,4,5,என பழங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.போது அவருக்கு கிடைக்கும் இறுதிநிலைப் பயன்பாடு குறைந்து கொண்டே செல்லும்.

இதை வரைபடம் விளக்குகிறது.



வரைபடம் 2.1

**வரைபடவிளக்கம்**

1. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடு பூஜியத்தில் இருக்கும்.

2.மொத்த பயன்பாடு குறையும் போது இறுதிநிலை பயன்பாடு எதிர்மறையாக இருக்கும்.

**முக்கியத்துவம்**

1.பொருளியலில் பல விதிகளுக்கு இது அடிப்படை ஆகும்.

2.நிதி அமைச்சருக்கு உதவுகிறது.

**திறனாய்வு**

1.பயன்பாட்டினை அளவிடமுடியாது.

2.தொடர்ந்து நுகர்வது நடைமுறைக்கு சாத்தியமில்லை.

**3. சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.**

**இலக்கணம்**

“ ஒரு மனிதன் பல வகையிலும் பயன்படுத்தக்கூடிய ஒரு பொருளை பெற்றிருந்தால் அதை அதன் பலவகை பயன்களிடையே பகிர்ந்தளிக்கும்போது அதன் பயன்களின் இறுதிநிலை பயன்பாடு ஒரே அளவில் சமமாய் இருக்கும்படி பகிர்ந்தளிப்பார்.ஒன்றை விட மற்றொன்றில் அதிக இறுதிநிலை பயன்பாடு கிடைக்குமெனில் அவர் அதிக பயன் பெறும் நோக்கில் குறைந்த பயன் தரும் பொருளில் இருந்து அதிக பயன் தரும் பொருளுக்கு மாற்றிவிடுவார்.”—மார்ஷல்

**அனுமானங்கள்**

1. பயன்பாடு எண்ணளவில் அளவிடப்பட வேண்டும்.

2.பண்டங்களின் விலைகள் மற்றும் நுகர்வோரின் வருமானம் வரையறுக்கப்பட்டன.

3.நுகர்வொர் பகுத்தறிவாளராக இருக்க வேண்டும்.

**விளக்கம்**

ஒரு நுகர்வோர் ஆப்பிள் மற்றும் ஆரஞ்சு ஆகிய இரு பண்டங்களில் தன் வரையறுக்கப்பட்ட வருமானத்தை செலவிட விரும்பினால் அதிக திருப்தியை பெறக்கூடிய நிலையில் அவர் சமநிலை அடைவார்.

A.Alexis.PG Teacher DBHSS/ Pet
www.Padasalai.Net


www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ஆப்பிளின் இறுதிநிலைப் பயன்பாடு = ஆரஞ்சின் இறுதிநிலைப் பயன்பாடு
--------------------------------------- ---------------------------------------- =K
ஆப்பிளின் விலை ஆப்பிளின் விலை

சம இறுதிநிலைப் பயன்பாடு அட்டவணை

| பண்டங்கள் எண்ணிக்கை | ஆப்பிள் | | | ஆரஞ்சு | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு | $\frac{MU_A}{P_A}$ | மொத்தப் பயன்பாடு | இறுதிநிலைப் பயன்பாடு | $\frac{MU_O}{P_O}$ |
| 1. | 25 | 25 | 25/2 = 12.5 | 30 | 30 | 30/1 = 30 |
| 2. | 45 | 20 | 20/2 = 10 | 41 | 11 | 11/1 = 11 |
| 3. | 63 | 18 | 18/2 = 9 | 49 | 8 | 8/1 = 8 |
| 4. | 78 | 15 | 15/2 = 7.5 | 54 | 5 | 5/1 = 5 |
| 5. | 88 | 10 | 10/2 = 5 | 58 | 4 | 4/1 = 4 |
| 6. | 92 | 4 | 4/2 = 2 | 61 | 3 | 3/1 = 3 |

நுகர்வோர் தனது ரூ 14 ஐ வருமானத்தை ஆப்பிளுக்காகவும் ஆரஞ்சுக்காகவும் செலவிட விரும்புகிறார். ஆப்பிளின் விலை ரூ.2 ஆகவும் ஆரஞ்சின் விலை ரூ.1 ஆகவும் இருக்கிறது.நுகர்வோர் உச்ச பயன்பாட்டை அடைய 5 அலகு ஆப்பிளையும் 4 அலகு ஆரஞ்சையும் வாங்குவார்.




மேற்கண்ட வரைபடத்தில் நுகர்வோர் ஆப்பிளுக்காக ரூ.10ம் ஆரஞ்சுக்காக ரூ.4ம் செலவிடுகிறார் எனக் கொண்டால் இரண்டின் இறுதிநிலை பயன்பாடும் நமமாக இருக்கும்.

**குறைபாடுகள்.**

1.பயன்பாட்டினை அளவிட முடியாது. உணர மட்டுமே முடியும்.
2.இவ்விதி நீண்ட காலப் பயன்பாட்டு பண்டங்களுக்கு பொருந்தாது.

**4.தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை ?**

**1.விழுக்காட்டு முறை.**

இது விகிதாச்சார முறை என்றும் அழைக்கப்படுகிறது.

$$Ep = \frac{\%\Delta Q}{\%\Delta P}$$

இதில் %ΔQ என்பது தேவையில் ஏற்படும் சதவீத மாற்றம்.
%ΔP என்பது விலையில் ஏற்படும் சதவீத மாற்றம்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2.மொத்த செலவு முறை**

நுகர்வோரின் மொத்த செலவில் ஏற்படும் மாற்றத்தை அல்லது நிறுவனத்தின் வருவாயில் ஏற்படும் மாற்றத்தை அளவிடுவதன் மூலம் தேவையானது நெகிழ்ச்சி உள்ளதா நெகிழ்ச்சியற்றதா எனபதை அறிய முடியும்.


மொத்த வருவாய் = விலை X விற்பனை அளவு TR = PXQ

| விலை | தேவை அளவு | மொத்த ஒதுக்கீடு | நெகிழ்ச்சி |
|---|---|---|---|
| 150 | 3 | 450 | e > 1 |
| 125 | 4 | 500 | e = 1 |
| 100 | 5 | 500 | e <1 |
| 75 | 6 | 450 | |

விலைக்கும் மொத்த செலவிற்கும் எதிர்மறை உறவு இருக்குமெனில் இங்கு தேவை நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கும்.நேரடி உறவு எனில் நெகிழ்ச்சியற்றதாக இருக்கும். மொத்த செலவில் மாற்றமில்லாதபோது நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமமாக இருக்கும்.

**3. புள்ளி அல்லது வடிவியல் முறை**

நேர் தேவைக்கோட்டில் குறிப்பிட்ட புள்ளியினுடைய வலப்பகுதியை இடப்பகுதியால் வகுக்கக் கிடைக்கும் விகிதத்தைக் கொண்டு புள்ளி முறையில் நெகிழ்ச்சியை அளவிடலாம்.




$$\text{புள்ளி நெகிழ்ச்சி } (ep) = \frac{\text{தேவைக்கோட்டில் புள்ளிக்கு கீழ்ப்பகுதியின் அளவு ( வலது பகுதி L}}{\text{தேவைக்கோட்டில் புள்ளிக்கு மேல்பகுதி அளவு ( இடது பகுதி U )}}$$

**LESSON--3**

**SECTION-II**

**1. உற்பத்திக் காரணிகளை வகைப்படுத்துக ?**

உற்பத்திக் காரணிகள் நான்கு வகைப்படும். அவை நிலம், உழைப்பு, மூலதனம்,மற்றும் அமைப்பு. நிலம் மற்றும் உழைப்பு என்பது முதன்மை உற்பத்திக்காரணிகளாகும். மூலதனம், மற்றும் அமைப்பு என்பது இரண்டாம் நிலை உற்பத்திக் காரணிகளாகும்.

www.Padasalai.Net G Teacher DBHSS V.Pet



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. உழைப்பு வரையறு.**

பொருளியலில் வருமானத்தை எதிர்பார்த்து, மனிதன் தன் உடல்,அல்லது அறிவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பயன்படுத்தி மேற்கொள்ளும் கடும் முயற்ச்சியே உழைப்பு ஆகும்.

**3. உற்பத்திச் சார்பினை குறிப்பிடுக.**

உற்பத்தி சார்பு என்பது ஒரு நிறுவனத்தின் உள்ளீடு மற்றும் வெளியீடுகளுக்கு இடையே உள்ள தொடர்பாகும்.

**4. காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு.**

கூடுதலாக ஒர் அலகு காரணியை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் மொத்த உற்பத்தியில் ஏற்படுகின்ற கூடுதல் காரணியின் இறுதிநிலை உற்பத்தி எனப்படும். MPn = TPn--TP(n-1 )

**5. சம உற்பத்திச் செலவுக்கோடு என்றால் என்ன ?**

ஒரு நிறுவனம் குறிப்பிட்ட அளவு பணச்செலவில் வாங்கக்கூடிய இரு காரணிகளின் பல தொகுப்புகளைக் குறிப்பிடுவதே சம உற்பத்திச் செலவுக்கோடு ஆகும். இதனை சமவிலைக் கோடு அல்லது மொத்த உற்பத்தி வளைகோடு எனவும் அழைக்கப்படுகிறது.

**6. உற்பத்தியாளர் சமநிலையை அடைய நிபந்தனை யாது ?**

சமநிலை புள்ளியில் இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு விகிதமும்,உற்பத்திக் காரணிகளின் விலை விகிதமும் சமம். எனவே உற்பத்தியாளன் சமநிலை நிபந்தனை என்பது

MRTS LK = PL / PK L = உழைப்பு , K = மூலதனம்

**7. அளிப்புக்கோடு மேல்நோக்கிச் செல்வதன் காரணம் என்ன ?**

விலைக்கும் அளிப்பிற்கும் நேரடித்தொடர்பு உள்ளது .அதாவது ஒரு பண்டத்தின் விலை உயர்வால் அளிப்பு அதிகரிக்கும். விலை குறைந்தால் அளிப்பும் குறையும். ஆகவே அளிப்புக்கோடு மேல்நோக்கிச் செல்லும்.

SECTION-III

**1. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை ?**

**நிலத்தின் சிறப்பியல்புகள்.**

1. நிலம் இயற்கையின் கொடை ஆகும்
2. இதன் அளிப்பு நிலையானது.
3. நிலம் அழிவில்லாதது.
4. நிலம் அசைவற்றது.
5. நிலம் செழிப்புத்தன்மை மற்றும் இடவமைப்புகளில் மாறுபடும் தன்யுடையது.

**2. அளிப்பு நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை ?**

**பொருட்களின் தன்மை.**

நிலைத்து நீடிக்க கூடிய பொருட்களின் அளிப்பு நெகிழ்ச்சி அதிகம். அழுகும் பொருட்களின் அளிப்பு நெகிழ்ச்சி குறைவு.

**உற்பத்திச் செலவு.**

ஒரு நிறுவனம் வளர்ந்து செல் விளைவு நிலையில் அளிப்பை அதிகரிக்க இயலும் அதனால் அளிப்பின் நெகிழ்ச்சி அதிகம். குறைந்து செல் விளைவு நிலையில் அளிப்பை அதிகரிக்க இயலாது. அதனால் அளிப்பின் நெகிழ்ச்சி குறைவு.

**தொழில்நுட்ப நிலை**

மூலதனக் கருவிகளை குறைவாக பயன்படுத்தும்போது அதிக நெகிழ்ச்சி உடையதாக இருக்கும்.அதிக மூலதனத்தை முதலீடு செய்யும்போது அளிப்பு நெகிழ்ச்சி குறைவு.

**கால அளவு.**

மிக குறுகிய காலத்தில் அளிப்பு நெகிழ்ச்சி மிகக்குறைவு. நீண்ட காலத்தில் அளிப்பு அதிக நெகிழ்ச்சி உடையது.

www.Padasalai.Net A.Alexis.PG Teacher.DBHSS.V.Pet



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?**

**தொழில் முனைவோரின் பணிகள்**

1.இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் கண்டு தேர்ந்தெடுத்தல்.
2. உற்பத்தி அலகின் அளவைத் தீர்மானித்தல்
3. உற்பத்தி அலகின் இடத்தை தேர்ந்தெடுத்தல்.
4. உற்பத்திக் காரணிகளின் உத்தம ஒருங்கிணைப்பைக் கண்டறிதல்.
5. புத்தாக்கப்பணி.
6. இடர்பாடுகளை ஏற்றல், நிச்சயமின்மையை எதிர்கொள்ளல்.

**4. அளிப்பு நெகிழ்ச்சியைப் பற்றிக் கூறுக ?**

**அளிப்பு நெகிழ்சி**

அளிப்பு நெகிழ்சி என்பது விலையில் ஏற்படும் மாற்றத்தின் விளைவாக அளிப்பின் அளவில் ஏற்படும் மாற்றம் என்று கூறலாம்.

**அளிப்பு நெகிழ்சியின் வகைகள்**

1.மிகை நெகிழ்ச்சிஅளிப்பு
2.குறைந்த நெகிழ்ச்சிஅளிப்பு.
3.அலகு நெகிழ்ச்சி அளிப்பு
4.முற்றிலும் நெகிழ்ச்சி அற்ற அளிப்பு
5.முற்றிலும் நெகிழ்ச்சி உடைய அளிப்பு

**5. மொத்த, சராசரி, இறுதிநிலை உற்பத்திகளுக்கு இடையே உள்ள தொடர்பினை விவரி.**

1.மொத்த உற்பத்தி, சராசரி உற்பத்தி, மற்றும் இறுதிநிலை உற்பத்தி அதிகரிக்கிறது.
இதில் சராசரி உற்பத்தியை விட இறுதிநிலை உற்பத்தி அதிகமாக அதிகரிக்கிறது.
2. சராசரி உற்பத்தி, மற்றும் இறுதிநிலை உற்பத்தி ஆகிய இரண்டின் வீழ்ச்சியும் இயல்பானவையே ஆகும் இறுதிநிலை உற்பத்தி பூஜ்யத்தில் இருக்கும் போது மொத்த உற்பத்தி உச்சத்தில் இருக்கும்
3.இறுதிநிலை உற்பத்தி எதிர்மறையானது. மொத்த உற்பத்தி மற்றும் சராசரி உற்பத்தி இரண்டும் குறையத் தொடங்குகின்றன.

**6. உற்பத்தியாளர் சமநிலையை உதாரணத்துடன் விளக்குக.**

**சம அளவு உற்பத்திக்கோடு**

சம அளவு உற்பத்திக்கோடு என்பது இரு உற்பத்திக் காரணிகளை பல்வேறு கலவைகளில் பயன்படுத்தி ஒரே அளவு உற்பத்தி செய்வதைக் குறிக்கும்.

**உற்பத்தியாளர் சமநிலை**

ஒரு சிறந்த உற்பத்தியாளன், கொடுக்கப்பட்ட காரணிகளின் உற்பத்திச் செலவில், அதிக அளவு உற்பத்தியை பெற முயல்வான். குறைந்த அளவு உற்பத்திக் காரணிக் கலவைகளைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட அளவு வெளியீட்டில் உச்ச இலாபத்தை உற்பத்தியாளர் பெறுகிறார்.

**7. காப் டக்லஸ் உற்பத்தி சார்பை விளக்குக.**

பொருளியலில் எளிமையானதும், பரவலாகப் பயன்படுத்தப்படும் உற்பத்தி சார்பு காப்–டக்லஸ் உற்பத்தி சார்பு ஆகும். காப்–டக்லஸ் உற்பத்தி சார்பு பின்வருமாறு,

$Q = AL^{\alpha} K^{\beta}$

L = உழைப்பு

K = மூலதனம்

$\alpha + \beta > 1$ வளர்ந்து செல் விகித விளைவு விதி

$\alpha + \beta = 1$. மாறா விகித விளைவு விதி

$\alpha + \beta < 1$குறைந்த செல் விகித விளைவு விதி




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## SECTION-IV.

**1. மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக.**

**மாறும் விளைவு விதி**

உற்பத்திக் காரணிகளில் ஒரு காரணியை நிலையாக வைத்து மற்ற காரணிகளை மாற்றிஅமைக்கும் போது உற்பத்தியில் மூன்று விதமான விளவுகள் ஏற்படுகின்றன. அவை




1. வளர்ந்து செல் விளைவு விதி
2. குறைந்த செல்விளைவு விதி
3. எதிர்கனிய உற்பத்தி

**1. வளர்ந்து செல் விளைவு விதி**

மொத்த உற்பத்தி, சராசரி உற்பத்தி, மற்றும் இறுதிநிலை உற்பத்தி அதிகரிக்கிறது.
இதில் சராசரி உற்பத்தியை விட இறுதிநிலை உற்பத்தி அதிகமாக அதிகரிக்கிறது.

**2. குறைந்த செல்விளைவு விதி**

சராசரி உற்பத்தி, மற்றும் இறுதிநிலை உற்பத்தி ஆகிய இரண்டின் வீழ்ச்சியும் இயல்பானவையே ஆகும்.
இறுதிநிலை உற்பத்தி பூஜ்யத்தில் இருக்கும் போது மொத்த உற்பத்தி உச்சத்தில் இருக்கும்

**3. எதிர்கனிய உற்பத்தி**

இறுதிநிலை உற்பத்தி எதிர்மறையானது. மொத்த உற்பத்தி மற்றும் சராசரி உற்பத்தி இரண்டும் குறையத் தொடங்குகின்றன.


**2. சம அளவு உற்பத்திக் கோட்டின் பண்புகளை வரைபடத்துடன் விவரி.**

**சம அளவு உற்பத்திக்கோடு**

சம அளவு உற்பத்திக்கோடு என்பது இரு உற்பத்திக் காரணிகளை பல்வேறு கலவைகளில் பயன்படுத்தி ஒரே அளவு உற்பத்தி செய்வதைக் குறிக்கும்.

**சம அளவு உற்பத்திக்கோட்டின் இயல்புகள்**


1. சம அளவு உற்பத்தி கோடுகள் எதிர்மறை சரிவைக் கொண்டது




சம அளவு உற்பத்திக்கோடு இடமிருந்து வலமாக மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும். அதாவது எதிர்மறையாக சரிந்துள்ளது.

www.Padasalai.Net
A.Alexis PG Teacher DBHSS V.Pet


**2.தோற்றுவியை நோக்கி குவிந்து காணப்படும்.**




இறுதிநிலை தொழில்நுட்ப பதிலீட்டு விகிதத்தால் சம அளவு உற்பத்திக்கோடு தோற்றுவியை நோக்கி குவிந்து காணப்படும்.


**3. ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.**

சம அளவு உற்பத்திக்கோடுகள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளாது.





**4.உயர் சம அளவு உற்பத்தி**

சம உற்பத்தி கோடுகள் உயரே செல்லச் செல்ல உற்பத்தியின் அளவும் உயர்ந்து கொண்டே செல்லும்.




**5.**சம உற்பத்திக் கோடு X அச்சினையோ அல்லது Y அச்சினையோ தொடாது.




**3. விகித அளவு விளைவு விதியை உதாரணத்துடன் விளக்குக.**

**விகித அளவு விளைவு விதி**

அனைத்து உற்பதிக்காரணிகளும் மாறும் போது உற்பத்தியில் ஏற்படும் மாற்றமே விகித அளவு விளைவு விதியாகும்.

விகித அளவு விளைவு விதியின் மூன்று நிலைகள்.

**1. வளர்ந்து செல் விகித அளவு விளைவு விதி**

அனைத்து உற்பதிக் காரணிகளையும் மாற்றும் விகித அளவைவிட அதிகமாக உற்பத்தி பெருகினால் அது வளர்ந்து செல் விகித அளவு விளைவு விதி ஆகும்.


www.Padasalai.Net
PG Teacher DGHSS V.Pet

**2. மாறா விகித அளவு விளைவு விதி**

அனைத்து உற்பதிக் காரணிகளையும் மாற்றும் அதே விகித அளவிற்கு உற்பத்தி பெருகினால் அது மாறா விகித அளவு விளைவு விதி ஆகும்.

**3. குறைந்த செல் விகித அளவு விளைவு விதி**

அனைத்து உற்பதிக் காரணிகளையும் மாற்றும் விகித அளவைவிட குறைவாக உற்பத்தி பெருகினால் அது குறைந்த செல் விகித அளவு விளைவு விதி ஆகும்.




| நிலைகள் | உள்ளிடு | வெளியீடு | விகித விளைவு |
|---|---|---|---|
| a to b | 100% ↑ | 200% ↑ | வளர்ந்துசெல் |
| b to c | 100% ↑ | 100% ↑ | மாறா |
| c to d | 100% ↑ | 33.33% ↑ | குறைந்து செல் |

**வரைபட விளக்கம்**

1.வரைபடத்தில் **a** க்கும் **b** க்கும் இடையெ உள்ள பகுதி வளர்ந்தசெல் விளைவு விதியைக் குறிக்கிறது. உள்ளீடுகள் **1** மடங்கு அதிகரிக்கும்போது உற்பத்தி **2** மடங்கு அதிகரித்துள்ளது.

2.புள்ளி **b** க்கும் **c** க்கும் இடையெ உள்ள பகுதி மாறா விகித விளைவு விதியைக் குறிக்கிறது. இதில் உள்ளீடுகள் **2** மடங்கு அதிகரிக்கும்போது உற்பத்தியும் **2** மடங்கு அதிகரிக்கிறது.

3.புள்ளி **c** க்கும் **d** க்கும் இடையே உள்ள பகுதி குறைந்து செல் விகித அளவு விளைவு விதியை குறிக்கிறது. இதில் உள்ளீடுகள் இருமடங்கு அதிரிக்கும்போது உற்பத்தி இரு மடங்கு உயராமல் குறைவாகவே இருக்கிறது.

**4. அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி.**

பொருளாதார சிக்கனங்கள்

பொருளாதார சிக்கனங்கள் என்பது பேரளவு உற்பத்தியில் ஏற்படும் செலவு சார்ந்த நன்மைகள் ஆகும். பொருளாதார சிக்கனங்கள் இரு வகைப்படும் அவை

1. அகச் சிக்கனங்கள்
2. புறச் சிக்கனங்கள்.

**1. அகச் சிக்கனங்கள்.**

a) தொழில்நுட்பச் சிக்கனங்கள்.

b) நிதிச் சிக்கனங்கள்.

c) உழைப்புச் சிக்கனங்கள்.

d) சந்தை சார்ந்த சிக்கனங்கள்.

**2. புறச் சிக்கனங்கள்.**

a) மேம்பட்ட போக்குவரத்து வசதிகள்.

b) வங்கி செயல்பாடு சார்ந்த வசதிகள்.

c) தகவல் மற்றும் தொலைத்தொடர்பு வளர்ச்சி.

www.Padasalai.Net
A.Alexis PG Teacher BBHSS v



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# Lesson.4
## SECTION II.

**1. செலவை வரையறு.**

செலவு என்பது உற்பத்திச்செலவைக் குறிக்கும். ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது ஏற்படுகின்ற பல்வேறு வகையான செலவினங்கள் உற்பத்திச்செலவு ஆகும்.

**2. செலவுச் சார்பை வரையறு.**

இது மொத்த செலவிற்கும் மற்றும் உற்பத்திக்கும் இடையே உள்ள தொடர்பினை வெளிப்படுத்துகிறது.

$C = f(Q)$

**3. மாறாச் செலவு என்றால் என்ன ?**

மாறாச் செலவுகள் உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை. அதாவது மாறாக் காரணிகளுக்காக செய்யப்படும் செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும்..எ.கா. நிறுவனத்தின் வாடகை

**4. வருவாயை வரையறு.**

வருவாய் என்பது விற்பனை வருவாயைக் குறிக்கும். உற்பத்தியாளர் தான் உற்பத்தி செய்த பண்டத்தை ஒரு குறிப்பிட்ட விலையில் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் பெறுகின்ற வருமானமே அந்நிறுவனத்தின் வருவாய் எனப்படும்.

**5. வெளிப்படையான செலவு வரையறு.**

உற்பத்திக்காரணிகளுக்கு அளிக்கும் ஊதியங்கள் வெளிப்படையான செலவு எனஅழைக்கப்படும். எ.கா.மூலப்பொருள் செலவு, கூலி மற்றும் சம்பளம்.

**6. உண்மைச் செலவு என்றால் என்ன ?**

இது உள்ளுணர்வு சார்ந்த கருத்தாகும் . ஆடம் சுமித் கருத்துப்படி உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மைச் செலவு என்று கூறுகிறார்.

**7. மூழ்கும் செலவுகள் என்றால் என்ன ?**

மீட்டு எடுக்க முடியாத கடந்தகாலச் செலவுகள் மூழ்கும் செலவுகள் ஆகும். ஒரு முறை முதலீடு செய்யப்பட்டது மூழ்கியதாக கருதப்பட்டால் அவை மூழ்கும் செலவுகள் எனப்படும்.

## SECTION III

**1 மாறாச் செலவை மாறும் செலவிலிருந்து வேறுபடுத்துக.**

**மாறாச் செலவுகள்** உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப மாறுபடுவதில்லை. அதாவது மாறாக் காரணிகளுக்காக செய்யப்படும் செலவுகள் மாறாமல் நிலையாக இருக்கும்..எ.கா. நிறுவனத்தின் வாடகை.

**மாறும் செலவு** உற்பத்தி மாற்றத்திற்கு ஏற்ப செலவுகள் மாறுபடும். எ.கா. கச்சாப் பொருள்களுக்கான செலவுகள்.

**2. பணச் செலவையும் உண்மைச் செலவையும் வேறுபடுத்துக.**

**பணச்செலவு** என்பது ஒரு பொருளைஉற்பத்தி செய்ய பணமாக செலவிடுகின்ற அனைத்து தொகையையுமே பணச்செலவு ஆகும் எ.கா. மூலப்பொருள் செலவு, கூலி ம்ற்றும் சம்பளம்.

ஆனால் **உண்மைச் செலவு** என்பது இது உள்ளுணர்வு சார்ந்த கருத்தாகும் . ஆடம் சுமித் கருத்துப்படி உழைப்பாளர்களின் துன்பங்களும், தியாகங்களுமே உண்மைச் செலவு என்று கூறுகிறார்.

**3. வெளிப்படையான செலவையும்,உள்ளார்ந்த செலவையும் வேறுபடுத்துக.**

**வெளிப்படையான செலவு** என்பது உற்பத்திக் காரணிகளுக்கு அளிக்கும் ஊதியங்கள் வெளியுறுச் செலவு. எனஅழைக்கப்படும். எ.கா.மூலப்பொருள் செலவு, கூலி ம்ற்றும் சம்பளம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**உள்ளார்ந்த செலவு** என்பது ஒரு தொழில் முனைவோர் தன்னுடைய சுய உழைப்பு, முயற்சி,சிந்தனை மற்றும் தனக்கு சொந்தமான காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்துவதால் அதற்கான வெகுமதியே உள்ளார்ந்த செலவுகள் ஆகும்

**4. வாய்ப்புச் செலவை எடுத்துக்காட்டுடன் வரையறு .**

**வாய்ப்புச் செலவு** என்பது அடுத்த சிறந்த மாறுபட்ட செலவைக் குறிக்கும். ஒரு பண்டத்தின் சிறந்த பயன்பாடு தேர்ந்தெடுக்கப்படுவதால் அதனுடைய அடுத்த சிறந்த பயன்பாடு விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது.

**எ.கா.** விவசாயி தன் நிலத்தில் கரும்பு அல்லது நெல் விளைவிக்க முடியும். அவ்விவசாயி நெல் விளைவித்தால், நெல்லின் வாய்ப்புச் செலவு என்பது விட்டுத்தந்த கரும்பின் உற்பத்தி அளவே ஆகும்.

**5 . AC மற்றும் MC கோடுகளிடையே உள்ள உறவுகளை விளக்குக ?**

**AC மற்றும் MC கோடுகளிடையே உள்ள உறவு**

1. AC குறையும் போது, MC அதை விட வேகமாக குறைகிறது. எனவே AC கோட்டிற்கு கீழே MC கோடு உள்ளது.
2. AC அதிகரிக்கும் போது, MC அதைவிட வேகமாக அதிகரிக்கிறது. எனவே AC கோட்டிற்கு மேலே MC கோடு உள்ளது.
3. AC கோட்டின் மிக தாழ்வான புள்ளியை ,MC கோடு கீழிருந்து மேல்நோக்கி வெட்டிச் செல்லும்.

**6. இறுதிநிலை வருவாய் குறிப்பு வரைக.**


**இறுதிநிலை வருவாய்** : கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலை வருவாய் எனப்படும்.

MR= TRn-TRn-1

மொத்த வருவாயில் ஏற்படும் மாற்றத்தை மொத்த பண்டங்களின் அளவில் ஏற்படும் மாற்றத்தால் வகுத்தால் இறுதிநிலை வருவாய் கிடைக்கும்.

$MR = \Delta TR / \Delta Q$

**7. நீண்டகால சராசரிச் செலவு வளைக்கோடு பற்றி குறிப்பு வரைக ?**




நீண்டகாலத்தில் அனைத்து உற்பத்தி காரணிகளும் மாறக்கூடியவை. நீண்டகால உற்பத்திக்கும் நீண்டகால உற்பத்திச் செலவிற்கும் இடையே உள்ள தொடர்பை நீண்டகால சராசாச்ச் செலவு வளைக்கோடு விளக்குகிறது.

நீண்டகாலத்தில் உற்பத்தி அளவில் ஒரு நிறுவனம் பல பதிலிகளை கொண்டுள்ளது. நீண்டகால சராசரி செலவு வளைகோடு, குறுகிய கால செலவுகோடுகளின் மிகத்தாழ்வான புள்ளிகளை ஒருங்கிணைத்து அமைந்துள்ளது. எனவே நீண்டகால சராசரி செலவுக்கோடு. இது திட்டவளைகோடு என்றும் அழைக்கப்படும்.

## SECTION IV.

1. **பல்வேறுபட்ட விலையில் AR மற்றும் MR கோடுகளிடையே உள்ள உறவுகளை விளக்குக ?**

**சராசரி வருவாய்** மொத்த வருவாயை விற்பனை செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுக்க கிடைப்பதாகும் AR= TR/Q

**இறுதிநிலை வருவாய்** கூடுதலாக ஓர் அலகு பண்டத்தை விற்பனை செய்வதால் மொத்த வருவாயில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலை வருவாய் எனப்படும்.


MR= TRn-TRn–1




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**AR மற்றும் MR கோடுகளிடையே உள்ள உறவு**

1. **விலை மாறாதபோது** AR மற்றும் MR கோடுகள் ஒன்றிணைந்து ஒரே கோடாக இருக்கும். இது Xஅச்சுக்கு இணையாக இருக்கும். P=AR=MR




**2. விலை மாறும் போது**




விலை மாறும் போது விலை பேதம் காட்டப்படும். எனவே AR கோட்டிற்கு கீழே MR கோடு இருக்கும்.

A.Alexis.PG Teacher DBHSS V.Pet
www.Padasalai.Net

**2.மொத்தச் செலவு (TC)= 10+Q3, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.**

மொத்தச் செலவு = 10+Q3, எனில்

AC =TC/Q = 10 /Q + Q3 /Q  Q = 5 எனில்

Q3 = 5x5x5=125

**TC**= 10+125=**135**

**AC**=10+125 = $\frac{135}{5}$ =**27**

**TFC = 10**

AFC = TFC / Q ,

AFC = 10 / 5 = 2

**AFC = 2**

**TVC** = Q3  5x5x5=**125**

AVC = TVC / Q

AVC = 125 / 5 = 25  **AVC** = **25**




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3.குறுகிய காலச் செலவுக் கோடுகளை தகுந்த வரைபடத்துடன் விவரி.**


**1.மொத்த மாறாச் செலவு ( TFC )**

மாறாத உற்பத்தி காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்துச் செலவுகளின் கூடுதல் மொத்த மாறாச் செலவு எனப்படும்.




**2.மொத்த மாறும் செலவு ( TVC )**


மாறும் உற்பத்தி காரணிகளுக்கு செய்யப்படும் அனைத்து செலவுகளின் கூடுதல் மொத்த மாறும் செலவாகும்.




**3.மொத்தச் செலவு ( TC )**

மொத்த மாறாச் செலவையும் மொத்த மாறும் செலவையும் கூட்டினால் கிடைப்பது மொத்தச் செலவு ஆகும்.

| உற்பத்தி (Q) அலகுகள் | மொத்த மாறாச் செலவு (TFC) (₹) | மொத்த மாறும் செலவு (TVC) (₹) | மொத்தச் செலவு (TC) (₹) |
|---|---|---|---|
| 0 | 1000 | 0 | 1000 |
| 1 | 1000 | 200 | 1200 |
| 2 | 1000 | 300 | 1300 |
| 3 | 1000 | 400 | 1400 |
| 4 | 1000 | 600 | 1600 |
| 5 | 1000 | 900 | 1900 |





**4. சராசரி செலவு ( AC )**

மொத்த செலவை உற் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுத்தால் கிடைக்கும் ஈவு சராசரி செலவு எனப்படும்.

**5.சராசரி மாறாச் செலவு ( AFC )**


மொத்த மாறாச் செலவை உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுத்தால் கிடைக்கும் ஈவு சராசரி மாறாச் செலவு ஆகும்.







Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**6.சராசரி மாறும் செலவு ( AVC )** என்பது மொத்த மாறும் செலவை உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையால் வகுத்தால் கிடைக்கும் ஈவு சராசரி மாறாச் செலவு ஆகும்.




**7. இறுதிநிலைச் செலவு ( MC )**

கூடுதலாக ஒரு அலகுப் பண்டத்தை உற்பத்தி செய்வதால் மொத்த செலவில் ஏற்படுகின்ற கூடுதல் இறுதிநிலைச் செலவு எனப்படும்.




**LESSON=5**
**section=II**

**1. அங்காடி வரையறு ?**

அங்காடி பொருளியலில் அங்காடி என்பது பண்டங்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்திட வாங்குவோரும் விற்போரும் இணையும் இடத்தைக் குறிக்கும்.

**2. விலையை ஏற்பவர் யார் ?**

நிறைவுப் போட்டியில் நிறுவனங்கள் அங்காடி விலையை ஏற்பவர்களாக உள்ளனர்.

**3. விற்பனைச் செலவு என்றால் என்ன ?**

முற்றுரிமைப் போட்டியில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க அதிக விளம்பரங்களை செய்வதற்காக மேற்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனைச் செலவுகள் எனப்படுகின்றன.

**4. விலைபேதம் காட்டும் இரண்டு தன்மைகளை கூறுக.**

1. முதல் நிலை விலைபேதம் காட்டுதல் முற்றிலும் நுகர்வோர் சுரண்டப்படும் நிலை.
2. இரண்டாம் நிலை விலைபேதம் காட்டுதல் இடபேதம். உள்நாட்டில் ஒரு விலையும் ,வெளிநாடுகளில் வேறு விலையும் பெறுவது.

**5. உபரி சக்தி விளக்குக.**


நீண்டகாலத்தில் முற்றுறிமைப் போட்டியில் நிறுவனங்கள் உச்ச உற்பத்தி அளவைவிட குறைவாகவே உற்பத்தி செய்கின்றனர். எனவே உபரிசக்தி வீணாக்கப்படுவதாகக் கருதப்படுகிறது.

நீண்டகாலத்தில் முற்றுரிமைப் போட்டியில் நிறுவனங்கள் உச்ச உற்பத்தி அளவைவிட குறைவாகவே உற்பத்தி செய்கின்றனர். எனவே உபரி சக்தி வீணாக்கப்படுவதாகக் கருதப்படுகிறது.


A.Alexis.PG Teacher DBHSS-V.Pet
www.Padasalai.Net

**6. கீழ்கண்ட நிறுவனத்தின் தேவைக்கோடு வரைக .**

**அ.நிறைவுப்போட்டி**




**ஆ.முற்றுரிமை**




**SECTION-III**

**1. அங்காடியின் பண்புகள் யாவை ?**

அங்காடி பொருளியலில் அங்காடி என்பது பண்டங்களையும் பணிகளையும் பரிமாற்றம் செய்திட வாங்குவோரும் விற்போரும் இணையும் இடத்தைக் குறிக்கும்.

**பண்புகள்.**

1.வாங்குவோரும், விற்போரும் இருப்பர்.
2.வாங்குவோரும் விற்போரும் நேரடியாக சந்தித்துக் கொள்ள வேண்டியதில்லை.
3. தொலைதொடர்பு சாதனங்கள் மூலம் பரிமாற்றம் நடைபெறலாம்.
4.அங்காடியில் பண்டங்களுக்கு விலை இருக்க வேண்டும்.

**2. விலை பேதத்தின் நிலைகளை கூறுக.**

விலைபேதம் காட்டும் முற்றுரிமை என்பது ஒரு பொருளுக்கு பல்வேறு வாடிக்கையாளர்களிடம் பல்வேறு விலையைப் பெறுவதாகும்.

**விலை பேதத்தின் நிலைகள்**

1. **முதல் நிலை விலைபேதம் காட்டுதல்** .முற்றிலும் நுகர்வோர் சுரண்டப்படும் நிலை.
2. **இரண்டாம் நிலை விலைபேதம் காட்டுதல் இடபேதம்.** உள்நாட்டில் ஒரு விலையும் ,வெளிநாடுகளில் வேறு விலையும் பெறுவது..
3. **மூன்றாம் நிலை விலைபேதம் காட்டுதல் தனிநபர் பேதம்** .இரயில் பயணத்தில் மூத்த குடிமக்களுக்கு கட்டணச் சலுகை.

**3. விற்பனைச் செலவு என்றால் என்ன ? உதாரணத்துடன் விளக்குக.**

முற்றுரிமைப் போட்டியில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தி பண்டத்தின் விற்பனையை அதிகரிக்க அதிக விளம்பரங்களை செய்வற்காக மேற்கொள்ளும் விளம்பரச் செலவுகள் அனைத்தும் விற்பனைச் செலவுகள் எனப்படுகின்றன.

**எ.கா.** தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் போன்றவற்றில் விளம்பரம் செய்தல்

**4. இருவர் முற்றுரிமையின் இயல்புகள் யாவை ?**

**இருவர் முற்றுரிமை.**

தனிப்பட்ட இரண்டு விற்பனையாளர்களைக் கொண்ட அமைப்பு இது.விலை மற்றும் உற்பத்தி அளவை தீர்மானிக்க சுதந்திரம் பெற்றுள்ளது.

**இயல்புகள்.**

1. ஒவ்வொரு விற்பனையாளரும் போட்டியாளரின் செயல்பாடுகளை முழுமையாக அறிந்திருப்பர்
2. இரண்டு விற்பனையாளர்களும் விற்பனை தொடர்பான உடன்பாடு செய்திருப்பர்.
3. விற்பனையாளர்கள் முறையற்ற போட்டியிலும் ஈடுபடலாம்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com


4. உற்பத்தி பண்டங்களின் வேறுபாடு இல்லை.
5. அதிக விலை அதிக இலாபம் ஈட்டுவதற்காகவே இருக்கும்.

**5. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்யாவை ?**
**நிறுவனம்**
பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்து.அதற்கு விலையை தீர்மானித்து விற்பனை செய்யும் ஒரு அமைப்பு நிறுவனம் என அழைக்கப்படுகிறது. **எ.கா.** சங்கர் சிமெண்ட்
**தொழில்**
ஒரே மாதிரியான பொருள் அல்லது பணியை உற்பத்தி செய்யக்கூடிய பல நிறுவனங்களின் தொகுப்பே தொழில் ஆகும். **எ.கா.** சிமெண்ட் தொழில்

## SECTION-IV

**1. நிறைவுப்போட்டியின் இயல்புகளை விளக்கவும் ?**
**நிறைவுப்போட்டி**
இது எண்ணற்ற விற்பனையாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும் நிறைவுப் போட்டியில் ஒரே விலை நிலவும் . பண்டங்கள் ஒன்றுக்கொன்று பதிலீடாகவும் இருக்கும்.
**இயல்புகள்**
1.எண்ணற்ற வாங்குவோரும், விற்போரும். இது எண்ணற்ற விற்பனையாளர்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும்.
2.ஒரே தன்மையுடைய பண்டங்கள் அதாவது ஒரு பண்டம் ஒன்றுக் கொன்று பதிலீட்டுப் பண்டங்களாக உள்ளன.
3.அங்காடி நிலைபற்றி முழுமையாக அறிந்திருத்தல். வாங்குவோர் கூடுதல் விலை கொடுக்கவோ, விற்போர் குறைந்த விலையை பெற்றுக்கொள்ளவோ மாட்டார்கள்.
4. உட்புகுதலும் வெளியேறுதலும் தடையில்லை. இது நீண்ட காலத்தில் மட்டும் ஏற்படக் கூடியதாகும்.
5. உற்பத்திக் காரணிகள் இடம்பெயரும். உற்பத்திக் காரணிகள் அதிக வருமானம் கிடைக்கும் போது ஒரு தொழிற்சாலையில் இருந்து மற்றொரு தொழிற்சாலைக்கு இடம்பெயரும்.
6.போக்குவரத்துச் செலவு இல்லை. ஒரே விலை நிலவுவதால் போக்குவரத்துச் செலவு இடம் பெறுவது இல்லை.
7.அரசின் தலையீடு இல்லை. மந்தனகூட்டு இன்மை.அங்காடி சக்திகள் விலையை தீர்மானிக்கும். வாங்குவோர்க்கும், விற்போருக்கும் இடையே ரகசிய ஒப்பந்தம் இல்லை.

**2.முற்றுரிமையில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ?**
**முற்றுரிமை பொருள்**
முற்றுரிமை என்பது ஒரு பண்டத்தை அங்காடியில் ஒருவரே விற்பனை செய்வதாகும்.ஆகவே போட்டிற்கான வாய்ப்பகள் இல்லை.
**முற்றுரிமையின் பண்புகள்**
1. ஒரே ஒரு உற்பத்தியாளரும் விற்பனையாளரும் இருப்பர் .
2.புதிய நிறுவனங்கள் உள்ளே நுழைய தடை உள்ளது.
3.பதிலி பண்டங்கள் இருக்காது.
4. நிறுவனமும் தொழிலும் ஒன்றே ஆகும்.
5.முற்றுரிமையாளர் மிகை இலாபம் பெறுவார்.




**முற்றுரிமையில் விலை மற்றும் உற்பத்தி நிர்ணயம்**
முற்றுரிமையில் நிறுவனமே தொழிற்சாலையாகும்.அதனால் முற்றுரிமை நிறுவனம் கீழ்நோக்கிச் சரியும் தேவை வளைகோட்டை கொண்டுள்ளது.இறுதிநிலை வருவாய் வளைகோடு AR கோட்டிற்கு கீழ் அமைந்துள்ளது.( MR < AR )

www.Padasalai.Net
Alexis BG Teacher DPHSS V.pet


Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**வரைபட விளக்கம்**

ஒரு முற்றுரிமையாளர் இறுதிநிலைச் செலவை விட இறுதிநிலை வருவாய் அதிகமாக இருக்கும் வரை தொடர்ந்து உற்பத்தி செய்து விற்கிறார்.( MR > MC ) அவரது சமநிலை உற்பத்தியானது இந்த புள்ளிக்கு மேல் உற்பத்தியாளர் தனக்கு நட்டம் ஏற்படம் என்பதை எதிர்பார்த்து விற்பனையை நிறுத்திக் கொள்வார்.3 அலகு உற்பத்தி விற்பனை செய்யப்படுகிறது.3 அலகிற்கு சராசரி வருவாய் ரூ 23.

சராசரி செலவு = ரூ12.67.

ஒர் அலகிற்கான இலாபம் 23–12.67 =12.67

மொத்த இலாபம் =10.33 x 3 = ரூ.30.99

**3. முற்றுரிமை போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ?**

**முற்றுரிமைப் போட்டி**

முற்றுரிமைப் போட்டியில் பல நிறுவனங்கள் வேறுபடுத்தப்பட்ட பண்டங்களை உற்பத்தி செய்து விற்பார்கள். ஒரே பயன்பாட்டிற்கான பண்டங்களை தயாரிக்கும் நிறுவனங்களுக்கிடையே போட்டி நிலவும். ஆனால் நிறைகுறையாக இருக்கும்.எந்த ஒரு விற்பனையாளரும் விலையிலோ அல்லது உற்பத்தியிலோ ஆதிக்கம் செலுத்த முடியாது.

**இயல்புகள்**

**1.**எண்ணற்ற வாங்குவோர் மற்றும் விற்பவர் இருப்பர்.

**2.**நிறுவனங்கள் தங்கள் பண்டத்திற்கான விலையை நிர்ணயிப்பர்.


**3.**பண்டங்கள் வேறுபாடு காணப்படும்.

**4.**தொழிலில் எள்ளெ வெளியேற நிறுவனங்களுக்கு தடையில்லை.

**முற்றுரிமை போட்டியில் விலை, பண்டத்தின் அளவு நிர்ணயம்**

**1.** முற்றுரிமை போட்டியில் வருவாய் கோடுகள் மேல் இருந்து கீழ்நோக்கி சரிந்து செல்லும்.AR கோட்டிற்கு கீழ் MR கோடு அமைந்திருக்கும். வருவாய் வளைகோட்டின் சரிவானது நிறுவனங்களின் எண்ணிக்கையைப் பொருத்து அமைந்திருக்கும்.

**2.**செலவுக்கோடுகள் U வடிவத்தில் இருக்கும். AC கோட்டின் மிகத்தாழ்வான புள்ளியை MC கோடு வெட்டிச்செல்லும்.நிறுவனச்சமநிலை முற்றுரிமைப் போட்டியில் நிறுவனச்சமநிலையானது MC=MR என்ற நிலையில் இருக்கும்.




**வரைபட விளக்கம்**

**1.**E என்ற புள்ளியில் நிறுவனம் சமநிலையில் உள்ளது.

**2.**OP என்பது சமநிலை விலை OM என்பது சமநிலை உற்பத்தி

**3** .PQRS என்பது நிறுவனம் ஈட்டும் அதிகப்படியான லாபம்.

**4.** முற்றுரிமைப் போட்டியில் அதிகப்படியான லாபம் அல்லது நஷ்டம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**4. சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக.**

**சில்லோர் முற்றுரிமை.**

இங்கு சில நிறுவனங்களே ஒரே மாதிரியான அல்லது வித்தியாசமான பண்டங்களை உற்பத்தி செய்யும். எ.கா. எண்ணெய் மற்றும் வாயு.

**இயல்புகள்.**

1. பெரிய நிறுவனங்கள் உற்பத்தி மற்றும் தேவையைக் கட்டுப்படுத்தும்.
2. சார்புத்தன்மை. ஒரு நிறுவனத்தின் விலை மற்றும் உற்பத்தி தீர்மானம் அதன்போட்டி நிறுவனத்தின் செயல்பாடுகளைச் சார்ந்திருக்கும்.
3. குழுவாகச் செயல்படவேண்டி அவசியத்தை அறிந்திருப்பர்.
4. விளம்பரச் செலவின் அவசியத்தை அறிந்திருப்பர்.
5. விலையை மாற்றி அமைப்பது என்பது இந்த அங்காடியில் கடினம் ஆகும்.

**5.நிறைவுப் போட்டியில் விலையும் உற்பத்தி அளவும் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?**


**நிறைவுப் போட்டி இலக்கணம்**

ஒவ்வொரு உற்பத்தியாளரின் உற்பத்தியும் முழு நெகிழ்ச்சியுடைய தேவையைக் கொண்டிருக்கும் நிலையே நிறைவு போட்டி–ஜோன் ராபின்சன்.

**நிறைவுப் போட்டியின் இயல்புகள்**

1.எண்ணற்ற விற்போரும் வாங்குவோரும் இருப்பர்.
2.ஒரியல்பான பண்டங்களும் ஒரே மாதிரியான விலையும் நிலவும்.
3.உட்புகுதல் மற்றும் வெளியேறுதல் நிறுவனங்களுக்கு தடையில்லை.
4.போக்குவரத்து செலவு இல்லை.
5.உற்பத்தி காரணிகள் இடம் பெயரும்

**குறுகிய காலத்தில் நிறைவுப் போட்டியில் உற்பத்தியும் விலை நிர்ணயமும்.**




**வரைபட விளக்கம்**

**1.முதல் பகுதி வரைபடத்தில்** அனைத்து நிறுவனங்களின் தேவை மற்றும் அளிப்பு சக்திகள் சந்திக்கின்றன. இதில் நிலையான விலை ரூ.10.தொழிற்சாலை சமநிலை உற்பத்தி 50 அலகுகள் ஆகும்.

**2.இரண்டாம் பகுதி வரைபடத்தில்** சராசரி வளைகோடு விலைக்கோட்டை விட குறைவாக உள்ளது. MC=MR என்ற நிலையில் சமநிலை அடைகிறது.சராசரி செலவு ரூ8 ஆகவும் சராசரி வருவாய் ரூ 10 ஆகவும் உள்ளது.

மொத்த வருவாய் = 50x10=500

மொத்த செலவு = 50x8=400

மொத்த இலாபம்= 500–400 =100

**3. மூன்றாம் பகுதி வரைபடத்தில்** நிறுவனத்தின் செலவுக்கோடு விலைக்கோட்டிற்கு மேலே உள்ளது. அதே விலையில் ( ரூ.10) 50 பண்டங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் செலவு ரூ.12 ஆக உள்ளது.

மொத்த வருவாய் = 50x10=500

மொத்த செலவு = 50x12=600

இலாபம் / நட்டம்= 500–600 = -100

மொத்த நட்டம் = 500–600 = **-100**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# LESSON-6

## SECTION-II

**1. பகிர்வு என்றால் என்ன ?**

நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு வருவாயை பகிர்ந்தளிப்பதை பகிர்வு என்கிறோம்.
நிலம்—–வாரம் உழைப்பு—–கூலி மூலதனம்——வட்டி அமைப்பு—–இலாபம்

**2. பகிர்வின் வகைகள் யாவை ?**

தனிநபர் பகிர்வு–நாட்டு வருமானத்தை தனிமனிதர்களிடையே பகிர்ந்தளிப்பது.
பணிசார்பு பகிர்வு–நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு வருவாயை பகிர்ந்தளிப்பது.

**3. வாரம் வரையறு.**

வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும். ரிக்கார்டோ.

**4. உண்மைக்கூலிக்கும் பணக்கூலிக்கும் உள்ள வேறுபாடு யாது ?**

**உண்மைக் கூலி** என்பது பணத்தின் வாங்கும் சக்தியைப் பொருத்து அமையும்.
**பணக்கூலி** என்பது பெயரளவுக் கூலி அல்லது இயல்புக் கூலி ஆகும்.

**5. வட்டி பற்றி நீ அறிவது யாது ?**

மூலதனத்திற்கான வெகுமதியே வட்டி ஆகும்.அங்காடியில் முதலைப் பயன்படுத்திக் கொள்வதற்காக கொடுக்கப்படுவது வட்டி.

**6. இலாபம் என்றால் என்ன ?**

தொழில் முனைவோரின் தொழில் திறமையை பயன்படுத்திக் கொள்வதற்காக வழங்கப்படும் வெகுமதியே இலாபம் ஆகும்.

**7. நீர்மை விருப்பத்தின் பொருள் யாது ?**

ரொக்கப் பணமாக கையில் வைத்திருப்பதே நீர்மை விருப்பம். மற்ற வடிவத்தைக் காட்டிலும் விருப்பத்திற்கேற்ப ரொக்கப் பணமாக கையில் வைத்திருக்கும் ரொக்க அளவே நீர்மை விருப்பம். ஆகும்.

## SECTION-III

**1. பணத் தேவைக்கான நோக்கங்கள் யாவை ?**

1.பரிமாற்ற நோக்கம் 2. முன்னெச்சரிக்கை நோக்கம். 3. ஊக வாணிப நோக்கம்.

**2. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.**

கூலி நான்கு வகைப்படும்
1. பெயரளவுக் கூலி அல்லது பணக்கூலி– பணமாக வழங்கப்படும் 2. உண்மைக்கூலி
3. துண்டுகூலி–முடிக்கப்பட்ட வேலையின் அடிப்படையில் கூலி வழங்குவது
4. நேரக்கூலி–நேரத்தின் அளவைப் பொருத்து கூலி வழங்குவது

**3. வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.**

**வாரம்** என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்கு கொடுப்பதேயாகும். ரிக்கார்டோ.
இயந்திரங்களிலிருந்தும் உற்பத்திக்காக மனிதனால் உருவாக்கப்பட்ட கருவிகளிலிருந்தும் பெறப்படும் வருமானமே **போலி வாரம்** எனப்படும் என்று மார்ஷல் கூறுகின்றார்.

A.Alexis PG Teacher DBHSS V.Pet www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**4. பிழைப்பு மட்ட கூலிக் கோட்பாட்டை விளக்குக.**

இக் கோட்பாட்டின்படி தொழிலாளிக்கு கொடுக்கப்படும் கூலியானது அவரது அடிப்படைத் தேவையை மட்டுமே பூர்த்தி செய்வதாக இருக்கும். இதற்கும் குறைவாக கூலி வழங்கினால், பட்டினியால் இறக்க நேரிடும். அது உழைப்பின் அளிப்பை குறைக்கும்.

**5. சும்பீட்டரின் புத்தாக்க இலாப கோட்பாட்டினை விவரி.**

புத்தாக்கம் புனைவதற்கான வெகுமதியே இலாபமென்று சும்பீட்டர் கருதுகின்றார். தொழில்முனைவோரின் புத்தாக்க நடவடிக்கைகளால், பொருளாதார முன்னேற்றமும் சமுதாய மாற்றங்களும் ஏற்படுகின்றன. எனவே புத்தாக்கத்திற்கு இலாபத்தை பெறுகிறார்.

**6. இயங்கு நிலை இலாபக் கோட்பாட்டினை கூறுக.**

இக்கோட்பாட்டினாசிரியர் கிளார்க் ஆவார். மக்கள் தொகை அளவு, முலதன அளிப்பினளவு, தொழில்நுட்பம், தொழில் அமைப்பு, மற்றும் விருப்பங்கள் ஆகிய சமுதாய மாற்றங்களின் விளைவாகத் தோன்றுவதே இலாபம் ஆகும்.

**7. இடர்தாங்கும் இலாபக்கோட்பாடு. விவரி?**

தொழில்முனைவோரின் இடர்தாங்கும் திறமைக்காக அளிக்கப்படும் வெகுமதியே லாபம் என்று பேராசிரியர் ஹாவ்லி குறிப்பிடுகிறார். இடர்தாங்குதலும், இலாபம் ஈட்டுதலும் ஒருங்கிணைந்து செல்லும். இக்கோட்பாட்டின் முக்கிய குறைபாடு தெரிந்த இடர்கள், தெரியாத இடர்கள் இவற்றிக்கிடையே உள்ள தொடர்பை இக்கோட்பாடு வேறுபடுத்தவில்லை.

**SECTION-IV.**

**1. இறுதிநிலை உற்பத்தி திறன் பகிர்வுக் கோட்பாட்டினை விவரிக்கவும்?**

இறுதிநிலை உற்பத்தித்திறன் பகிர்வு கோட்பாடு


இக்கோட்பாடு பல்வேறு உற்பத்திக் காரணிகளுக்கு, எவ்வாறு விலைகளை நிர்ணயிப்பது என விளக்குகிறது. இக் கோட்பாடு காரணிகளின் பொதுப் பகிர்வுக் கோட்பாடு அல்லது தேசிய ஈவுத் தொகை பகிர்வுக் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது.

**எடுகோள்கள்**

**1.**அனைத்துக் காரணிகளும் ஒரு மித்த தன்மை கொண்டவை.
**2.**.முழு வேலைநிலை நிலவுகிறது.
**3.** குறைந்து செல் விளைவு விதியை அடிப்படையாகக் கொண்டது.
**4.** நீண்ட காலத்திற்கு மட்டுமே இவ்விதி பொருந்தும். **5.** நிறைவுப்போட்டி நிலவுகிறது

**நிறைவுப்போட்டிச் சந்தையில் கூலி நிர்ணயம்**

இறுதிநிலை உற்பத்தித்திறன் பகிர்வுக் கோட்பாட்டின் படி ஒவ்வொரு காரணியும் அதனுடைய இறுதிநிலை உற்பத்தி திறனுக்கு ஏற்ப வெகுமதி பெறும். ஓர் உற்பத்தியாளர் காரணியின் உற்பத்தித் திறனுக்கேற்ப அவர் விலை கொடுப்பார். காரணியின் உற்பத்தித் திறன் அதிகமாக இருக்கும் பொழுது அதன் வெகுமதி அதிகமாக இருக்கும். காரணிகளின் விலை அதன் இறுதிநிலைவருவாய் உற்பத்திக்குச் சமமாகும் வரை கூடுதல் அலகுகளை பணியில் அமர்த்தி இலாபம் அடைகிறார்.






Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**வரைபட விளக்கம்**

1. X அச்சில் காரணியின் அலகுகளும் Y அச்சில் காரணியின் விலை மற்றும் வருவாய் உற்பத்தியும் குறிப்பிடுகின்றன.
2. MRP– என்பது இறுதிநிலை வருவாய் உற்பத்தி வளைகோடு.
 ARP –என்பது சராசரி வருவாய் உற்பத்தி வளைகோடு.
3. வரைபடத்தில் நிறுவனம் Q என்ற புள்ளியில் சமநிலை அடைகிறது. அப்புள்ளியில் ON அலகு காரணிகளை OP விலைக்கு பணியமர்த்தி உள்ளது. இங்கு MFC=MRP ஆக உள்ளது. Q என்ற புள்ளியில் காரணியின் இறுதிநிலைவருவாய் உற்பத்தியும், சராசரி வருவாய் உற்பத்தியும் சமமாக உள்ளன.
4. Q புள்ளிக்கு மேல் எந்த ஒரு உற்பத்தியாளரும் காரணிகளை புதிதாக பணியமர்த்த மாட்டார். ஏனெனில் அதற்கு மேல் காரணிக்கு கொடுக்கும் விலை இறுதிநிலைவருவாய் உற்பத்தியையும், சராசரி வருவாய் உற்பத்தியையும் விட அதிகமாக இருக்கும். இது அவருக்கு இழப்பை உண்டாக்கும். அப்பொழுது உழைப்பாளர்களை பணியில் அமர்த்துவதை நிறுவனம் குறைத்துக் கொள்ளும்.

**2. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.**


இக்கோட்பாடு பழமையான கோட்பாடுகளில் ஒன்றாகும்.

**இலக்கணம்**

வாரம் என்பது நிலத்தின் விளைச்சலில் இருந்து ஒரு பகுதியை நில உரிமையாளருக்குகொடுப்பதேயாகும்.

**விளக்கம்**

ரிக்கார்டோ வாரக்கோட்பாட்டை குடியேற்றத்தின் மூலம் விளக்குகிறார். மக்கள் புதிய இடத்தில் குடியேறும் பொழுது முதலில் செழுமையான நல்ல நிலத்தையே பயிர் செய்வர். அதிக மக்கள் குடியேறும் போது நிலத்தின் தேவை அதிகரிக்கும் அதனால் இரண்டாம் தர நிலத்தை அவர்கள் பயிர் செய்வர்.இந்நிலையில் முதல் தர நிலம் வாரத்தைப் பெறும். மக்கள்தொகை அதிகரிப்பதால், மூன்றாம் தர நிலமும் பயிர் செய்யப்படும். அப்பொழுது இரண்டாம் தர நிலம் வாரத்தைப் பெறும்.மேலும் முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும். மூன்றாம் தர நிலம் எவ்விதவாரத்தையும் பெறாது. இது வாரமில்லா நிலம் இதை வரைபடம் மூலம் விளக்கலாம்.




**வரைபடவிளக்கம்**

கோடிட்ட பகுதி வாரத்தை குறிக்கும்

**I.** முதல் தரநிலம் அதிக வாரத்தைப் பெறும்.

**II.** இரண்டாம் தர நிலம் குறைந்த வாரத்தைப் பெறும்.

**III.** மூன்றாம் தர நிலம் எவ்வித வாரத்தையும் பெறாது.

இது வாரமில்லா நிலம்

**திறனாய்வு**

1. உழைப்பு,முதல் ஆகியவற்றிக்கும் வாரம் உள்ளதாக நவீன பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.
2. ஒரு நிறுவனத்தைப் பொருத்தவரை வாரம் விலையோடு அடங்கும்.
3. நிறைவுப்போட்டி என்பது நடைமுறையில் இல்லை.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**3. கடன் நிதி வட்டிக்கோட்பாட்டினை விவரி?**

1. கடன் நிதிக் கோட்பாடு புதிய தொன்மைக் கோட்பாடு எனவும் அழைக்கப்படுகிறது.இக் கோட்பாட்டை சுவீடன் நாட்டைச் சேர்ந்த பொருளியல் வல்லுநர்கள் விக்செல் ,பெர்டில் ஒலின், வைனர் மற்றும் குன்னர் மிர்தால் ஆகியோர் மேம்படுத்தினர்.
2. கடன் நிதிகளை பயன்படுத்திக் கொள்ள வழங்கப்படும் விலையே வட்டி ஆகும்.
3. கடன் அங்காடியில் கடன் நிதியின் தேவை மற்றும் அளிப்பின் சமநிலைப் புள்ளியில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகிறது.

**கடன் நிதிகளின் தேவை**

1.முதலீட்டுத் தேவை
2.நுகர்வுத் தேவை
3.பதுக்குவதற்கான தேவை


**கடன் நிதிகளின் அளிப்பு**

1.சேமிப்பு ( தனி நபர்களின் திட்டமிட்ட சேமிப்பு மற்றும் திட்டமிடாத சேமிப்பு )
2.வங்கிக் கடன்
3.பதுக்கியதை மீட்டல்
4.முதலீடு செய்யாதிருத்தல்

**சமநிலை**

கடன் நிதிகளின் தேவை மற்றும் அளிப்பின் சமநிலையில் வட்டி விகிதம் தீர்மானிக்கப்படுகிறது.அதாவது பணத்திற்கான தேவைக்கோடும் அளிப்புக்கோடும் சந்திக்கும் இடத்தில் வட்டி வீதம் தீர்மானிக்கப்படுகிறது.

**வரைபடம்**




**வரைபட விளக்கம்.**

X–அச்சில் கடன்நிதிகளின் தேவை மற்றும் அளிப்பு குறிக்கப்பட்டுள்ளது.Y–அச்சில் வட்டி வீதம் குறிக்கப்பட்டுள்ளது.LS கோடு மொத்த கடன் நிதிகளின் அளிப்புக்கோடாகும்.கடன் நிதிகளின் தேவைக்கோடு LD கோடு ஆகும்.இந்த LD கோடும் LS கோடும் E என்ற புள்ளியில் வெட்டிக்கொள்கின்றன.இது சமநிலைப் புள்ளி ஆகும்.இந்தப் புள்ளியில் வட்டி வீதம் OR. கடன் நிதிகளின் அளவு OM ஆகும்.

**திறனாய்வு**

1.வட்டி வீதத்தை தீர்மானிக்கும் பல காரணிகள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.ஆனாலும் சரியான செய்திப் பரவலின்மை மற்றும் ஒழுக்கக்கேடுகள் போன்ற காரணிகள் இன்று மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.
2.உண்மைக் காரணிகளான சேமிப்பு மற்றும் முதலீடு ஆகியவற்றுடன் தொடர்புபடுத்துவது கடினம்.

**4. கீன்சின் வட்டிக் கோட்பாட்டினை விவரி?**

**நீர்மை விருப்பத்தின் விளக்கம்**

நீர்மை விருப்பம் என்பது மக்கள் பத்திரங்கள் பங்குகள் மாற்றுச்சீட்டுகள் நிலம் கட்டிடம் தங்கம் போன்றவைகளாக அல்லாமல் ரொக்க பணமாக கையில் வைத்திருப்தே ஆகும்.கீன்ஸ் கருத்தின்படி நீர்மைத் தன்மையின் பகுதியை குறிப்பிட்ட காலத்திற்கு விட்டுக்கொடுப்பதற்காக வழங்கப்படும் வெகுமதியே வட்டி ஆகும்.




Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**பணத்தேவைக்கான நோக்கங்கள்**

1. பரிமாற்ற நோக்கம்
2. முன்னெச்சரிக்கை நோக்கம்.
3. ஊகவாணிக நோக்கம்.


**கீன்சின் வட்டிக் கோட்பாடு.**

வட்டி வீதத்தை தீர்மானிப்பதில் ஊகநோக்கம் முக்கியத்துவம் வாய்ந்தது. நீர்மை விருப்பம் மற்றும் பணத்திற்கான தேவை ஆகிய இரண்டும் சமநிலையில் வட்டி வீதத்தை தீர்மானிக்கின்றன.இங்கு பண அளிப்பு மாறாது.இதை கீழ்கானும் வரைபடத்தின் மூலம் விளக்கலாம்.




**வரைபட விளக்கம்.**

L என்பது நீர்மை விருப்பக் கோடாகும்.M2 என்பது ஊக நோக்கத்திற்கான பண அளிப்புக் கோடாகும். இரு கோடுகளும் E என்ற புள்ளியில் வெட்டிக் கொள்கின்றன.இதுவே சமநிலைப் புள்ளியாகும்.ஆகவே வட்டி வீதம் என்பது I ஆகும். நீர்மை விருப்பம் L P-யிலிருந்து L1 P1 ஆக உயர்ந்தால், பண அளிப்பானது மாறாமல் இருப்பதால் வட்டி விகிதம் OI லிருந்து OI1 ஆக உயரும்.




ஒரு வேளை L ( பணத்தேவை )மாறாமல் இருப்பதாக வைத்துக்கொள்வோம் .பண அளிப்பு OM ஆக இருக்கும் போது வட்டி OM2 ஆக இருக்கும். பண அளிப்பு OM2 விலிருந்து OM3 ஆக குறைக்கப்படும் போது வட்டி O12 விலிருந்து O13ஆக உயரும். இதே போல பண அளிப்பு OM2 லிருந்து OM4 ஆக உயர்கிற பொழுது வட்டி O12 லிருந்து O14 ஆக குறையும்.

**திறனாய்வு.**

1.குறிப்பிட் ஒரு காலத்திலேயே பல்வேறு பட்ட வட்டி விகிதம் சந்தையில் இருப்பதை இக.கோட்பாடு விளக்கத் தவறி விட்டது.

2.குறுகிய கால வட்டி வீதம் பற்றி மட்டுமே இது விளக்குகிறது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## LESSON–7
## PART-B

**1. பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக.**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினால் குறிக்கப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பைக் குறிக்கும்.

**2. முன்னேறிய பொருளாதாரத்தின் இரண்டு இயல்புகளைகூறுக.**

1. உயர்ந்த நாட்டு வருமான வளர்ச்சி. 2. உயர்ந்த தனி நபர் வளர்ச்சி

**3. இயற்கைவளங்களைப் பற்றிக்குறிப்பு வரைக.**

ஒரு நாட்டில் இயற்கையிலிருந்து பெறப்படும் வளங்கள் இயற்கை வளங்கள். காடு, நீர், கனிம வளங்கள் மற்றும் ஆற்றல் சக்திகள் ஆகியன முக்கிய இயற்கை வளங்கள் ஆகும். .

**4. இந்திய பொருளாதாரத்தின் ஏதேனும் ஒரு இயல்பினைக்கூறு.**
**இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்**

இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் பொருள் தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து சீரிய முறையில் செயல்படுவது.

**5.புதுப்பிக்கப்பட இயலாத ஆற்றல் வளங்கள் தருக**

புதுப்பிக்கஇயலாத வளங்கள்: மீண்டும் உருவாக்கப்பட முடியாத நிலைத்து இருக்க முடியாதவைகள்.
**எ.கா.** படிம எரிபொருட்கள் நிலக்கரி, பெட்ரோலியம் கனிமங்கள் போன்றன.

**6.'தொழில்நுட்பத் தெரிவு" பற்றி சென் கூறுவது என்ன ?**

உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் மூலதன செறிவு நுட்ப முறையில், வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று சென் குறிப்பிடுகிறார்

**7. குறைந்த தலாவருமானம் இருக்க காரணங்களாக ராவ் கூறுவதைப் பட்டியலிடுக**

1.முறையற்ற நிலவுடைமை, 2. முதலீடு இன்மை 3. வேளாண்மையில் அதிக மக்கள் தொகை அழுத்தம்
4. பேரளவு தொழில்துறை இன்மை

## PART-C

**1. பொருளாதார முன்னேற்றம் – வரையறு .**

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது பொதுவாக அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியால் மட்டும் குறிப்பிடப்படுவதன்றி, அந்நாட்டு மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

**2. வேளாண்மை பொருளாதாரம் பற்றி அம்பேத்கர் பொருளாதார கருத்துக்களை கூறுக.**
**வேளாண்மைபொருளாதாரம்**

1918–ல் அம்பேத்கர் இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள் என்ற கட்டுரையை எழுதினார். ஆடம்ஸ்மித்தின் 'நாடுகளின் செல்வத்தைப் போல்' நிலவுடைமை ஒருங்கிணைப்பு மற்றும் நிலவுடைமை விரிவாக்கம் இவற்றிற் கிடையேயான வேறுபாட்டினை கூறுகிறார்.

**3. கிராம சர்வோதயம் – சிறு குறிப்பு வரைக.**

உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான் என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**4. இந்தியத் திட்டமிடுதலில் நேருவின் அணுகுமுறையை எழுதுக.**

திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை ஜவஹர்லால் நேருவையேச் சேரும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு, திட்டம் அவசியம் என்று அவர் கருதினார். திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன் படுத்துவதை குறிக்கும்– என்கிறார்.

**5. பெருக்கி கருத்தைப் பற்றி V.K.R.V ராவ் பங்களிப்பு எழுதுக.**

'முன்னேற்றம் அடையாத நாடுகளின் முதலீடு, வருமானம் மற்றும் பெருக்கி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு (1952) என்ற ராவ் அவர்களின் புத்தகம் பேரியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு வழங்கியது. நேரடி கொள்கை வடிவமைப்பாளர் என்ற பார்வையில் J.M. கீன்சின் அடிகளை பின்பற்றுகிறார்.

**.6. நலப்பொருளாதாரம் பற்றி அமர்த்தியாசென்னின் கருத்துக்களைஎழுதுக.**

அமர்த்தியா சென் பொருளியியல் அறிஞர் மட்டுமல்ல நன்னெறி தத்துவ அறிஞரும் ஆவார் . அவர் ஏழைகளைக் குறித்து அதிக அக்கரை எடுத்துக் கொண்டார். அவர்களை கல்வி, உடல்நலம், ஊட்டச்சத்து, பாலின சமநிலை , துன்பம் நேரும் காலங்களில் பாதுகாப்பு ஆகியவை வழங்கப் படவேண்டியவர்களாக கருதுகிறார் .

**7. சமூகக் கட்டமைப்புகளை விளக்குக.**

மனித வளங்களை மேம்படுத்துவதும், பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாகத் துணை செய்வதுமான அமைப்புகளை சமூகக்கட்டமைப்புகள் என்கிறோம். (எ.கா) பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் பொது வசதி மற்றும் இதர குடிமை வசதிகள்.

**PART-D**

**1. இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி.**

**1. இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்**

இதன் பொருள் தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்து சீரிய முறையில் செயல்படுவது.

**2. வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது**

இந்தியாவில் 60ரூ மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இந்தியாவில் 17% மொத்த உள்நாட்டு உற்பத்தி வேளாண் துறையிலிருந்தே கிடைக்கிறது.

**3. வளர்ந்து வரும் சந்தை**

முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையே இந்தியாவின் சந்தை பிறநாடுகளுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. இந்தியா குறைந்த முதலீட்டில், அதிகமான வளர்ச்சி சாத்தியங்களைக் கொண்டுள்ளதால் நம் நாடு வேகமாக வளர்ந்து சந்தையாக மாறி இருக்கிறது.

**4. வளர்ந்து வரும் பொருளாதாரம்:**

விரைவான பொருளாதார வளர்ச்சியின் விளைவாக இந்தியப் பொருளாதாரம் G20 நாடுகளில் இடம் பெற்றுள்ளது.

**5. வேகமாக வளரும் பணிகள் துறை**

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்கு பணிகள் துறையின் பங்களிப்பாகும். தகவல் தொழில்நுட்பம், BPO போன்ற தொழில்நுட்ப சேவைகள் பேரளவு வளர்ச்சி பெற்றுள்ளது. இவை பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கின்றன.

**2. இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி.**

**1. இரும்புத்தாது**

இந்தியாவில் உயர்தரமான ஹேமடைட் மற்றும் மேக்னடைட் இரும்புத்தாது அபரிமிதமாகக் காணப்படுகிறது. ஹேமடைட் இரும்புத்தாது அதிகமாக சத்தீஸ்கர், ஜார்கண்ட், ஒடிசா, கோவா மற்றும் கர்நாடகாஆகிய இடங்களில் கிடைக்கிறது. மேக்னடைட் தாது கர்நாடகாவில் உள்ளமேற்கு கடற்கரையில் அதிகம் கிடைக்கிறது. கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரபிரதேசங்களிலும் சில இடங்களில் இரும்புத்தாது காணப்படுகிறது.

A.Alexis.PG Teacher DBHSS-Vpet
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி** சீனா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அடுத்தபடியாக நிலக்கரி உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது. வங்காளம், ஜார்கண்ட் மாநில நிலக்கரி வயல்களிலிருந்து அதிக அளவு நிலக்கரி கிடைக் கிறது.

**3. அலுமினியத்தாது (பாக்சைட்)**

பாச்சைட் அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் முக்கியமான தாது ஆகும். ஒடிசா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் அதிக அளவு பாக்சைட் தாது செறிந்து காணப்படுகிறது.

**4. சுத்திகரிக்கப்படாத எண்ணெய்**

இந்தியாவில் அஸ்ஸாம் மற்றும் குஜராத்தின் பல இடங்களில் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் எடுக்கப்படுகிறது.

**5. தங்கம்**

இந்தியா குறைந்த அளவே தங்க வளம் இருப்பு பெற்று விளங்குகிறது. மூன்று முக்கிய தங்கச் சுரங்கப் பகுதிகள் உள்ளன. கோலார் மாவட்டத்தில் கோலார் தங்க வயல், ரெய்ச்சூர் மாவட்ட த்தில் ஹட்டி தங்க வயல், ஆந்திராவில் உள்ள ராம்கிரி தங்க வயல் சுரங்கத்திலும் ஒரளவு தங்கம் கிடைக் கிறது

**3. பொருளாதார முன்னேற்ற கருத்துகளில் ஜவஹர்லால் நேருவின் பங்கை வெளி கொணர்க.**

**ஜவஹர்லால் நேரு**

நவீன இந்தியாவை கட்டமைத்த முதன்மை சிற்பிகளில் ஒருவர் ஜவஹர்லால் நேரு ஆவார். அவருடைய பொருளாதார கருத்துக்கள் அவர் ஆற்றிய எண்ணற்ற உரைகளிலிருந்தும் அவர் எழுதிய புத்தகங்களிலிருந்தும் நமக்கு கிடைக்கின்றன.

**1. ஜனநாயகம் மற்றும் மதச்சார்பின்மை**

ஜனநாயகத்தை உறுதியாக நம்பியவர் ஜவஹர்லால் நேரு. அவர் வாக்குரிமை, சட்டத்தின் வழி ஆட்சி மற்றும் பாராளுமன்ற ஜனநாயகம் ஆகியவற்றை நம்பியவர். மதச்சார் பின்மை இந்தியாவிற்கு நேரு தந்த மிகப்பெரிய பங்களிப்பு.

**2. திட்டமிடுதல்**

திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை ஜவஹர்லால் நேருவையேச் சேரும்.திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவதைகுறிக்கும் என்கிறார்.

நேரு திட்டமிட்டவளர்ச்சி பெற தொழில்மயமாதல் யுக்த்தியை முன்னெடுக்கிறார். அவர் பிரதமராகப் பணியாற்றிய காலத்தில் தான் பல இந்திய தொழில் நுட்பகழகம் (IIT )மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.

**3. ஜனநாயக சமதர்மம்**

சமதர்மம் என்பது இந்தியாவிற்கு நேருவின் மிகப் பெரிய பங்களிப்பு ஆகும். அவர் நம் இந்தியாவை சமதர்ம சமூகமாககட்டமைக்க விரும்பினார். ஆனால் நேருவின் சமதர்மம் என்பது ஜனநாயக சமதர்மம் ஆகும்.

**4. காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக.**

**மகாத்மா காந்தியடிகள்**

காந்தியப் பொருளாதாரம் நன்நெறியை அடிப்படையாகக் கொண்டது

**1. கிராமக் குடியரசு:** காந்தியடிகள் கிராமங்களில் தான் இந்தியா வாழ்வதாகக் கருதினார். தன்னிறைவு பெற்ற கிராமமாக முன்னேறுவதை அவர் விரும்பினார்

**2. இயந்திரங்கள்:** காந்தியடிகள் இயந்திரங்களை‘மிகப்பெரிய பாவம்’ என்று வர்ணித்தார்.

**3. தொழில்மயம்:** நாட்டின் திறனை முழுவதும் சுரண்டுவதை தொழில்மயம் சார்ந்துள்ளது எனக்கருதினார்.

**4. உற்பத்தி பரவலாக்கம்:** உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய காந்தி அது வீடுகளிலேயே உற்பத்தி நடைபெற வேண்டுமென்றும் விரும்பினார் .

**5. கிராமசர்வோதயா** உண்மையான இந்தியா வாழ்வது கிராமங்களில் தான்’’ என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசார்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றார்.

**6. மக்கள் தொகை :** காந்தி செயற்கையான குடும்பக் கட்டுபாட்டு முறைகளை எதிர்த்தார் . ஆனாலும், சுயகட்டுப்பாடே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சிறந்த வழி என்று கருதினார் .



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## lesson-8 PART- B

**1. இந்தியாவின் காலனித்துவ சுரண்டலின்நிலைகள் யாவை ?**

இந்தியாவின் காலனித்துவ சுரண்டலின் நிலைகளை வரலாற்றுப் பொருளியல் வல்லுநர்கள் மூன்று கட்டங்களாகப் பிரித்தனர். அவை , 1. வணிக மூலதனக் காலம்,
2. தொழில் மூலதனக் காலம், 3. நிதி மூலதனக் காலம்.

**2. சுதந்திரம் அடைவதற்கு முன் இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு வகையான நில உடைமை முறைகள் யாவை ?**

சுதந்திரத்திற்கு முன் மூன்று விதமான நில உடைமை முறைகள் இருந்தன. அவை
1. ஜமீன்தாரி முறை 2. மஹல்வாரி முறை மற்றும் 3. இரயத்துவாரி முறைஆகும்.

**3. மற்ற முறைகளிலிருந்து நில உடைமை முறையை வேறுபடுத்துவதற்கான அம்சங்களைக் கூறு.**

பிறமுறைகளிலிருந்து நில உடைமைமுறை பின்வரும் விதங்களில் வேறுபடுகிறது. அ) நிலம் யாருக்கு சொந்தமானது ? ஆ) நிலத்தில் யார் அறுவடைசெய்வது ?
இ) நில வருவாயை அரசுக்கு செலுத்துவதற்குப் பொறுப்பானவர் யார் ?

**4. பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் யாவை ?**

1. தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது.
2. வறுமை விகிதத்தை 15% ஆக குறைத்தல்
3. வளர்ச்சி இலக்கு 8.0%. ஆக நிர்ணயித்தது.

**5. மனித மேம்பாட்டுக் குறியீட்டெண் (HDI) மற்றும் வாழ்க்கைத்தரக் குறியீட்டெண் (PQLI)–ஆகியவற்றை வேறுபடுத்துக.**

உடல் மற்றும் பணம் சார்ந்த மேம்பாட்டை ( HDI ) குறிப்பிடுகிறது. ( PQLI ) உடல் சார்ந்த மேம்பாட்டை மட்டுமே குறிக்கிறது.

**6. மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணைக் கணக்கிட உதவும் குறியீடுகளை கூறுக.**

மனித வளர்ச்சிக் குறியீட்டெண்ணை, 1. வாழ்நாள் குறியீடு, 2. கல்விக் குறியீடு மற்றும் 3) வாழ்க்கைத்தர குறியீடு, கொண்டு கணக்கிடப்படுகிறது.

**7. பசுமைப் புரட்சியின் பலவீனங்களைப் பட்டியலிடுக.**

1 .நிச்சயமற்ற பருவ மழை காரணமாக வேளாண்மையில் நிச்சயமற்ற நிலைமை நிலவுகிறது.
2.விதைகள் உரங்கள் பூச்சிகொல்லிகள் மற்றும் தண்ணீருக்காக பேரளவு முதலீடு.
3.பெரு சிறு குறு விவசாயிகளுக்கிடையே ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது.

**8. வணிக மூலதனக்காலம் பற்றி விவரி ?**

1752 லிருந்து 1813 வரையிலான காலம் வணிக மூலதனக் காலம் ஆகும். பிரிட்டனில் தொழில் மூலதனத்தை முன்னேற்ற இந்தியா சுரண்டல் பிரதேசமாக கருதப்பட்டது.

## PART- C

**1. ஆங்கிலேயர் காலத்தில் இந்தியக் கைவினைப் பொருட்கள் உற்பத்தி குறைந்தது ஏன் ?**

1. பாகுபாடான சுங்கவரிக் கொள்கைமூலம் பிரிட்டீஷ் அரசு இந்தியக் கைவினைப் பொருட்களை அழித்தது.
2. நவாப் மற்றும் அரசர்கள் காலம் முடிவுக்கு வந்தவுடன், இந்தியக் கைவினைப்பொருட்களைக் காப்பாற்ற எவருமில்லாத நிலைஏற்பட்டது.
3. இந்தியாவில் இரயில்வே அறிகமுகமான பின் பிரிட்டிஷ் பொருட்களுக்கான உள்நாட்டு சந்தை அதிகரித்தது.



www.Padasalai.Net
A.Alexis.PG Teacher DBHSS V.Pet
Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**2. காலனி ஆதிக்கத்தின் போது இந்தியாவில் நடைமுறையில் இருந்த பல்வேறு நில உடைமை முறைகள் பற்றித் தெளிவுபடுத்துக.**

**1 ஜமீன்தாரி முறை அல்லது . நிலச்சுவான்தாரா முறை**

இம்முறையில் நிலச்சுவான்தாரர்களும், ஜமீன்தாரர்களும் விவசாயிகளிடமிருந்து நில வருவாயை பெற்று அரசுக்குச் செலுத்தினர்.

**2. மஹல்வாரி முறை அல்லது இனவாரி முறை**

இம்முறையில் கிராம மக்களாலான குழுவினர் நிலத்தை விவசாயிகளிடம் பிரித்துக் கொடுத்து அவர்களிடமிருந்து வருவாயைப் பெற்று அரசுக்குச் செலுத்தினர்.

**3. இரயத்துவாரி முறை அல்லது சொந்த சாகுபடி முறை**

இம்முறையில் நில உரிமையாளர்கள் நேரடியாக நில வருவாயை அரசுக்குச் செலுத்தினர்.

**3. வணிக வங்கிகள் தேசிய மயமாக்கப்பட்டதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.**

சுதந்திரத்திற்கு முன்னர் வணிகவங்கிகள் தனியார் வசமிருந்தன. இவ்வங்கிகள் அரசாங்கம் திட்டமிடலுக்கான சமூக இலக்குகளை அடைவதற்கு உதவி செய்யத் தவறின. ஆகையால் அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜூலை 19, 1969 அன்று தேசியமயமாக்க முடிவு செய்தது. 1980 ஆம் ஆண்டில், அரசு மேலும் 6 வணிக வங்கிகளை தேசியமயமாக்கியது.

**4. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பற்றி குறிப்பு வரைக**

**பனிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டம் (2012 – 2017)**

1. இதன் முதன்மை நோக்கம் விரைவான மற்றும் நிலையான வளர்ச்சியே ஆகும். இதன் வளர்ச்சி இலக்கு 8 % ஆகும்.
2. இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தில் ஐந்தாண்டு திட்டங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன
3. இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்கள் முறையை சோவியத் ரஷ்யா விடமிருந்து எடுத்துக் கொண்டது.

**5. PQLI என்றால் என்ன ?**

வாழ்க்கைத்தரக் குறியீட்டெண்ணை (PQLI) மோரிஸ் டி.மோரிஸ் .உருவாக்கினார். இது ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை அளவிடப் பயன்படுகிறது. இதற்காக அவர் எதிர்பார்ப்பு ஆயுட்காலம், குழந்தை இறப்பு வீதம் மற்றும் எழுத்தறிவு வீதம் போன்ற மூன்று குறியீடுகளைப் பயன்படுத்தினார்.

உடல் மற்றும் பணம் சார்ந்த மேம்பாட்டை HDI குறிப்பிடுகிறது. PQLஐ உடல் சார்ந்த மேம்பாட்டை மட்டுமே குறிக்கிறது.

**6. 1991 ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையின் ஏதேனும் மூன்று நோக்கங்களைக் குறிப்பிடுக.**

1. தொழில் துறையில் போட்டியை ஊக்குவித்தல்
2. தனியார் நிறுவனங்களை அதிக அளவு ஈடுபடச் செய்தல்
3. வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தி பன்னாட்டு அளவில் போட்டியிட்டு முன்னேறுதல்.

## PART-D

**1. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க ?**

1. வாஸ்கோடகாமா கோழிக்கோட்டிற்கு வந்ததற்குப் பின்னரே இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுடனான கடல் வாணிகம் ஆரம்பித்தது.
2. ஆங்கிலேயர்கள் இந்தியப் பெருங்கடல் வழி வாணிகத்தைத் தொடங்கினர். இந்தியாவின் பல்வேறு பகுதிகளை மெதுவாக ஆக்கிரமிப்பு செய்தனர்..
3. பிளாசிப் போருக்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தது.
4. கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து அதிகாரம் ஆங்கிலேயருக்கு மாற்றப்பட்ட போது இந்திய பொருளாதார நிலைமையை முழுவதுமாக மாற்ற இயலவில்லை .
5. பிரிட்டன் நாடு, இந்தியாவைக் காலனி ஆதிக்கத்தின் கீழ் 200 ஆண்டுகளுக்கும் மேலாக சீரழித்து வந்தது.



www.Padasalai.Net A.Alexis.PG.Teacher.DBHSS.V.Pet

**6.** காலனி ஆதிக்க சிதைப்பின் அடிப்படையில் முழு காலத்தையும் வரலாற்றுப் பொருளியல் வல்லுநர்கள் மூன்று கட்டங்களாகப்பிரித்தனர்.
அவை,
1. வணிக மூலதனக் காலம்,
2. தொழில் மூலதனக் காலம்
3. நிதி மூலதனக் காலம்

**2. பொருளாதார முன்னேற்றத்தில் சிறு தொழில் நிறுவனங்களின் பங்கினை விவரி**
1) சிறு தொழில்கள் மூலம் வேலைவாய்ப்பு
2) சிறு தொழில் தரும் சமமான மண்டல வளர்ச்சி.
3 உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது
4.மூலதனபயன்பாடு முழுமை பெற சிறு தொழில் வழி வகுக்கிறது
5. சிறு தொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது.
6. பெரிய அளவிளான தொழில்களுக்கு சிறு தொழில் நிறுவனங்களின் பங்கு
7. சிறு தொழில் நிறுவனங்கள் நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுகின்றன.
8. சிறு தொழில் நிறுவனங்கள் தொழில் முனைவோர்களை உருவாக்குகின்றன .

**LESSON -9**
**PART-B**

**1.இந்தியப் பொருளாதாரத்தில் கட்டமைப்பு சீர்திருத்தத்தை செயல்படுத்த காரணம் என்ன ?**
வெளிநாட்டு வாணிபக் கணக்கில் பேரிழப்பு ஏற்பட்டு இருந்தது. எனவே இந்தியா நாட்டின் கட்டமைப்பை மேம்படுத்தும் கொள்கைகளை அறிமுகப்படுத்தியது

**2. LPG கொள்கையை செயல்படுத்த காரணம் என்ன ?**
LPG கொள்கையை செயல்படுத்த காரணம் புதிய பொருளாதாரக் கொள்கைகளை செயல்படுத்த.

**3. தனியார் மயமாக்கல் என்றால் என்ன ?**
பொதுத்துறையின் நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதைக் குறிக்கும்.

**4. முதலீட்டை திரும்பப் பெறுதல் வரையறு.**
பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது முதலீட்டு விலக்கம் M எனப்படும்.

**5. நிதிச் சமநிலையின்மையைக் கட்டுப்படுத்த 1991–92 ல் ஏற்படுத்தப்பட்ட கொள்கை முயற்சிகள் மூன்றினைக் கூறுக.**
1. தாராளமயம், 2. தனியார்மயம் மற்றும் 3. உலகமயமாதல்

**6. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன ?**
நிதி குறைபாடுகளைச் சமாளிக்கவும், நேரடி முதலீட்டை ஈர்க்கவும் 2000ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் உருவாக்கபட்ட கொள்கைகள் சிறப்புப் பொருளாதார மண்டலம் எனப்படும்.

**7. மத்திய மற்றும் மாநில அரசுகள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் உட்கூறுகளைக் கூறுக.**
பெரிய உணவுப்பூங்கா, ஒருங்கிணைந்த குளிர் இணைப்பு, மதிப்புக் கூட்டி பாதுகாக்கும் கட்டமைப்பு, மற்றும் நவீன இறைச்சி வதைக் கூடங்கள்.



A.Alex PG Teacher DBHSS V.Pet
www.Padasalai.Net

PART-C

**1. தனியார் மயமாக்கலின் நன்மைகளை எவ்வாறு நியாயப்படுத்தலாம் ?**

அரசு உரிமைக் கொள்கைகளைச் சற்றே தளர்த்துவது மற்றும் பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறைக்குப் போதுமான வாய்ப்புகளை வழங்கப்பட்டதால் தனியார் மயமாதல் அவசியமானது.

**2. உலக மயமாக்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரி.**

உள்நாட்டுப் பொருளாதாரத்தையும் ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பது உலகமயமாதல் எனப்படும்.

**நடவடிக்கைகள்** 1. சுங்க வரிக் குறைப்பு மற்றும் சுங்க வரி தவிர்ப்பு

2. நேரடி முதலீடு (FDI) மற்றும் அயல்நாட்டு தொகுப்பு முதலீடு

**3. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை பற்றி குறிப்பு வரைக**

1. இதில் 51 சதவீத பங்குகள் வரை அயல்நாட்டு நேரடி முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டது.
2. அயல்நாட்டு நேரடி முதலீடு மற்றும் அயல்நாட்டு தொகுப்பு முதலீடு ஆகியவற்றிற்கு இலகுவான வழி திறந்துவிடப்பட்டது.
3. இந்த நடவடிக்கை நாட்டில் தொழில் துறையில் போட்டியை ஏற்படுத்தி வணிகச் சூழலை மேம்படுத்தியுள்ளது.

**4. குளிர் பதனக் கிடங்கு பற்றி விவரிக்க.**

1. பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தியில் இந்தியா உலகஅளவில், மிகப் பெரிய உற்பத்தியாளராக விளங்குகிறது.
2. விரைவில் அழுகும் தன்மையுடைய பழங்கள் மற்றும் காய்கறிகள் சந்தைப்படுத்துவதில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
3.இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க, இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம், அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி,"குளிர்பதன கிடங்கு ஆணை 196 என்பதை ஏற்படுத்தியது.

**5. விவசாய உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளை விவரிக்க.**

1. வேளாண் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்
2. சந்தை சார்ந்த விரிவாக்க பணிகளைச் செய்தல்.
3. பொது மற்றும் தனியர்களிடையே கூட்டுறவை வளர்ச்சி பெறச் செய்தல்.
4. வேளாண் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வருதல்.
5. விற்பனை செய்த அதே நாளில் விவசாயிகளுக்குப் பணம் செலுத்துவதை உறுதி செய்தல்.

**6. புதிய வர்த்தகக் கொள்கையின் சாராம்சத்தை விளக்குக.**

1991 முதல் செயல்பட்டு வரும் புதிய வர்த்தகக் கொள்கையின் முக்கிய அம்சங்களாவன

1. ஏறத்தாழ அனைத்து இடைவினை மற்றும் மூலதனப் பண்டங்களுக்கான இறக்குமதி சுதந்திரமாக்கப்பட்து.
2. இறக்குமதி வரி 300 சதவீதத்திலிருந்து 150 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது.
3. அடுத்தடுத்த நிதி அறிக்கைகளில், சுங்க வரியைப் படிப்படியாகக் குறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்ப ட்டது.

**7. GST என்றால் என்ன ? அதன் நன்மைகளை எழுது**

GST என்பது நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும்.

**நன்மைகள்**

1. அடுக்குவரி விளைவுகளை நீக்கியது.
2. ஒருமுனை வரியாக உள்ளது.
3. இணைய வழி வசதி மூலம் எளிமைப் படுத்தப்பட்டுள்ளது.
4. மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

PART-D

**1. தொழிற் கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை விளக்குக.**

தொழிற் கொள்கையில் அரசு எடுத்த முக்கிய முயற்சிகள்.

**1. தொழில் உரிம விலக்களித்தல்**

1991–ன்புதிய தொழிற் கொள்கையின் முக்கிய அம்சம் என்னவெனில் தொழிலிலுக்கு உரிமம் பெறுவதிலிருந்து விலக்களித்தல்

**2. தொழிற் துறையில் உள்ள ஒதுக்கீட்டை நீக்குதல்**

தற்போது தொழிற் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு பெரும்பாலன தொழில்கள் தனியார் துறைக்கு திறந்துவிடப்பட்டது.

**3. பொதுத்துறை தொடர்பான சீர்திருத்தங்கள்**

நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுனங்களை தனியாரிடம் ஒப்படைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

**4. முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டுச் சட்டத்தை( MRTP ) ஒழித்தல்**

இக்கொள்கை தனியார் துறையில் போட்டியை ஏற்படுத்தவும், வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்க்கவும் செய்தது.

**5. வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை**

இதில் 51 சதவீத பங்குகள் வரை அயல்நாட்டு நேரடி முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டது.

**2. சிறப்பு பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.**

**நோக்கங்கள்**

1. அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்தல்.
2. பன்னாட்டு வியாபாரத்தில் அல்லது உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்.
3. கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளைஉருவாக்குதல்.
4. வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.
5. கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.

**இயல்புகள்**

1. பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்.
2. தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுவது.
3. நெமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்.
4. தனிப்பட்ட விருப்பப் பகுதியைக் கொண்டது.
5. தாரளமய பொருளாதார சட்டத்தால் நிர்வகிக்கப்படுகிறது.

**3. 2015–2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி–இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.**

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று 2015–2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிபக் கொள்கையை அறிவித்தது.

**சிறப்பம்சங்கள்**

1. ஏற்றுமதி உதவிகளை 25 சதவீத அளவு குறைக்கவும், இந்தியப் பொருட்களை ஊக்குவிக்கவும் இந்திய தயாரிப்பு என்ற கருத்த உருவாக்கப்பட்டது.
2. டிஜிட்டல் இந்தியா முறைப்படி, வரித்தாக்கல், முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி தயாரிக்கப்படுகின்றது.
3. ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை
4. பாதுகாப்பு, இராணுவக் கிடங்கு, விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவை தொடர்பான ஏற்றுமதிக் கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்களாகும்
5. தற்போது உலக வர்த்தகத்தில் 3 % மாக இருக்கிற இந்தியாவின் பங்கை 2020–க்குள், இரு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

A.Alexis,PG Teacher DBHSS.V.Pet
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# LESSON–10

## பகுதி – ஆ

**21. ஊரக பொருளாதாரம் –– வரையறு.**

ஊரக பொருளாதாரம் பொருளாதார கொள்கைகளை பயன்படுத்தி, ஊரகபகுதிகளை வளர்ச்சியடையச் செய்வதைக் குறிக்கிறது

**22. ஊரக வளர்ச்சி என்றால்என்ன ?**

ஊரக வளர்ச்சி என்பது ஊரகபகுதிகள், ஊரகமக்கள் ,ஊரக வாழ்க்கை ஆகியவற்றை மேம்படுத்தும் முறையாகும்.

**23. ஊரக ஏழ்மை வரையறு.**

கிராமங்களில் அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்வதற்கு தேவையான வருமானத்தை ஈட்ட முடியாத நிலையை ஊரகவறுமை எனலாம்.

**24. திறந்தநிலை வேலையின்மை என்றால் என்ன ?**

வேலைக்குத் தயாராக இருந்தும் எந்த வேலையும் கிடைக்காமல் வேலையில்லாத நிலையில் இருப்பது ஆகும்.

**5. மறைமுக வேலையின்மை என்றால் என்ன ?**

வேலையிலிருந்து சிலரை நீக்கினாலும் உற்பத்தியின் அளவு குறையாது. ஏனென்றால் அவர்களின் இறுதிநிலைஉற்பத்தித்திறன் ஒன்றுமில்லை. இதுவே மறைமுக வேலையின்மை எனப்படும்.

**26. குடிசை தொழில் வரையறு.**

பொதுவாக குடிசைத் தொழில்கள் விவசாயத்தையே சார்ந்துள்ளன. இதன் மூலம் ஊரக மக்கள் முழுநேர மற்றும் பகுதி நேர வேலை வாய்ப்பினை பெறுகிறார்கள்.

**27. குறுங்கடன் என்றால் என்ன ?**

குறுநிதி என்பது குறுகடன்களைக் குறிக்கும். சிறுதொழில் புரிவோருக்கு தேவையான நிதியை வழங்கி அவர்களை வணிகத்தில் முதலீடு செய்ய வைப்பதே ஆகும்.

**28. ஊரக வீட்டுவசதி பிரச்சனைக்கான காரணங்களில் ஏதேனும் இரண்டுகூறு.**

1. குடிநீர்வசதி, 2. நல்ல சுகாதாரவசதி, 3.முறைப்படி கழிவுகளை அப்புறப்படுத்தும் வழிவகைகள்.

**29. ஊரகமின் மயமாக்கல்––வரையறு.**

ஊரக மின் மயமாக்குதல் என்பது ஊரகபகுதிகளுக்கு மின்வசதியை ஏற்படுத்தித் தருவதாகும்.

**30. இந்தியாவில் ஊரக மின்மயமாக்கலின் இரண்டு பாதக காரணிகளை கூறுக.**

1. நிதிப்பற்றாக்குறை 2.மின்திருட்டு

## பகுதி – இ

**31. ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவம் கூறுக ?**

1. ஊரக பகுதியின் முன்னேற்றம் இன்றி நாட்டின் முன்னேற்றம் அமையாது.
2. கிராமங்களை முன்னேற்றுவதன் மூலம், வேலைவாய்ப்பை தேடி நகர்புற பகுதிகளுக்கு இடம்பெயர்வதைதை தடுக்கலாம்..
3. ஊரக மேம்பாட்டின் மூலம் இலாபகரமான வேலை வாய்ப்புகளையும், உணவு உற்பத்தியையும் பெருக்க இயலும்.
4. ஊரக பகுதிகளை முன்னேற்றுவதன் மூலம் இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்த இயலும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**32. ஊரக வளர்ச்சியின்மை காரணங்களை விளக்குக.**

1. **மக்கள் தொடர்புடைய பிரச்சினை** எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்பஅறிவின்மை, நம்பிக்கைகுறைவு.
2. **வேளாண்மை சார்ந்தபிரச்சனைகள்**
 1. உள்ளீடுகள் கிடைக்கப் பெறாமை.
 2. அங்காடிப்படுத்தும் வசதிகள் குறைவு
 3. சிறு நிலங்கள் மற்றும் சிறு சிறு துண்டுகளாக்கப்பட்ட நிலவுடைமைகள்.
4. **பொருளாதரம் சார்ந்த பிரச்சினைகள்** அதிகச் செலவு பிடிக்கும் தொழில் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகளை பயன்படுத்த இயலாமை,

**33. ஊரக வறுமையை நீக்குவதற்குகான வழி முறைகளை கூறுக.**

1. ஊரக வேலையின்மையும், ஊரக வறுமையும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதால் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மூலமாக வறுமையை ஒழிக்கலாம்.
2. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் காலத்திற்கு ஏற்ப நடைமுறைப்படுத்தல்
3. வேலைவாய்ப்பின்றி ஏழை மக்களின் வறுமையை ஒழிக்க முடியாது.

**34. ஊரக வேலையின்மையை நீக்குவதற்கான வழிமுறைகளை கூறுக.**

1. **ஊரக வேலைத்திட்டம்** ஊரக சமுதாய ஆக்கப் பணிகள் செய்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளை திட்டமிட்டு செய்வதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கலாம்.
2. **ஊரக தொழில் மயமாக்கல்** வேலை வாய்ப்பினை உருவாக்க ஊரக பகுதிகளில் புதிய தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும்.
3. **தொழில் நுட்ப கல்வி** பள்ளிகளிலும், கல்லுரிகளிலும், வேலைவாய்ப்பு சார்ந்த படிப்புகளை உருவாக்கி அதன் மூலம் சுயமாக தொழில் துவக்க வழிவகை செய்ய வேண்டும்.

**35. மண்டல ஊரக வங்கி பற்றி குறிப்பு வரைக.**

1. ஊரகப் பொருளாதாரம் மேம்பாடு அடைய வட்டார ஊரக வங்கிகள் பரிந்துரைக்கப்பட்டன
2. மத்திய மாநில அரசுகள் மற்றும் வணிக வங்கிகளின் கூட்டு முயற்சியால் உருவானதே வட்டார ஊரக வங்கிகள் ஆகும்
3. தற்போது இந்தியாவில் 64 வட்டார ஊரக வங்கிகள் உள்ளன.
4. பொருளாதாரத்தில் நலிவடைந்தோருக்கு மட்டுமே RRBs –கடன்வழங்குகிறது.

**36. SHG யின் பண்புகளைக் கூறுக.**

1. சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் பொதுவாக ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்கள்.
2. பெரும்பாலான சுயஉதவிக் குழுக்கள் 10 முதல் 20 பெண் உறுப்பினர்களைக் கொண்டவை.
3. சுய உதவிக் குழுக்கள் தமக்கென்று வடிவமைக்கப்பட்டச் சட்டங்களையும், விதிமுறைகளையும் கொண்டுள்ளன.
4. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்தாலோசித்து முடிவெடுப்பதுடன் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்கின்றனர்.

37. MUDRA வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக.

1. குறுங்கடன் வாங்குபவரையும், பெறுபவரையும் ஒழுங்குபடுத்துதல் மற்றும் குறுங்கடன் வழங்குவதில் நிலைத்ததன்மையை ஏற்படுத்தல்.
2. கடன் வழங்கும் சிறு நிதி நிறுவனங்களுக்கு, மேலும் நிதி மற்றும் கடன் வசதியை ஏற்படுத்தி தருதல்.
3. அனைத்து சிறு நிதி வழங்கும் நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அதன் செயல்பாடுகளை தரம் நிர்ணயம் செய்தல்.
4. வழங்கப்படும் கடன்களுக்கு உத்திரவாதம் வழங்குவதற்காக கடன் உத்திரவாத திட்டம் ஆரம்பித்தல்.

A.Alexis.PG Teacher DBHSS v.Pet
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

பகுதி – ஈ

**பின்வரும் வினாக்களுக்கு ஒருபக்க அளவில் விடையளி.**

**38. ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவாதி.**

1. **வேளாண்மையை சார்ந்திருத்தல்** ஊரக பொருளாதாரம் இயற்கையையும், வேளாண் நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது.
2. **ஊரக மக்களின் வாழ்க்கை முறை:** பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத்தரம் ஏழ்மைநிலையிலும், பரிதாபகரமாகவும் உள்ளது.
3. **மக்கள் தொகை அடர்த்தி.** மக்கள் தொகை அடர்த்தி மிகவும் குறைவாகவும், வீடுகள் கிராமம் முழுக்க பரவிக் காணப்படுகின்றன
4. **வேலைவாய்ப்பு:** பருவகால வேலையின்மை மற்றும் குறைவேலையுடைமை ஆகியன கிராமப்புறங்களில் நிலவுகின்றன.
5. **வறுமை:** 2011– 12 ன் மதிப்பீட்டின் படி ஊரகப்பகுதிகளில் சுமார் 22 கோடி மக்கள் ஏழையாகவும், வறுமைக் கோட்டிற்கு கீழும் வசிக்கின்றனர்.
6. **கடன் சுமைகள்** ஓர் இந்திய உழவன் கடனிலே பிறந்து கடனிலே வாழ்ந்து, கடனிலேயே இறந்து கடனையே விட்டுச் செல்கின்றான். எனவே ,கிராமமக்கள் கடனில் மூழ்கி தற்கொலைக்கு ஆளாகின்றனர்.

**39. ஊரக பொருளாதாரப் பிரச்சனைகளை ஆராய்க.**

1. **மக்கள் தொடர்புடைய பிரச்சினை** எழுத்தறிவின்மை, போதிய தொழில்நுட்ப அறிவின்மை, நம்பிக்கைகுறைவு, ஆகியன ஊரக மக்களின் பிரச்சினைகள்.
2. **வேளாண்மைசார்ந்த பிரச்சனைகள்** 1. நிலங்கள் துண்டாடப்பட்டு சிறிது சிறிதாக இருத்தல் 2. போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இன்மை 3 .பழமையான தொழில்நுட்ப முறைகள்.
3. **உள் கட்டமைப்பு சார்ந்த பிரச்சனைகள்** நீர், மின்சாரம், போக்குவரத்து, தகவல்தொடர்பு, வங்கி மற்றும் காப்பீடு போன்ற வசதிகள் போதுமானதாக இல்லை.
4. **பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகள்.** குறைவான வருமானம், கடன்சுமை ஆகியவை பொருளாதாரம் சார்ந்த பிரச்சினைகளாக உள்ளது.
5. **நிர்வாகம் சார்ந்த பிரச்சனைகள்** குறைந்தகூலி, வரவுசெலவுகளை சரிவர முறையாக பயன்படுத்தாமை ஆகியவை நிர்வாகச் சிக்கல்கள் ஆகும்.

**40. ஊரகக் கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.**

1. **விவசாயிகளின் ஏழ்மைநிலை** நுகர்விற்காகவும், விவசாயத் தொழிலை மேற்கொள்வதற்காகவும் மற்றும் குடும்ப விழாக்களுக்காவும் விவசாயிகளை கடன்பெறத் தூண்டுகிறது
2. **பருவமழை பொய்த்தல்** அடிக்கடி பருவமழை பொய்த்துப் போவதால் வாங்கய கடனை திருப்பிச் செலுத்த இயலாமல் அவதிப்படுகின்றனர்.
3. **வழக்குகள்** நிலங்கள் தொடர்பான வழக்குகள் நீதிமன்றத்தில் இருப்பதால் அதற்காக செலவிட அதிககடன் பெறுகிறார்கள்
4. **அதிக வட்டிவீதம்** உள்ளூரில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் அதிக வட்டி வசூலித்தல் விவசாயிகள் கடனிலேயே மூழ்கும் நிலைஉள்ளது.

LESSON-11

பகுதி – ஆ

**21. சாதகமான பாலின விகிதம் கொண்ட இரண்டு மாவட்டங்களைக் கூறுக. விகிதங்களையும் குறிப்பிடுக**

1.தேனி(900) பெண்கள் 2. தர்மபுரி (946) பெண்கள்

**22. ¦ மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP)வரையறு**

மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு மாநிலத்தின் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும்.

**23. தமிழ்நாட்டுக்கேற்ற நான்கு உணவுப் பயிர்களைக் குறிப்பிடுக**

1. நெல் 2. கம்பு 3. சோளம் 4. நிலக்கடலை 5. சிறு தானியங்கள்



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**24. தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை ?**
1. சென்னை, 2. எண்ணூர் 3. தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம்

**25. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன ?**
சிறப்புமிக்க வழிபாட்டு ஸ்தலங்கள், சரித்திர புகழ்பெற்ற ஸ்தலங்கள், மலைப்பகுதிகள், அணைகள், கட்டிட கலைகள் மற்றும் சிற்பக் கலைகளுக்கு புகழ்பெற்ற ஸ்தலங்கள் போன்ற இடங்களுக்கு சுற்றுலா செல்வது.

**26. தமிழ்நாட்டின் அணுமின் நிலையங்கள் எவை ?**
1. கல்பாக்கம், 2. கூடங்குளம்

**27. குறு நிறுவனங்கள்– வரையறு**
குறு நிறுவனங்கள் என்பது தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**பகுதி – இ**

**28. தமிழ்நாட்டின் கனிம வளங்கள்– குறிப்பு வரைக**
1.டைட்டானியம், லிக்னைட், கிரானைட், பாக்சைட், கிராபைட், லைம்ஸ்டோன் போன்ற சுரங்கத் திட்டங்கள் தமிழகத்தில் உள்ளன.
2. இவற்றில் முன்னோடித் திட்டமாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தை குறிப்பிடலாம் (NLC)
3. இதன் வளர்ச்சியினால் அனல் மின்நிலையம், உரத் தொழிற்சாலை, கார்பன் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருகின்றன.
4. மாலிப்டினம் எனும் இரசாயனத்தாது இந்தியாவிலேயே மதுரை மாவட்டத்தில் உள்ள கரடிக்குட்டம் என்னும் ஊரில் மட்டுமே கிடைக்கிறது

**29. தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை விளக்குக**
1. மாநிலத்தின், ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பாகும்.
2. மாநில மொத்தஉள்நாட்டு உற்பத்தியானது 2016–17 நிதியாண்டில் 207.8 பில்லியன் டாலராகஉள்ளது
3. பிறநாடுகளுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ஒப்பிடும் போது தமிழ்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகமாக உள்ளது.
4. நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உலக அளவில் குவைத் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாக உள்ளது.

**30. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விவரி**
1. தமிழ்நாடு இந்தியாவின் மிகப் பெரிய ஜவுளி உற்பத்தி மையமாகும். தமிழ்நாடு இந்தியாவின் 'நூல் கிண்ணம்' என அழைக்கப்படுகிறது.
2. இந்தியாவின் பொருளாதாரத்தில் ஜவுளித்துறை மிகமுக்கியப் பங்கு வகிக்கிறது.
3. மொத்த ஏற்றுமதி வருவாயில் 35% ஜவுளித் துறையிலிருந்து கிடைக்கிறது.
4. பருத்தி பாலியஸ்டர், கலப்பு நூல், பட்டு நூல் போன்றவை இங்கிருந்து சீனா வங்கதேசம் போன்ற பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.
4. பின்னலாடைகளின் நகரம் என அழைக்கப்படும் திருப்பூர் 3 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பளவில் பின்னலாடைகளை ஏற்றுமதி செய்கிறது

**31. தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் ஏதேனும் இரண்டு உணவுப் பயிர்களின் உற்பத்தித் திறன்களை ஒப்பிடுக**
1. தமிழக அரசு வேளாண் விளை பொருள் உற்பத்திக்கும், உற்பத்தித் திறனுக்கும் முக்கியத்துவம் அளிக்கிறது.
2. தமிழகம் உணவு தானியங்கள் மற்றும் பிற தானியங்களின் உற்பத்தித் திறனில் முதன்மை மாநிலமாக உள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

3. மக்காச்சோளம், கம்பு, நிலக்கடலை, எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகியவற்றில் உற்பத்தியில் முதலிடத்திலும்,நெய், தேங்காய் ஆகியவற்றில் இரண்டாவது இடத்திலும், கரும்பு, சூரியகாந்தி, சோளம் ஆகியவற்றில் மூன்றாவது இடத்திலும் மிளிர்கிறது

**32. சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கான செயல்பாடுகளை விவரி**

1. தமிழ்நாடு ஒரு சிறந்த சுற்றுலா மையமாகத் திகழ்ந்து வருகிறது.
2. தமிழ்நாடு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் புகலிடமாக விளங்குகிறது.
3. தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுத்துறை தமிழ்நாட்டின் சுற்றுலாவை மேம்படுத்துகிறது.
4. இத்துறையின் ஆண்டு சராசரி வளர்ச்சி 16 சதவீதமாக உள்ளது.
5. தோராயமாக 28 இலட்சம் வெளிநாட்டு பயணிகள் மற்றும் 11 கோடி உள்நாட்டுப் பயணிகள் தமிழகத்திற்கு வருகை புரிகின்றனர்.

**34. தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை ?**

1. **புனல் மின்சாரம்** தமிழ்நாட்டில் 20–க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது. குந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமானவையாகும்.

2.**சூரிய சக்தி மின்சாரம்** தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது. தென் தமிழகம் சூரிய மின்சக்தி திட்டங்களைச் செயல்படுத்த உகந்த மண்டலமாகக் கருதப்படுகிறது.

3.**காற்றாலை மின்சாரம்** இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்ட மாநிலமாக உள்ளது. மேலும் காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க திருநெல்வேலி, தூத்துக்குடியின் தெற்குப்பகுதி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன.

**35. சுகாதாரத் துறையில் தமிழ்நாட்டின் செயல் திறனை விளக்குக**

1. தமிழ்நாட்டின் சுகாதாரக் குறியீடானது மூன்றாவது இடத்தில் உள்ளது.
2. தமிழகத்தில் பச்சிளங் குழந்தை இறப்பு வீதம் 14 ஆகும். இது பிற மாநிலங்களைக் காட்டிலும் மிகக்குறைவு.
3. தமிழ்நாட்டு மக்களின் ஆயுட்காலம் 70.6 ஆண்டுகளாக ஆக உள்ளது.
4. தமிழ்நாடு மூன்றடுக்கு உடல்நல அடிப்படைக் கட்டமைப்பைக் கொண்டுள்ளன. அவை மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூகநல மையங்கள் ஆகியனவாகும்.

**பகுதி – ஈ**

**37. மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவரி**

1. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 7.21 கோடி.
2. இந்திய மாநிலங்களில் மக்கள் தொகை அடர்த்தியில் தமிழ்நாடு 12–வது இடத்தில் உள்ளது.
3. நகரமயமாதலின் சராசரி அளவு தமிழகத்தில் 48.4 % ஆக உள்ளது
4. மொத்த மக்கள் தொகையில் 6–சவீதத்தைக் கொண்டுள்ளது தமிழகம்
5. இந்திய அளவில் நகரமக்கள் மொத்த மக்கள் தொகையில் 9.61– சதவீதமாக உள்ளது.
6. சமச்சீர் பாலின விகிதம் என்பது பெண்களின் வாழ்வியல் மேம்பாடு அடைந்திருப்பதைக் குறிக்கிறது.
7. தமிழ்நாட்டின் பாலின விகிதம் 995 ஆகும். பிறமாநிலங்களோடு ஒப்பிடும் போது இந்த விகிதம் மிக அதிகமாகும் .
8. பாலின விகிதத்தில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

**38 தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி**

மின்னாற்றலை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு பிற தென் மாநிலங்களை விட முன்னணியில் உள்ளது.

1. **அணுமின் நிலையங்கள்.** கல்பாக்கம், கூடங்குளம் ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள முக்கிய அணுமின் நிலையங்களாகும்.
2. **அனல்மின் நிலையங்கள்.** தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் வெப்ப ஆற்றலில் அதிக அளவு அத்திப்பட்டு எண்ணூர், மேட்டூர், நெய்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து பெறப்படுகிறது.அனல்மின் உற்பத்தியில், தமிழ்நாடு தேசிய உற்பத்தியில் 34 % க்கும் மேலாக உற்பத்தி செய்து முதலிடம் வகிக்கிறது.
3. **புனல் மின் நிலையங்கள்** தமிழ்நாட்டில் 20–க்கு மேற்பட்ட புனல் மின் நிலையங்கள் உள்ளது. குந்தா, மேட்டூர், மரவகண்டி, பார்சன் வேலி ஆகியன முக்கியமான புனல் மின் நிலையங்கள் ஆகும்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

4. **சூரிய மின் உற்பத்தி** தமிழ்நாடு சூரிய மின் உற்பத்தியில் இந்தியாவின் சிறந்த மாநிலமாக விளங்குகிறது. தென்தமிழகம் சூரிய மின்சக்தி திட்டங்களைச் செயல்படுத்த உகந்த மண்டலமாகக் கருதப்படுகிறது

5. **காற்று வழி மின்சாரம்** இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு காற்று வழி மின்சாரம் தயாரிக்கும் கட்டமைப்பைக் கொண்டமாநிலமாகஉள்ளது. காற்றிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏதுவான இடமாக திருநெல்வேலி, தூத்துக்குடியின் தெற்குப் பகுதி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இடங்கள் உள்ளன.

**39. தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக**

தமிழ்நாடு மிகச் சிறந்த மேம்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதி கொண்டது.

1. **சாலைப் போக்குவரத்து** நாட்டிலுள்ள நகரங்கள் கிராமப்புறங்கள் மற்றும் வேளாண் அங்காடிப் பகுதிகளை இணைக்க கூடியத் தரமான சாலைப் போக்குவரத்தைக் கொண்டுள்ளது. மாநிலத்தில் 28 தேசிய நெடுஞ்சாலைகள் 5036 கி.மீ. தொலைவினை இணைக்கின்றன. தங்க நாற்கரத் திட்டம் முனையமாக நமது மாநிலம் உள்ளது சாலை போக்குவரத்தில் நாட்டிலேயே தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது.
2. **இருப்புப் பாதை போக்குவரத்து** தமிழ்நாட்டில் உள்ள இருப்புப் பாதையின் மொத்தநீளம் 6693 கி.மீ. ஆகும். இதன் மூலம் இந்தியாவின் முக்கிய நகரங்களை இணைக்கின்றது. சென்னையில் மேம்படுத்தப்பட்ட அதி விரைவு மெட்ரோ இரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
3. **ஆகாய போக்குவரத்து.** பெரிய சர்வதேச விமான நிலையமாக சென்னை சிறந்து விளங்குகிறது. கோயம்புத்தூர் மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும் சர்வதேச விமான நிலையங்கள் உள்ளன.
4. **துறைமுகம்.** சென்னை எண்ணூர், தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகியவை தமிழ்நாட்டின் மிகப்பெரிய துறைமுகங்களாகும்.சென்னை துறைமுகம் கன்டெயினர்களைக் கையாளும் திறன் கொண்ட இந்தியாவின் இரண்டாவது முக்கிய செயற்கைத் துறைமுகமாகும்.

## பாடம் 12

**கணித முறையின் பொருளாதார பயன்பாடுகளை விளக்குக.**

1.பொருளியல் சிக்கல்களை மிகவும் சுருக்கமான வடிவில் வழங்கிட கணித முறைகள் துணைபுரிகின்றன.
2.பொருளியல் கருத்துக்களை விளக்கிட கணித முறைகள் உதவுகின்றன.
3. பொருளியல் ஆய்வில் அதிக எண்ணிக்கையிலான மாறிகளை பயன்படுத்த கணித முறைகள் உதவுகின்றன.

**MS Word இன் முக்கிய கூறுகள் யாவை ?**

1.ஆவனத்தை உருவாக்க நகலெடக்க திருத்தியமைக்க முடியும்.
2.சொற்களையும் வாக்கியங்களையும் இடையில் செருகிட மாற்றிட முடியும்.
3.பல ஆவணங்களையும் கோப்புகளையும் ஒன்றாக இணைக்க முடிகிறது.
4.பிழை திருத்தம் செய்யும் வசதி உள்ளது.

**பொருளியல் துறையில் தகவல் தொழில்நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ?**

தகவல் தொழில்நுட்பங்கள் என்பது தகவல்களை விரைவாகவும் துல்லியமாகவும் தொகுக்கக்கூடிய ஒரு உள்கட்டமைப்பாகும்.

**தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் பணிகளின் பயன்கள் பின்வருமாறு.**

| வ.எண் | தகவல் | தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் பணிகள் |
|---|---|---|
| 1 | உருவாக்கம் | தனிப்பட்ட கணினிகள், டிஜிட்டல் கேமரா, ஸ்கேனர், ஸ்மார்ட்போன் |
| 2 | செயலாக்கம் | கால்குலேட்டர், PC , ஸ்மார்ட்போன் |
| 3 | சேமிப்பு | CD, DVD ,பென்டிரைவ், மைக்ரோசிப், கிளவ்டு |
| 4 | காட்சிப்படுத்துதல் | PC, TV,Projector,Smart phone |
| 5 | ஊடக வழி பரிமாற்றம் | இணையம், டெலிகான்பெரன்ஸ் ,மொபைல் தொழில்நுட்பம், வானொலி |
| 6 | தகவல் பரிமாற்றம் | e-mail, அலைபேசி |



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**தகவல் தொழில்நுட்பம் ஐந்து கட்டங்களை கடந்துள்ளது.** அவை
கணிணி, PC ,நுண் செயலி , இணையம், வயர்லெஸ் தொடர்புகள்.
புள்ளி விவரங்களை தொகுத்தல், ஒழுங்குற அமைத்தல், கையாளுதல் ,கணக்கிடுதல் மற்றும் முடிவுகளை காட்சிப்படுத்துதல் ஆகிய கணித புள்ளியியல் கருத்துகள் பொருளியலுக்கு தேவைப்படுகின்றன. தகவல் தொடர்பு தொழில் நுட்பம் வேகமாகவும், அதிகமாகவும் ,துல்லியமாகவும் செய்கிறது.சில குறிப்பிட்ட பணிகளுக்கென சில மென்பொருள்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.
WORD PROCESSOR, SPREAD SHEET, WEB BROWSER முதலியன பொருளியல் ஆய்வுகளுக்கு அடிக்கடி பயன்படும் சில மென்பொருளாகும்.

A.Alexis.PG Teacher DBHSS V.Pet
www.Padasalai.Net

**வாழ்த்துக்களுடன்,**

**எ.அலெக்சிஸ். முதுகலை பொருளியல் ஆசிரியர்,**
**தொன் போஸ்கோ மேனிலைப் பள்ளி,**
**வரதராஜன்பேட்டை. அரியலூர் மாவட்டம். cell.9543776128.**



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

# முதல் இடைத்தேர்வு -2023-24

வகுப்பு 11 **பொருளியல்** மதிப்பெண்கள்:45

காலம்:1.30

**I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **10 x 1 = 10**

1. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை பிரச்சனை
   அ) பற்றாக்குறை ஆ) எண்ணற்ற விருப்பங்கள் இ) வறுமை ஈ) வேலையின்மை
2. ஓர் அலகு உற்பத்தி காரணியை அதிகரிக்கும்போது கிடைக்கும் உற்பத்தி…..
   அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி இ) சராசரி உற்பத்தி ஈ) இவை அனைத்தும்
3. பொருளாதாரத்தின் தந்தை யார்?
   அ) ஆல்பிரட் மார்ஷல் ஆ) ஆடம்ஸ்மித் இ) சாமுவேல்சன் ஈ) இலயனல் ராபின்ஸ்
4. பற்றாக்குறை பொருளாதாரத்தின் ஆசிரியர்…
   அ) ஆடம்ஸ்மித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்
5. நாட்டு வருமானம் நான்கு உற்பத்திக் காரணிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுவது…….
   அ) நுகர்வு ஆ) உற்பத்தி இ) பரிமாற்றம் ஈ) பகிர்வு
6. முரண்பட்டதை தெரிவு செய்க
   அ) அத்தியாவசிய பண்டங்கள் ஆ) வசதி பண்டங்கள் இ) ஆடம்பர பண்டங்கள்
   ஈ) விவசாய பண்டங்கள்
7. தகுவிலை ரூ.280 ஆகவும் உண்மை விலை ரூ.150 ஆகவும் உள்ளது.நுகர்வோர் எச்சம் காண்க.
   அ) 430 ஆ) 200 இ) 130 ஈ) 80
8. மொத்த பயன்பாடு உச்சத்தில் இருக்கும்போது இறுதிநிலை பயன்பாடு……
   அ) எதிர்மறை ஆ) பூஜ்ஜியம் இ) நேர்மறை ஈ) உச்சத்தில்
9. பயன்பாடு என்பது ……. அ) பண்டங்கள் பணிகளுக்கான விருப்பம்
   ஆ) பண்டங்களின் வாங்கும் சக்தி இ) மனித விருப்பங்களின் ஆற்றல்
   ஈ) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஆற்றல்
10. சமநோக்கு வளைகோட்டை முதன்முதலில் தோற்றுவித்தவர்;
   அ) எட்ஜ்வொர்த் ஆ) ஹிக்ஸ் இ) ஆலன் ஈ) கீன்ஸ்

**ii.ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** **5x2=10**

11. பொருளியல் என்றால் என்ன?
12. நுண் பொருளியல் என்றால் என்ன?
13. பண்டங்கள் என்றால் என்ன?
14. விருப்பங்களை வகைப்படுத்துக.
15. நுகர்வோர் நடத்தையின் அடிப்படை அணுகுமுறைகளை குறிப்பிடுக.
16. கிஃபன் பொருள்கள் எவை? அவை ஏன் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?

**iii. ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்** **4x3=15**

17. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?
18. பொருளாதாரத்தைப் பற்றி இலயனல் ராபின்சின் இலக்கணத்தை ஆராய்க?
19. சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை?
20. மனிதவிருப்பத்தின் இயல்புகள் யாவை?
21. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணத்தைத் தருக.
22. பணிகளின் பல்வேறு இயல்புகளை விவரி

**iv.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **2x5=10**

23. பொருளியலைப் பற்றிய பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக. (அல்லது)
   குறைந்து செல் பயன்பாட்டு விதியின் படம் வரைந்து விளக்கம் தருக?
24. தேவை விதியினை விவரமாக எழுதுக? (அல்லது)
   பொருளாதாராத்தின் தன்மைகளை விவாதிக்கவும்.

A.Alexis PG Teacher DBHSS V.Pet
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

வகுப்பு எண்

# காலாண்டுத் தேர்வு–2023–24

வகுப்பு 11 பொருளியல் காலம்:2.30

மதிப்பெண்கள்:90

## Part – I

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20 x 1 = 20

1. பற்றாக்குறை இலக்கணத்தின் ஆசிரியர் யார் ?
அ) ஆடம்ஸ்மித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்

2. தனிக் கருத்திலிருந்து பொதுக்கருத்தை பெறும் முறை
அ) பகுத்தாய்வு முறை ஆ) தொகுத்தாய்வு முறை இ) இயல்புரை முறை ஈ) நெறியுரை முறை

3. பொருளியல் என்ற சொல்லின் பொருள்
அ) நாடுகளின் நிர்வாகம் ஆ) வங்கிகளின் நிர்வாகம் இ) இல்லங்களின் நிர்வாகம் ஈ) இவை அனைத்தும்

4. நுகர்வோர் எச்சம் என்ற கருத்துடன் தொடர்புடையவர்
அ) மார்ஷல் ஆ) ஆடம்ஸ்மித் இ) ராபின்ஸ் ஈ) ரிக்கார்டோ

5. கீழ்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாக கொண்டுள்ளது அ) குறைந்து செல் விளைவு விதி
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி இ) இரண்டும் ஈ) எதுவுமில்லை

6. சமநோக்கு வளைகோடுகள் ........... அ) செங்குத்து கோடுகள் ஆ) படுகிடை கோடுகள்
இ) எதிர்மறை சரிவுடையது ஈ) நேர்மறை சரிவுடையது

7. தேவை நெகிழ்ச்சி என்ற கருத்தை அறிமுகப்படுத்தயவர்
அ) கீன்ஸ் ஆ) மால்தஸ் இ) மார்ஷல் ஈ) நைட்

8. மனிதனால் உருவாக்கப்பட்ட உற்பத்திக்காரணி எது ?
அ) நிலம் ஆ) உழைப்பு இ) மூலதனம் ஈ) தொழில் அமைப்பு

9. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனம் பயன்படுத்துவதற்கான செலவு என்பது
அ) உள்ளுறு செலவு ஆ) வெளியுறு செலவு இ) பொருளாதார செலவு ஈ) இவை அனைத்தும்

10.ஒரு புத்தகம் ரூ.10 வீதம் 40 புத்தகங்களை விற்கிறார் எனில் அவருக்கு கிடைக்கும் மொத்த வருவாய்
அ) 100 ஆ) 200 இ) 300 ஈ) 400

11. விலைத் தலைமை அம்சம் கொண்ட அங்காடி
அ) நிறைவுப்போட்டி ஆ) முற்றுரிமை இ) சில்லோர் முற்றுரிமை ஈ) முற்றுரிமைப்போட்டி

12. நிறைவுப் போட்டி அனுமானிப்பது ....... அ) ஆடம்பர பண்டம் ஆ) வேறுபடுத்தப்பட்ட பண்டம்
இ) ஒத்த தன்மையுடைய பண்டம் ஈ) இவை அனைத்தும்

13. பொருளியலில் வருமானப் பகிர்வு என்பது முக்கியமாக எதனுடன் தொடர்புடையது.
அ) உற்பத்தி காரணிகள் ஆ) வணிகர்கள் இ) பொருளாதார வளர்ச்சி ஈ) பொருளாதார முன்னேற்றம்

14. பகிர்வு கோட்பாடு இவ்வாறு அழைக்கப்படுகிறது .
அ) கூலிக் கோட்பாடு ஆ) காரணி விலைக் கோட்பாடு இ) உற்பத்தி விலை கோட்பாடு ஈ) வட்டிக் கோட்பாடு

15. கீன்சின் வட்டிக் கோட்பாடு இவ்வாறு அழைக்கப்படுகிறது .
அ) துய்ப்பு தவிர்ப்பு கோட்பாடு ஆ) நீர்மை விருப்ப கோட்பாடு இ) கடன்நிதி கோட்பாடு ஈ) ஏஜியோ கோட்பாடு

16. தனி நபர்களுக்கு நாட்டின் செல்வத்தை பகிர்ந்தளிப்பது
அ) செயல் முறைப் பகிர்வு ஆ) தனி நபர் பகிர்வு இ) பண்டங்களின் பகிர்வு ஈ) பணிகளின் பகிர்வு

17. ஜனநாயக சமதர்மத்தை கொண்டுவந்தவர்
அ) ஜவகர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) காரல் மார்க்ஸ் ஈ) மகலநோபிஸ்

18. ஆயிரம் மக்களுக்கு பிறப்பவர் எண்ணிக்கை என்பது அ) குழந்தை இறப்பு வீதம்
ஆ) மகப்பேறு இறப்பு வீதம் இ) இளைஞர் இறப்பு வீதம் ஈ) கச்சா பிறப்பு வீதம்

19. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை.......
அ) மகலநோபிஸ் ஆ) M.S.விஸ்வநாதன் இ) M.S.சுவாமிநாதன் ஈ) M.S.அரங்கநாதன்

20.இந்தியாவில் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் இடம் அ) புதுடெல்லி ஆ) கொல்கத்தா இ) மும்பை ஈ) நெய்வேலி

A.Alexis.PG Teacher DBHSS V.Pet www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30-க்கு கட்டாயம் விடையளி** 7X2=14.

21. நுண் பொருளியல் என்றால் என்ன ? .
22. விலைத்தேவை நெகிழ்ச்சியின் அளவை விவரி ?
23. அளிப்புக் கோடு மேல்நோக்கிச் செல்வதன் காரணம் என்ன ?
24. மாறாச் செலவு என்றால் என்ன ?
25. அங்காடி வரையறு ?
26. விலைபேதம் காட்டும் இரண்டு தன்மைகளை கூறுக
27 நீர்மை விருப்பத்தின் பொருள் யாது ?
28. பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக
29. பகிர்வு என்றால் என்ன ?
30. பகுத்தாய்வின் பொருள்கூறுக ?

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40-க்கு கட்டாயம் விடையளி** 7x3=21

31. பணிகளின் பல்வேறு இயல்புகளை விவரி.
32. தேவை விரிவு மற்றும் தேவைச் சுருக்கத்தை வேறுபடுத்துக.
33. நிலத்தின் சிறப்பியல்புகள் யாவை ?
34. வாய்ப்புச் செலவு என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.
35. நிறுவனம் மற்றும் தொழிற்சாலைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?
36. விற்பனைச் செலவு என்றால் என்ன ? உதாரணத்துடன் விளக்குக.
37. வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக.
38. கிராம சர்வோதயம் – சிறு குறிப்பு வரைக.
39. காரணியின் இறுதிநிலை உற்பத்தியை வரையறு.
40. மொத்தபயன்பாடு இறுதிநிலை பயன்பாடு வேறுபடுத்துக.

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி**

7x5=35

41. பொருளியலின் தன்மை மற்றும் எல்லைகளை விவரி. (அல்லது)
பொருளியலின் பல்வேறு இலக்கணங்களை ஒப்பிட்டு வேறுபடுத்துக.

42. தேவை விதியை வரைபடத்துடன் விவரி. (அல்லது)
சம இறுதிநிலை பயன்பாட்டு விதியை விளக்குக.

43. மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக. (அல்லது)
மொத்தச் செலவு (TC)= 10+Q3, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.

.44. பல்வெறுபட்ட விலையில் ஹசு மற்றும் ஆசு கோடுகளிடையெ உள்ள உறவுகளை விளக்குக ? (அல்லது)
நிறைவுப்போட்டியின் இயல்புகளை விளக்கவும் ?

45. முற்றுரிமை போட்டியில் விலை, பண்டத்தின் அளவு எவ்வாறு நிர்ணயிக்கப்படுகின்றன ? (அல்லது)
ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.

46. கீன்சின் வட்டிக் கோட்பாட்டினை விவரி ? (அல்லது)
இந்தியப் பொருளாதாரத்தின் வலுவான அம்சங்களை விவரி

47. அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்களை விவரி. (அல்லது)
இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி.

R.Alexis PG Teacher DBHSS V.Pet
www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**இரண்டாம் இடைப்பருவத் தேர்வு –2023–24** தேர்வு எண்

வகுப்பு 11 **பொருளியல்** மதிப்பெண்கள்:45

காலம்:1.30

Part - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக. **10 ஒ 1 ஸ்ரீ 10**

1. FDI என்பதன் விரிவாக்கம் ............

அ) வெளிநாட்டு தனியார்; முதலீடு ஆ) வெளிநாட்டு தொகுப்பு முதலீடு

இ) வெளிநாட்டு நேரடி முதலீடு ஈ) வெளிநாட்டு செலாவணி தனியார் முதலீடு

2. புதிய வெளிநாட்டு வர்த்தக கொள்கை ........ ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

அ) 2000 ஆ) 2002 இ) 2010 ஈ) 2015

3. இந்தியாவில் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம் ..........ல் ஏற்படுத்தப்பட்டது.

அ) மும்பை ஆ) சென்னை இ) காண்ட்லா ஈ) கொச்சி

4. ஊரக பொருளாதாரத்தின் முக்கிய இயல்பு............

அ) வேளாண்மை சார்ந்திருத்தல் ஆ) அதிக மக்கள் தொகை அடர்த்தி

இ) குறைந்த அளவு மக்கள் தொகை ஈ) ஏற்றத்தாழ்வு குறைவு

5. தேவைக்கு அதிகமாக வேலையில் ஈடுபடும் மக்களின் தன்மை.............

அ) வேலையின்மை ஆ) மறைமுக வேலையின்மை

இ) முழுவேலை ஈ) சுயவேலை

6. எந்த வருடம் வட்டார ஊரக வங்கி பயன்பாட்டிற்கு வந்தது ?

அ) 1965 ஆ) 1970 இ) 1975 ஈ) 1980

7. சுகாதார குறியீட்டில் தமிழ்நாடு எந்த மாநிலத்திற்கு மேலாக உள்ளது ?

அ) கேரளா ஆ) பஞ்சாப் இ) குஜராத் ஈ) மேற்கூறிய அனைத்தும்

8. பின்னலாடை அதிகம் உற்பத்தி உள்ள இடம் ........

அ) கோயம்புத்தூர் ஆ) திருப்பூர் இ) ஈரோடு ஈ) கரூர்

9. TICL –ன் பகுதி ............

அ) இரப்பர் பூங்கா ஆ) ஜவுளி பூங்கா

இ) உணவு பூங்கா ஈ) உயிரி பூங்கா

www.Padasalai.Net
A.Alexis.PG Teacher DBHSS / Pet



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

10. தென்னக இரயில்வேயின் தலைமையிடம்…………..
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோயம்புத்தூர்

## Part – II

**II ஏதாவது நான்கு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 16–க்கு கட்டாயமாக விடையளி. 4ஒ2ஸ்ரீ8**

11. தனியார்மயமாக்கல் என்றால் என்ன ?
12. சிறப்பு பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் யாது ?
13. ஊரக பொருளாதாரம் வரையறு.
14. மறைமுக வேலையின்மை என்றால் என்ன ?
15. தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்கள் யாவை ?
16. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன ?

## Part-III

**III ஏதாவது நான்கு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 22–க்கு கட்டாயமாக விடையளி. 4x3$12**

17. குளிர்பதன கிடங்கு பற்றி எழுதுக.
18. ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவம் பற்றி கூறுக.
19. தமிழ்நாட்டின் கனிம வளங்கள்–குறிப்பு வரைக.
20. தமிழ்நாட்டின் ஜவுளித்துறை முன்னேற்றம் பற்றி விளக்குக.
21. SHG– யின் பண்புகளைக் கூறுக.
22.GST என்றால் என்ன ? அதன் நன்மைகளை எழுதுக.

ஞயசவ – ஐஏ

IVஅனைத்து வினாக்களுக்கும் விடையளி 3ஒ5ஸ்ரீ15

23. தொழிற் கொள்கை தொடர்பாக இந்திய அரசு மேற்கொண்ட முயற்சிகளை விளக்குக.

(அல்லது)

2015–2020 –ம் ஆண்டிற்கான ஏற்றுமதி இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

24. ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை.விவாதி.

(அல்லது)

மக்கள் தொகையின் தரமான அம்சங்களை விவாதி.

25. ஊரக கடன்களுக்கான காரணங்களை ஆராய்க.

(அல்லது)

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி.

A.Alexis.PG Teacher DBHSS V.Pet www.Padasalai.Net



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

**மாதிரி அரையாண்டுத் தேர்வு–2023–24** **தேர்வு எண்** | | | | | | |

**வகுப்பு :11** **பொருளியல்**

**காலம் :3.00** **மதிப்பெண்கள்:90**

**Part – I**

**I. சரியான விடையை அதன் குறியீட்டுடன் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20X1=20

1. பற்றாக்குறை இலக்கணத்தின் ஆசிரியர் யார் ?
அ) ஆடம்ஸ்மித் ஆ) மார்ஷல் இ) ராபின்ஸ் ஈ) ராபர்ட்சன்

2. பொருளாதாரத்தில் நாம் படிக்கும் அடிப்படை பிரச்சனை
அ) பற்றாக்குறை ஆ) எண்ணற்ற விருப்பங்கள் இ) வறுமை ஈ) வேலையின்மை

3. கீழ்கண்ட விதியை தேவை விதி அடிப்படையாக கொண்டுள்ளது அ) குறைந்து செல் விளைவு விதி
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதி இ) இரண்டும் ஈ) எதுவுமில்லை

4. முதன்மை உற்பத்தி காரணிகள் அ) நிலம் மற்றும் அமைப்பு ஆ) உழைப்பு மற்றும் அமைப்பு
இ) நிலம் மற்றும் உழைப்பு ஈ) மூலதனம் மற்றும் நிலம்

5. ஓர் அலகு உற்பத்தி காரணியை அதிகரிக்கும்போது கிடைக்கும் உற்பத்தி ................
அ) இறுதிநிலை உற்பத்தி ஆ) மொத்த உற்பத்தி இ) சராசரி உற்பத்தி ஈ) இவை அனைத்தும்

6. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனம் பயன்படுத்துவதற்கான செலவு என்பது
அ) உள்ளுறு செலவு ஆ) வெளியுறு செலவு இ) பொருளாதார செலவு ஈ) இவை அனைத்தும்

7. நிறைவுப் போட்டி அனுமானிப்பது ........... அ) ஆடம்பர பண்டம் ஆ) வேறுபடுத்தப்பட்ட பண்டம்
இ) ஒத்த தன்மையுடைய பண்டம் ஈ) இவை அனைத்தும்

8. விலைத் தலைமை அம்சம் கொண்ட அங்காடி
அ) நிறைவுப்போட்டி ஆ) முற்றுரிமை இ) சில்லோர் முற்றுரிமை ஈ) முற்றுரிமைப்போட்டி

9. போலி வாரம் இதனால் தோன்றுகின்றது அ) மனிதன் உருவாக்கிய உபகரணங்கள்
ஆ) நிலத்தின் செழுமை வேறுபாடு இ) நிலத்தின் அமைப்பு ஈ) இவை அனைத்தும்

10. எச்ச உரிமை கூலிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்.
அ) வாக்கர் ஆ) சீனியர் இ) மார்ஷல் ஈ) கீன்ஸ்

11. ஜனநாயக சமதர்மத்தை கொண்டுவந்தவர்.
அ) ஜவகர்லால் நேரு ஆ) மோதிலால் நேரு இ) காரல் மார்க்ஸ் ஈ) மகலநோபிஸ்

12. ஆயிரம் மக்களுக்கு இறப்பவர் எண்ணிக்கை என்பது அ) குழந்தை இறப்பு வீதம்
ஆ) மகப்பேறு இறப்பு வீதம் இ) இளைஞர் இறப்பு வீதம் ஈ) கச்சா இறப்பு வீதம்

13. பத்தாம் ஐந்தாண்டு திட்ட காலம்
அ) 1992–1997 ஆ) 2002–2007 இ) 2002–2017 ஈ) 2007–2012

14. வாழ்க்கைத்தர குறியீட்டெண்ணை உருவாக்கியவர் அ) பிஸ்வாஜித் ஆ) நேரு இ) டி.மோரிஸ் ஈ) சென்

15. இந்தியாவில் முதல் சிறப்பு பொருளாதார மண்டலம்......ல் ஏற்படுத்தப்பட்டது
அ) மும்பை ஆ) சென்னை இ) காண்ட்லா ஈ) கொச்சின்

16. விவசாய உற்பத்தி அங்காடிக் குழு ஒரு ........ஆகும்
அ) ஆலொசனைக் குழு ஆ) சட்டப்பூழு+ா;வமான குழு இ) அ மற்றும் ஆ ஈ) எதுவும் இல்லை

17. பொருளியலில் கணிதத்தை முதன் முதலாக பயன்படுத்தியவர்
அ) ஜியோவானி செவா ஆ) பிஷர் இ) சர் வில்லியம் பெட்டி ஈ) ஆடம்ஸ்மித்

18. இந்தியாவின் பசுமைப் புரட்சியின் தந்தை.......
அ) மகலநோபிஸ் ஆ) M.S.விஸ்வநாதன் இ) M.S.சுவாமிநாதன் ஈ) M.S.அரங்கநாதன்

19. பொருந்தா ஒன்றை கண்டறிக
அ) மாகான அங்காடி ஆ) தேசிய அங்காடி இ) பன்னாட்டு அங்காடி ஈ) நீண்ட கால அங்காடி

20. பொருந்தும் இணையை கண்டறிந்து எழுதுக
அ) TVC/Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு
ஆ) TFC/Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

A.Alexis.PG Teacher.DBHSS. www.Padasalai.Net

இ) TVC+Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு
ஈ) TVC-Q = சராசரி மாறும் செலவுக்கான வாய்ப்பாடு

## Part - II

**II.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 30–க்கு கட்டாயம் விடையளி** 7X2=14

21. பண்டங்களை பணிகளிலிருந்து வேறுபடுத்துக.
22. தேவை விரிவு மற்றும் தேவை சுருக்கத்தை வேறுபடுத்துக.
23. அளிப்புக் கோடு மேல் நோக்கி செல்லக் காரணம் யாது ?
24. அங்காடி வரையறு.
25. பொருளாதார வளர்ச்சியின் பொருள் எழுதுக.
26. பசுமைப் புரட்சியின் பலவீனங்களை பட்டியலிடுக.
27. சிறப்பு பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் யாது ?
28. ஊரக பொருளாதாரம் வரையறு.
29. பாரம்பரிய சுற்றுலா என்பது என்ன ?
30. MS word ன் முக்கிய அம்சங்கள் யாவை ?

## Part-III

**III.ஏதாவது ஏழு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 40–க்கு கட்டாயம் விடையளி** 7x3=21

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை ?
32. மனித விருப்பங்களின் இயல்பை விவரி.
33. தொழில் முனைவோரின் பணிகள் யாவை ?
34. இறுதிநிலை வருவாய் குறிப்பு வரைக.
35. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை சுருக்கமாக விளக்குக.
36. நலப் பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துக்களை கூறுக.
37. PQLI என்றால் என்ன ?
38. உலகமயமாக்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விளக்குக.
39. ஒரு நிறுவனத்தின் மொத்த செலவுச் சார்பு TC= $5+x^2$ ஆகும். $x$ =10 என்ற அளவில் மொத்தச் செலவினைக் காண்க.
40. தமிழ்நாட்டின் கனிம வளங்கள் பற்றி குறிப்பு வரைக.

## Part – IV

**IV.அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7x5=35

41.அ) உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டைக் கொண்டு பொருளாதாரத்தின் அடிப்படை பிரச்சனைகளை விவரி.
(அல்லது)
ஆ) குறைந்து செல் இறுதிநிலை பயன்பாட்டு விதியை வரைபடத்துடன் விவரி.

42.அ) அகச்சிக்கனங்கள் மற்றும் புறச்சிக்கனங்கள் விவரி
(அல்லது)
ஆ) மொத்தச் செலவு (TC)= 10+Q3, Q = 5 எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் கண்டுபிடி.

43.அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக. (அல்லது)
ஆ) ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.

44.அ) காந்தியப் பொருளாதாரக் கருத்துகளை சுருக்கமாக எழுதுக. (அல்லது)
ஆ) ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியப் பொருளாதாரம் பற்றி விவாதிக்க ?

45. அ) 2015–2020 ம் ஆண்டிற்கான ஏற்றுமதி–இறக்குமதி கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக. (அல்லது)
ஆ) ஊரக பொருளாதாரத்தின் பண்புகள் விசித்திரமானவை விவாதி.

46. அ) தமிழ்நாட்டின் பொதுத்துறை போக்குவரத்து முறையினை விளக்குக. (அல்லது)
ஆ) ஊரக வறுமைக்கான காரணங்களை விளக்குக.

47. அ) தமிழ்நாட்டின் பல்வேறு ஆற்றல் வளங்களை விவரி. (அல்லது)
ஆ) பொருளியல் துறையில் தகவல் தொழில் நுட்பங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன ?

**A.Alexis, PGTeacher (Economics) Don Bosco Hr.Sec.School.Varadarajanpet. Ariyalur Dt. Cell: 9543776128**



A.Alexis.PG Teacher DBHSS,V.Pet
www.Padasalai.Net

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com